விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 08 வியாழக்கிழமை (21.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124

## ஊடக சுதந்திரத்தில் 141ஆவதாக இலங்கை

(கொழும்பு)

உலக ஊடக சுதந்திர தரவரிசைப் பட்டியலில், இலங்கை இந்த ஆண்டு 141ஆவது இடத்தில் உள்ளது. ஆர்எஸ்எவ் எனப்படும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பினால் 2016ஆம் ஆண்டுக்கானு உலக ஊடக சுதந்திர தரவரிசைப்பட்டியல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

180 நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள இந்தப் பட்டியலில் முதலிடத்தில் பின்லாந்து இருக்கிறது. ஆறாவது ஆண்டாக பின்லாந்து இந்த இடத்தை தக்கவைத்திருக்

24ஆம் பக்கம் பார்க்க....




# தோல்விக்கு பின்னரும் நானே ஜனாதிபதி!

## “பாதுகாப்பு விடயங்களில் சுயமாக முடிவெடுத்தேன்”



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து தனது பாதுகாப்பு படையினருடன் அலரி மாளிகையில் இருந்து வெளியேறும் நேரத்திலும் தானே நாட்டின் ஜனாதிபதி பதவியில் இருந்ததாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை அப்போது கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தனது பாதுகாப்பு உட்பட்ட விடயங்களை தானே சுயமாகத் தீர்மானித்ததாகவும் கூறியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தர நியமனம்



(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம் நேற்று நண்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வெற்றிடமாகக் காணப்பட்ட பொலிஸ்மா அதிபர் பதவிக்காக ஜனாதிபதியினால் அரசியலமைப்பு சபைக்கு மூன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

அரசியலமைப்பு சபையினால்

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு வரும் வெளிநாட்டவர்கள் இராணுவ அனுமதி பெற வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)

வடபகுதிக்குச் வரும் வெளிநாட்டவர்கள் இராணுவ அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் இதுதொடர்பான அறிவுறுத்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனிதாபிமான உதவிகளை வழங்கும் பொருட்டு ஐரோப்பாவிலிருந்து வருகை தந்த தமிழர் ஒருவர் இதுதொடர்பில் மனித உரிமை செயற்பாட்டாளர்களிடம் முறையிட்டுள்ளதாக தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

## துப்பாக்கிக்கு பணப் பரிசு!

(கொழும்பு)

எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் மே 6 ஆம் திகதி வரை சட்டவிரோத ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்தால், பணம் வழங்கப்படும் என அரசாங்கம் முதல் முறையாக அறிவித்துள்ளது.

இதன்படி விசாரணைகளை நடத்தாது கையளிக்கப்படும் துப்பாக்கிகளுக்கு பணம் வழங்கப்படும்

24ஆம் பக்கம் பார்க்க....

## தாஜுடீன் கொலை சுமித் நேற்று கைது

(கொழும்பு)

ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் கொலை தொடர்பான சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்

23ஆம் பக்கம் பார்க்க....

## கணவனை கொத்திக் கொன்று கோடரியுடன் மனைவி சரண்!

(பனிக்கன்குளம்)

கணவனைக் கொத்திக் கொன்ற மனைவி ஒருவர் கோடரியுடன் பொலிஸில் சரணடைந்த சம்பவம் ஒன்று வவுனியா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா

23ஆம் பக்கம் பார்க்க....



## வித்தியா படுகொலை வழக்கு
## கண்கண்ட சாட்சியத்துக்கு கொலைபற்றி தெரியாது?

### தாமதிக்கும் விசாரணையை நீதவான் கண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வித்தியா படுகொலை வழக்கில குற்றப்புலனாய்வு துறையின் விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை என சுட்டிக்காட்டியுள்ள ஊர்காவற்றுறை நீதவான் எம்.எல் ரியால், குறித்த வழக்கின் மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ளும் நிறுவனம் அடுத்த வழக்கு தவணையில் அறிக்கையுடன் மன்றில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

மேலும் ஆஜராக தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்க கூடவும் மன்று தயங்காது

24ஆம் பக்கம் பார்க்க....

## பலரை கொலை செய்யும் சதியுடன் பாடசாலை மாணவர்களிடம் ஆயுதங்கள்!

### 9 பேர் கைது; மூவருக்கு பொலிஸ் வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

பலரை கொலை செய்யும் நோககுடன் பாரிய சதித்திட்டத்தை மேற்கொண்டிருந்த 12 பாடசாலை மாணவர்களில் 9 பேர் பொலிஸாரினால் அதிரடியாக கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 3 பேரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

யாழ்.கொக்குவில் கேணியடிப் பகுதியில் வைத்து பலரை வெட்டி சாய்க்க முற்பட்ட மாணவர்களில் 9 பேரை நேற்று முன்தினம் பொலிஸார் அதிரடியாக துரத்தி துரத்தி கைது செய்துள்ளனர்.

நேற்றைய தினம் இவர்களை

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தாயை கூண்டில் அடைத்ததாக முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா சாந்தசோலை கிராமத்தில் 95 வயதான பெற்றதாயை மகனொருவர் கூட்டில் அடைத்து வைத்துள்ளதாக வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா சாந்தசோலைக் கிராமத்தில் வசித்துவரும் மகன் ஒருவர் தனது தாயை 5 வருடங்களாக கூட்டில் அடைத்து வைத்துள்ளதாக பொதுமகன் ஒருவரால் வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடொன்று செய்யப்பட்டது.

இவ் விடயம் தொடர்பாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தாயை மீட்டதுடன் அவரை வவுனியா பொதுவைத்திய சாலையில் அனுமதித்தனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய மகனிடம் பொலிஸார் விசாரணை செய்த போது எனது தாயை நான் கொடுமைப்படுத்தவில்லை அவரை நான் 5 வருடங்களாக நல்லமுறையில் பராமரித்து வருகிறேன் வேண்டுமென்றே வவுனியா பொலிஸாரிடம் தவறான முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (செ-281)

A9 வீதி, நுணாவில் சந்தியில் பருத்தித்துறை வீதி மட்டுவில் தெற்கு, துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 27 பரப்பு காணி பிரித்து (2,3,7,10) கொடுக்கப்படும். தென்னை, மா வைப்பதற்கும் வீட்டுத்திட்டத்திற்கும் ஏற்றது.

0778730129

(4257)

அச்சக பணிநிலை வேண்டுகை

கம்பியூட்டர் தெரிந்தவர்கள்
புத்தகம் கட்டுபவர்கள்
அச்சியந்திரம் இயக்குபவர்கள்

குறிப்பு : பழக விரும்புபவர்களும் நேரில் வரவும்

ஷாம்பவி பதிப்பகம்
276 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 077 616 1125

(4256)

# முல்லைத்தீவு கரைத்துறைப்பற்றில்

# 15 வயது பாடசாலை மாணவனை காணவில்லையென முறைப்பாடு

(தண்ணீரூற்று)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள தீர்த்தக்கரை சிலாவத்தையைச் சேர்ந்த முத்துவேல் சுதர்சன் (வயது 15) என்ற பாடசாலை மாணவனை நேற்று முன்தினத்திலிருந்து காணவில்லை யென பெற்றோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலும் சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு பிரிவிலும் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

பிரஸ்தாப மாணவன் நேற்று முன்தினம் காலை 9.00 மணியிலிருந்து நேற்று வரை வீடுவந்து சேரவில்லையென பெற்றோர் முறைப்பாட்டில் பதிவுசெய்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்வதற்காக காலை 9 மணிக்கு பெற்றோரிடம் கூறிவிட்டு சென்ற சிறுவன் மாலையில் வீடு திரும்பாமையால், பெற்றோர், உறவினர்கள் பிரஸ்தாப சிறுவனை தேடிச் சென்றுள்ளனர்.

இந் நிலையில் சிறுவன் சென்ற இடத்தை அறிய முடியாது தவித்த உறவினர்கள், முல்லைத்தீவு தனியார் பேருந்து நிலையத்தில் கடமையாற்றுகின்ற நேரப்பதிவாளரிடம் பிரஸ்தாப சிறுவன் தொடர்பில் வினவினர்.

அதற்கு அவர், குறித்த சிறுவனையும் அவருடன் இன்னொரு இளைஞரையும் கண்டதாகவும் இவர்கள் முல்லைத்தீவில் இருந்து கொக்குளாய் பேருந்து எத்தனை மணிக்கு புறப்படும் எனவும், முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்கு பேருந்து எத்தனை மணிக்கு புறப்படும் எனவும் விசாரித்ததாக கூறினார்.

இதனையடுத்து சந்தேகம் கொண்ட பெற்றோர் மற்றும் உறவினர் நேற்று காலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்தனர். அதன்பின்னர் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் இயங்கும் சிறுவர் நன்னடத்தை பாதுகாப்புப் பிரிவிலும் முறைப்பாடொன்றை பதிவு செய்தனர்.



பிரஸ்தாப சிறுவன் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 07739 95778 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது 077977 6867 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-2,295)

பதவி வெற்றிடம்


- கணனி பக்க வடிமைப்பாளர்கள்
  (அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் ஆண்கள், இரவுக் கடமை)
- அலுவலகச் செய்தியாளர்கள்
  (பயிலுநர்கள் ஆண்கள், பகல் இரவுக் கடமை)
- இயந்திர இயக்குநர்கள்
  (பயிலுநர் ஆண்கள், இரவுக் கடமை)

குறிப்பு:- யாழ்.நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 24.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

- பொதுமுகாமையாளர்

## முத்துமாரி அம்மன் துணை



# வல்வையின் இந்திரவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் நாளையதினம் 22.04.2016 வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடத்தப்படவுள்ளது

# இந்திர விழா

- 3 கிலோ மீற்றர் தூரத்திற்கு வீதிச்சோடனைகள்
- வானுயர தெய்வ உருவங்கள் (போட்டிக்கோ)
- அதி உச்ச மின்னலங்காரங்களுடன் மின்னொளிகள்
- புகைக்கூடுகள் வான்நோக்கி பறக்கவிடுதல்
- சம நேரத்தில் 10 மேடைகளில் கலை நிகழ்வுகள்
- இன்னும் பல கண்கவர் காட்சிகள் / கலை அம்சங்கள்

(4255)

என்பன நடைபெறவுள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

முக்கிய குறிப்பு :- 3 பிரதான வீதிகளிலும் சைக்கிள் உட்பட வாகன பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வண்ணம் :
வல்வை மக்கள் சார்பில்

வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக்குழு

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் குகதாஸ்

### (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)



பிறப்பு : 11.05.1948 இறப்பு : 19.04.2016

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குகதாஸ் 19.04.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் யோகம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் மனோன்மணியின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (பதிவு வைத்திய உத்தியோகத்தர் பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை) அன்புக் கணவரும், தர்சினி (லண்டன்), லர்சினி (சுவிஸ்), தர்சன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீகுமார் (லண்டன்), சிவன் (சுவிஸ்), லாவண்யா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவீனா (லண்டன்), ஷாண் (லண்டன்), கீர்த்திகன் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.04.2016 இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாத்தாவளை வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(C-4392)

தகவல்:
குடும்பத்தினர்.

## 135 அடி உயரமான புத்தர் சிலையை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்



தெற்காசியாவின் மிக உயரமான புத்தர் சிலையை, மத்துகமவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை மறுதினம் 23 ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கவுள்ளார். மத்துகமவில் உள்ள பட்டமுலல கந்த அனைத்து லக பௌத்த நிலையத்தில், அமைக்கப்பட்டுள்ள இந்தப் புத்தர் சிலை, 135 அடி உயரமானது. சுமார் 90 மில்லியன் ரூபா செலவில், மத்துகம தொகுதி ஐ.தே.க. அமைப்பாளர், ஜெகத் பின்னகொட விதானவினால் இந்தப் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அநுராதபுரவில் உள்ள பழமை வாய்ந்த அவுகண புத்தர் சிலையைப் போன்று இந்த புத்தர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த புத்தர் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள வண. மாதுளுவாவே சோபித தேரரின் சிலையையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். (இ-5)

# தீவிரவாத முறியடிப்புச் சட்டம் உருவாக்க ஐ.நாவும் உதவும்

(கொழும்பு)

அனைத்துலக நடைமுறைகளுக்கும், ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களுக்கும் அமைய பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக, விரிவான தீவிரவாத முறியடிப்பு சட்டம் ஒன்றை இலங்கை கொண்டுவரவுள்ளது.

இதற்காக, இலங்கைக்கு உதவுவதாக ஐ.நாவின் தீவிரவாத முறியடிப்பு குழுவின் நிறைவேற்றுப் பணியகம் வாக்குறுதி அளித்துள்ளது.

நியூயோர்க்கில் கடந்த திங்கட்கிழமை இலங்கையின் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, ஐ.நாவின் தீவிரவாத முறியடிப்பு குழுவின் நிறைவேற்றுப் பணியகத்தின், நிறைவேற்றுப் பணிப்பாளர், ஜீன் போல் லபோட்டைச் சந்தித்த போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது உலகளாவிய ரீதியில் தலைதூக்கியுள்ள ஐ.எஸ் பயங்கரவாதம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் பயங்கரவாத குழுக்களின் அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு தொழில்நுட்ப ரீதியான உதவிகளை ஐ.நா வழங்கும் எனவும், ஜனநாயக வலுவூட்டல் செயற்பாடுகளுக்கு ஐ.நா பூரண ஆதரவினை வழங்கும் எனவும் நிறைவேற்று பணிப்பாளர் ஜீன் போல் லபோட் தெரிவித்தார். (இ-5)

# நாட்டிற்குள் சமஷ்டியை ஏற்படுத்த மக்கள் ஆணை கிடைக்கவில்லை

## ஜாதிக ஹெல உறுமய எதிர்ப்பு

(கொழும்பு)

**நாட்டிற்குள் சமஷ்டி நிர்வாகத்தை ஏற்படுத்த தற்போதைய அரசாங்கத்திற்கு மக்களின் ஆணை கிடைக்கவில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் ஓமல்பே சோபித தேரர் இதனை கூறியுள்ளார். சமஷ்டி நிர்வாகத்தை நாட்டிற்குள் ஏற்படுத்த தற்போதைய அரசாங்கத்தின கீழ் சந்தர்ப்பம் கிடைக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருந்தார்.

கிடைத்துள்ள பொன்னான சந்தர்ப்பத்தை தமது மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தாது, மீண்டும் சிக்கலை நோக்கி செல்லும் நடவடிக்கைகளில் இரா.சம்பந்தன் போன்ற தமிழ் அரசியல் வாதிகள் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது அரசியல் இருப்புக்காகவே தமிழ் அரசியல் வாதிகள இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனவும் ஓமல்பே சோபித தேரர் மேலும்தெரிவித்துள்ளார். (இ-5)

## சுயாதீன ஒளிபரப்பு அதிகாரசபை விரைவில் உருவாக்கப்படும்

### பிரதி ஊடக அமைச்சர்

(கொழும்பு)

இலத்திரனியல் ஊடகங்களுக்கான சுயாதீன ஒளிபரப்பு அதிகாரசபையொன்றை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி ஊடக அமைச்சர் கருணாரட்ன பரணவிதாரன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் ஏற்ற வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கும் இந்த புதிய அதிகார சபைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப்பற்றி யாரேனும் கேள்வி கேட்கும் சந்தர்ப்பம் நடைமுறையில் இல்லை. ஆனால் பத்திரிகைக்கு இந்த சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாகவே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரதி ஊடக அமைச்சர் கூறினார்.

ஊடகங்களின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாகவும், அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

மேலும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது டிஜிற்றல் முறையில் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி ஊடக அமைச்சர் கருணாரட்ன பரணவிதாரன தெரிவித்தார். (இ-5)

# எரிபொருள் விநியோகப் பதிவேடுகளை சமர்ப்பிக்க் ராணுவ தளபதிக்கு உத்தரவு

மின்னேரியா இராணுவ முகாமின் எரிபொருள் விநியோகம் தொடர்பான பதிவேடுகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சமர்ப்பிக்குமாறு, இலங்கை இராணுவத தளபதிக்கு ஹோமாகம பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் ஹோமாகம நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மின்னேரியா இராணுவ முகாமில் இருந்து 2010 ஜனவரி 25 ஆம் திகதி, சந்தேக நபர்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டது தொடர்பான பதிவேடுகளை, சமர்ப்பிக்குமாறு இலங்கை இராணுவத் தளபதிக்கு உத்தரவிடுமாறு, குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, எரிபொருள் விநியோகம் தொடர்பான பதிவேடுகளைச் சமர்ப்பிக்க இலங்கை இராணுவத் தளபதிக்கு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சந்தேக நபர்கள் ஒன்பது பேரையும், எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககவும் உத்தரவிட்டார். (இ-5)

## ஆந்திராவில் வெயிலுக்கு ஒரே நாளில் 34 பேர் பலி

இந்தியாவின் ஆந்திர, தெலுங்கானா மாநிலங்களில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல மாவட்டங்களில் 100 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்துகிறது.

இதனால்மக்கள்வெளியே வரவே அஞ்சுகிறார்கள். தெலுங்கானாவில் வெயில் கொடுமையால் பாடசாலை கல்லூரிகளுக்கு முன்கூட்டியே விடுமுறை அளிக்கப்பட்டது. தொழிற்சாலையில் மதியம் தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 34 பேர் பலியானார்கள். சித்தூரில் 12 பேர், கடப்பாவில் 7 பேர், அனந்தபுரத்தில் 6 பேர், பிரகாசத்தில் 3 பேர், ருசாகுளத்தில் 4 பேர், விஜய நகரில் ஒருவர் என மொத்தம் 34 பேர் உயிரிழந்தனர். (இ-5)

# இ.போ.ச.-தனியார் இணைந்த அட்டவணை மே மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும்

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இலங்கை போக்குவரத்து துறையினருக்கும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையிலான இணைந்த நேர அட்டவணை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படவுள்ளதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வடமாகாண போக்குவரத்து உயர மட்டக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண மக்களின் போக்குவரத்தை சிறந்ததும் பாதுகாப்பானதுமாக வழங்குவதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வடக்கு மாகாண இலங்கை போக்குவரத்து துறையினருக்கும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையிலான இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் செயற்பாடுகள் நடைபெற்றன.

அந்த வகையில் விசேட போக்குவரத்துக் குழுவினர் இணைந்து கேட்டுக் கொண்ட ஒரு சில வேண்டுகோள்களுக்கு இணங்க நேர அட்டவணையில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டு இரு தரப்பினரதும் ஒப்புதலுடன் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி அமுல்படுத்தப்படவுள்ளது.

குறித்த நேர அட்டவணை அமுல்படுத்தியதன் பின்னர் இந் நேர அட்டவணையின் ஒழுங்குகளைப் பின்பற்றாத பேருந்துகளின் நடத்துநர்கள், சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அனைத்து வகையான போட்டியிலும் கண்டிப்பாக இடம்பிடிப்பேன்

## முரளி விஜய் நம்பிக்கை




இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தொடக்க வீரர் முரளி விஜய், ஒருநாள், இருபது-20 அணியில் கண்டிப்பாக இடம் பிடிப்பேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், மனநிலை அடிப்படையிலும் ஆட்டத்திறனிலும் நல்ல நிலையில் உள்ளேன்.

கண்டிப்பாக எனக்கு (குறுகிய ஓவர் போட்டிகளில்) வாய்ப்பு கிடைக்கும். இதுவரை எனக்கு கிடைத்த வாய்ப்புகளை நல்ல விதமாக பயன்படுத்திக் கொண்டுள்ளேன்.

தற்போதைக்கு என்னுடைய முழு கவனமும் பஞ்சாப் அணிக்காக சிறப்பாக ஆட வேண்டும் என்பதுதான் என்று தெரிவித்துள்ளார்.

தற்போது நடந்து வரும் ஐ.பி.எல. தொடரில் முரளி விஜய் தான் விளையாடிய நான்கு போட்டிகளில் முறையே 42, 53, 1 மற்றும் 26 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

ஷிகர் தவான் தொடர்ந்து சொதப்பி வரும் நிலையில் ஒரு நாள், இருபது-20 அணியில் தவான் இடத்தை முரளி விஜய், காம்பீர் ஆகியோர் பிடிக்க வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது. (க)

# குழந்தை பிறந்ததையொட்டி தாயகம் திரும்பினார் கெயில்




ஐ.பி.எல். போட்டியில் பெங்களூரு அணியில் இடம்பெற்றிருந்த கிறிஸ் கெய்லுக்கு குழந்தை பிறந்துள்ள காரணத்தால் அவர் தனது சொந்த நாட்டிற்கு திரும்பியுள்ளார்.

பெங்களூரு அணி, 2 ஆட்டங்களில் விளையாடி ஒன்றில் வெற்றியும் (ஐதராபாத்துக்கு எதிராக), ஒன்றில் தோல்வியும் (டெல்லிக்கு எதிராக) கண்டுள்ளது.

இந்நிலையில், இந்த அணியில் இடம்பெற்றிருந்த கெய்லின் மனைவி நடாஷா பெரிட்ஜிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. இதனால் கெய்ல் அவசரமாக தாயகம் திரும்பி விட்டார். கெய்ல்-நடாஷா தம்பதக்கு இது முதல் குழந்தையாகும்.

கெய்ல் இல்லாத நிலையில் அணித்தலைவர் ஹோலி, டி வில்லியர்ஸ், ஷேன் வோட்சன் ஆகியோரைத்தான் .அந்த அணி மலை போல் நம்பி இருக்கிறது. கெய்லுக்கு பதிலாக டிராவிஸ் ஹெட் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது. (க)

# பொலார்ட், ரோகித் சர்மா அதிரடி மும்பை அணி சிறப்பான வெற்றி

பொலார்ட்டின் அதிரடியில் பெங்களூருக்கு எதிரான போட்டியில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ், விராட் கோலி தலைமையிலான ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி அணித்தலைவர் முதலில் பந்து வீச முடிவு செய்தார்.

நேற்றைய போட்டியில் விளையாடும் பெங்களூர் அணியில் மொத்தம் 5 மாற்றம் செய்யப்பட்டது. குழந்தை பிறந்துள்ளதால் கிறிஸ் கெய்ல் நாடு திரும்பியுள்ளார். இதனால் அவருக்கு பதிலாக டிராவிஸ் ஹெட் சேர்க்கப்பட்டுள்ளார். டேவிட் விஸ்க்கு பதிலாக கேன் ரிச்சர்ட்சனும், பர்வேஸ் ரசூலுக்கு பதிலாக ஸ்டூவர்ட் பின்னியும், ஸ்பின்னர் சாஹலுக்கு பதிலாக இக்பால் அப்துல்லாவும், ஸ்ரீநாத் அரவிந்த்துக்குப் பதிலாக வருண் ஆரோனும் சேர்க்கப்பட்டனர். மும்பை அணியில் மார்ட்டின் கப்திலுக்கு பதிலாக பொலார்ட் சேர்க்கப்பட்டார்.


பெங்களூர் அணியில் கே.ராகுலும் விராட் கோலியும் தொடக்க ஆட்டகாரர்களாக களமிறங்கினார்கள். அதிரடியாக ஆடிய ராகுல் 14 பந்துகளில் 23 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இதனை அடுத்து விராட் கோலியும், டி வில்லியர்சும் ஜோடி சேர்ந்தார்கள். மும்பை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசியதால் இந்த ஜோடியால் வேகமாக ரன் குவிக்க முடியவில்லை.

குணால் பாண்டியா 11-வது ஓவரில் விராட் கோலியையும் (33), டி வில்லியர்சையும்(29) வீழ்த்தியதால் பெங்களூர் அணி நெருக்கடிக்கு உள்ளாகியது. ஆனால் அதன் பிறகு களமிறங்கிய அறிமுக வீரர் டிராவிஸ் ஹெட்டும், ஷர்பிராஷ் கானும் நல்ல பாட்னர்சிப் அமைத்து ரன் குவித்தார்கள்.

அதிரடியாக ஆடிய டிராவிஸ் ஹெட் 24 பந்துகளில் 37 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

அதே போல் ஷர்பிராஷ் கானும் தன் பங்குக்கு 18 பந்துகளில் 28 ரன்கள் எடுத்தார். இதனால் 20 ஓவர் முடிவில் பெங்களூர் அணி 7 விக்கெட்களை இழந்து 170 ரன்கள் எடுத்தது. மும்பை தரப்பில் பும்ரா 3 விக்கெட்களை வீழ்த்தினார்.



இதையடுத்து 171 ரன்கள் என்ற இலக்குடன் விளையாடிய மும்பை அணி 18 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைநதது. துடுப்பாட்டத்தில் ரோகித் சர்மா 62 ஓட்டங்களையும் பொலார்ட் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர். போட்டியின் ஆட்டநாயகனாக ரோகித் சர்மா தெரிவானார். (க)

# தமிழ்நாட்டிலிருந்து 20 அகதிகள் 26ஆம் திகதி இலங்கை வருகின்றனர்

## மீள்குடியேற்ற அமைச்சு தகவல்

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் இருபது இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டிலிருந்து எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

இவர்கள் சென்னையிலிருந்து மிஹின்லங்கா விமானசேவை (MJ 130) இனூடாக மு.ப. 11.05 மணியளவில் வருகைதரவுள்ளனர்.

இவ் அகதிகள் 20 பேரில் 10 ஆண்களும் 10 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காகவருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந் தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும்.

அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும், உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

2011-ம் ஆண்டிலிருந்து இது வரை 4691 இலங்கைத் தமிழ் அகதிகள் (1,704 குடும்பங்கள்) தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும் இந்தியாவில் 64 ஆயிரம் பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர்.

முழுவதுமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. (செ-12)

# பகல் - இரவு டெஸ்ட் போட்டிக்கு தென்னாபிரிக்க வீரர்கள் எதிர்ப்பு



தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியின் 2016-17ஆம் ஆண்டுக்கான அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தின் போது ஒரு டெஸ்ட் போட்டியை பகல் - இரவாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான போட்டி அட்டவணை இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் பகல் - இரவு டெஸ்ட் போட்டிக்கு தென்னாபிரிக்க வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் எங்களது வீரர்களுக்கு இரவில் இளஞ்சிவப்பு நிறபந்தை பயன்படுத்தி விளையாடியதில் போதிய அனுபவம் இல்லை.

இத்தகைய சூழலில் ஆடுவது எங்களது வீரர்களுக்கு சாதகமாக இருக்காது.

இதனால் தான் அவர்கள் பகல்-இரவு டெஸ்ட் கிரிக்கெட் ஆடுவதற்கு தயங்குகிறார்கள் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்களின்சங்க தலைமை நிர்வாகி டோனி ஐரிஷ் கூறியுள்ளார். (க)

தரம்-5 மாணவர்களுக்கான

## புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-07

பகுதி-I

தமிழ்க் கல்விக் கழகம்

விடைகள்

(20.04.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 16) | 3 | 30) | 1 | 43) | 3 |
| 02) | 2 | 17) | 1 | 31) | 3 | 44) | 3 |
| 03) | 3 | 18) | 2 | 32) | 2 | 45) | 2 |
| 04) | 2 | 19) | 3 | 33) | 2 | 46) | 1 |
| 05) | 1 | 20) | 2 | 34) | 2 | 47) | 2 |
| 06) | 2 | 21) | 2 | 35) | 2 | 48) | 1 |
| 07) | 3 | 22) | 1 | 36) | 2 | 49) | 3 |
| 08) | 3 | 23) | 3 | 37) | 3 | 50) | 2 |
| 09) | 2 | 24) | கல்வி/OPEN | 38) | 2 | 51) | 2 |
| 10) | 1 | 25) | பாடசாலை | 39) | 1 | 52) | 1 |
| 11) | 3 | 26) | 2 | 40) | 1 | 53) | 3 |
| 12) | 3 | 27) | 3 | 41) | 2 | 54) | 2 |
| 13) | 3 | 28) | 1 | 42) | 1 | 55) | 2 |
| 14) | 2 | 29) | 4 | 43) | ரூ.20 | 56) | 2 |
| 15) | 2 | | | | | 57) | 1 |

# மின்னல் தாக்கியதில் வீடொன்று தீக்கிரை!

அவிஸாவல-ஹேவாயின்ன பிரதேசத்தில் உள்ள வீடொன்று மின்னல் தாக்கத் திற்கு உள்ளாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள் ளதாக அவிஸாவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டில் உள்ள மின் இணைப்பில் மின்னல் தாக்கியதைத் தொடர்ந்து வீடு தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனையடுத்து அவிஸாவல பொலி ஸாரும், பிரதேச வாசிகளும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந் துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த சம்பவத்தி னால் எவ்வித உயிராபத்துக் களும் ஏற்படவில்லை என் றும், ஆனால் வீட்டிலிருந்த சொத்துக்களுக்கு சேதம் ஏற் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# இந்தியாவின் திருமங்கலத்தில் இலங்கை அகதி கைதானார்

(கொழும்பு)

இந்தியாவின் திருமங்க லம் பிரதேசத்தில் இலங்கை அகதி ஒருவர் கைது செய்யப்ப ட்டுள்ளார்.

சிறுமி ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்த முயற்சித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

யாரும் இல்லாத நேரத்தில் சிறுமியின் வீட்டுக்குள் புகுந்து பாலியல் ரீதியாக துன்புறுத்த முயற்சித்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

தப்பிச் சென்ற சிறுமி இது குறித்து தாயாரிடம் தெரிவிதது அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் அடிப்படையில் அஸ்டின்பட்டி பொலிஸார் இலங்கை அகதியை கைது செய்துள்ளனர்.

(இ-5)


## வேலைவாய்ப்பு

லைடன் புடைவை நிலையத்திற்கு புடைவை விற்பனையில் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

பழக விரும்புபவர்களும் விரும்பத்தக் கது. நேரில் சமூகம் தரவும்.

**லைடன் புடைவை நிலையம்,**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-4387)


# காணிக்கட்டமைப்பு இலங்கையிலில்லை

(கொழும்பு)

இலங்கையில் காணிகள் தொடர்பிலான தரவுக் கட்ட மைப்பு ஒன்று இதுவரையில் உருவாக்கப்படவில்லை என காணி ஆணையாளர் நாய கம் ஆர்.பி. ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

கொழும்பு மாவட்டச் செய லகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் மிகவும் அவசிய மானது. நாட்டில் காணி பற் றிய துல்லியமான விபரங்கள் காணப்படாமை நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய தாக் கத்தை ஏற்படுத்தும்.

எனவே காணிகள் தொட ர்பிலான தரவுத் தளமொ ன்றை அமைக்க வேண் டியது அவசியமானது.

எனினும் காணிகள் பற் றிய தகவல்களை திரட்டி தரவுத் தளமொன்றை உரு வாக்கும் முயற்சிகளுக்கு பல்வேறு வழிகளில் இடை யூறு ஏற்படுகின்றது.

சட்டம், அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மை போன்ற காரணிகளினால் இந்த முய ற்சியை முன்னெடுக்க முடிவ தில்லை.

இந்த ஆண்டில் காணி பற்றிய விரபங்களை கொண்ட தரவுத் தளமொன்றை அமை க்கும் நோக்கில் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது இலங்கையின் பத்து இலட்சம் காணித்துண் டுகள் பற்றிய விபரங் கள் உள்ளடக்கப்பட்டுள் ளன.

காணி தரவு வங்கி யொன்றை உருவாக்க திட்ட மிட்டுள்ளோம் என ஆர்.பீ. ராஜபக்ஷ மேலும் தெரிவித் துள்ளார். (இ-5)


## மீண்டும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு



(10.07.2016 வரை)
உங்கள் ஆலய திருவிழாக்களில் அழைத்து மகிழுங்கள்

தொடர்பு-வில்லிசை சக்கரவர்த்தி
**கலைமாமணி Dr.S.S.குருஜீ**
T.P:-0757428011, 0767256024
**நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.**

(3928)


## இராசி பலன்

21.04.2016
(சித்திரை 08, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 8.57 மணிவரை
சித்திரை முழுவதும்
சுபநேரம் 7.31-9.01 மணிவரை
இராகுகாலம் 1.31-3.01 மணிவரை
சித்திராப் பௌர்ணமி விரதம்
சித்திர குப்த விரதம்
சித்திரைச் சித்திரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி<br>புத | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி<br>மாலை 6.17 இற்கு<br>துலா-சந் | | |
| | | | குரு<br>ராகு |
| | சனி<br>செவ் | | சந் |

**மேடம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கடுமை யான எதிர்ப்புகள் கூட திடீ ரென சாதகமாகி விடும், தொழில் நலனில் அதிக அக் கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** வியாபார நலனில் அக்கறை காட்டுவீர்கள், குலதெய்வ வழி பாட்டில் ஆர்வம் கூடும், புண் ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மிதுனம்:** சுபகாரியங்களில் ஆர்வம் காட்டு வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்துகொள் வர், பயணங்களால் பலனுண்டு, ரோக பயமுண்டு.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படு வீர்கள், முயற்சிகளில் முன்னேற் றமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் களின் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்தகாரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** வழிபாடுகளில் ஆர்வம் காட்டு வீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு கள் இடம்பெறலாம், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**துலாம்:** எடுத்த செயற்பாடுகளில் தாம தங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், ஆதா யமில்லாத அலைச்சல்கள் ஏற் படும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** செயற்பாடுகளில் முன்னேற் றம் காண்பீர்கள், உறவினர்க ளின் சந்திப்பால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுக முண்டு.

**தனுசு:** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகை யில் அமையும், மனம் மகிழும் வகையில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, தந்தை வழி உற வினர்களால் அனுகூலமுண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புதிய முயற்சிகளை தாமதித் துச் செய்வது நல்லது, செலவு கள் அதிகமாகும்.

**மீனம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன் னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.



தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொங்கல் நிகழ்வும் கைவிசேடம் வழங்குதல் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் என்பன நடைபெற்றன. இதில் யாழ். மாவட்டச்செயலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# வடமராட்சி வலய ஆசிரிய மாநாடு

ஆசிரியர்களுக்கு தொழில் சார் ஊக்கத்தினை வழங் குவதற்காகவும்அவர்களின்வாண்மையை விருத்திசெய்துகொள்வதற்காகவும் கற்பித்தல் சார் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் உத்வேகத்தை வழங் குவதற்கும் என வடமராட்சிக் கல்விவலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆசிரியர் மா நாடு எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் யா/ நெல்லியடி மத்திய கல்லூரியில் நடை பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இவ் ஆசிரியர் மா நாடு கண்காட்சி, ஆய்வரங்கு, பேருரைகள்,கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிஅமையும்.

கண்காட்சி எல்லாப் பாடங்களையும் உள்ளடக்கியதாக ஆரம்பக்கல்வி, முன்பள்ளி, இடைநிலைக்கல்வி, முறைசாராக்கல்வி ஆகிய எல்லாப் பிரிவுகளையும் கொண்டதாக அமையவுள்ளது. கற்பித்தல் துணைச் சாதனங்கள், மாதிரி உருக்கள், புத்தாக்கங்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதான ஆசிரியர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆக்கங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன. அத்துடன் ஆசிரியர்களின் ஆய்வுக்கட்டுரைகள், கல்வி சார் நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றனவும் காட்சிப்படுத்தப்படும்.

கல்வி சார் பிரச்சினைகளை உள்வாங்கி அவற்றை ஆய்வு செய்து அவற்றிற்கான தீர்வுகளை முன்வைப்பதாக ஆய்வரங்கு நடை பெறும். தற்போதைய கல்விசார் களநிலைமைகளைதொனிப்பொருளாகக் கொண்டதாக பேருரைகளின் வரிசையில் முதலாம் நாள் நிகழ்வில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி , விரிவுரையாளர் த.நித்திலவர்ணன் ஆகியோரது பேருரைகளும் இரண்டாம் நாள் நிகழ்வில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.த. கலாமணி, ஓய்வு நிலை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தரும் தேசிய கல்வி நிறுவகத்தின் பகுதிநேர விரிவுரையாளருமான பி.ஆறுமுகம் ஆகியோரது பேருரைகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் கலை நிகழ்வுகளின் சங்கமத்துடன் ஆசிரியர்மாநாடுநிறைவு பெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார்.(இ




பொலிகை மக்கள் முன்னேற்றக்கழகத்தினரின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட 65 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டபோது...

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

## நாடக ஆற்றுகை

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மெடிக்கோஸ் கொமிற்றி (Medicos Committee-2016) இன் ஏற்பாட்டில் இன்று மாலை 5 மணிக்கு மருத்துவ பீடத்தின் கூவர் மண்டபத்தில் நாடக ஆற்றுகை இடம்பெறவுள்ளது.(3)

# வைத்தீஸ்வரக் குருக்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் சிவத்தமிழ் வித்தகர் பண்டிதமணி கலாநிதி சிவத்திரு க.வைத்தீஸ்வரக் குருக்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும்.

காரைநகர் மணிவாசகர் சபைச் செயலாளர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளைதலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் வரவேற்புரையை காரைநகர் மணிவாசகர் சபையின் செயலாளர் து.நாகேந்திரன் வழங்குவார்.

இந்நிகழ்வில் நினைவுரைகளை நல்லூர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா சுவாமிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் இ.குமாரவடிவேல், இந்து கலாசார திணைக்கள ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், பிரம்மஸ்ரீ தியாக. மயூரகிரிக் குருக்கள், யாழ்ப்பாணம், ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை “ஆலய வழிபாடு” எனும் நூல் வெளியீடும் இடம் பெறும். நூலின் முதற் பிரதியை ‘‘கொடைக்கோ’’ ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக் கொள்வார்.

நூலின் நயவுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்குவார். (இ

# ஆட்டோக்களில் மீற்றர் மானி அவசியம் பொருத்த வேண்டும்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஆட்டோக்கள் அனைத்தும் பயணிகளின் நன்மை கருதி எதிர்வரும் மே மாதம் முதல் மீற்றர் மானி வாசிப்பு பொருத்தப்பட்டு கட்டணங்கள் அறவிடப்படவேண்டும் என யாழ் அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் ஆட்டோக்களின் உரிமையாளர்கள் சங்கங்கள், மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், மோட்டார் வாகன பரிசோதகர் மற்றும் யாழ் பிராந்திய பொலிஸார் ஆகியோருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதன் போதே மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும்பயணிகள்சேவையில் ஈடுபடும் ஆட்டோக்களில் உள்ள தேவையற்ற அலங்காரங்கள்.கண்ணாடிகள் கட்டாயமாக அகற்றப்பட வேண்டும் என்றும் அதை மீறி செயற்படும் ஆட்டோக்கள் மற்றும் சாரதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நடைமுறைகள் பயணிகளின் நன்மை கருதி மே மாதம் முதலாம் திகதி முதல் யாழ்.மாவட்டத்தில் கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என வும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-9)

# கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டம் யாழிலும்

## அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் யாழ்.மாவட்டத்திலும் இடம் பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டமானது கடந்த வருடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் சமர்ப்பித்த பிரேரணை அடங்கிய பொருளாதார கொள்கை பிரகடனத் திற்கமைவாக இத்திட்டத்திற்கென இவ்வருடம் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கும் ஒரு மில்லியன் ரூபா வீதம் தேசிய வரவு செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இவ் வேலைத்திட்டத்தை யாழ் மாவட்டத்திலும் ஆரம்பிக்க நடவடிக்கைகளை மாவட்டசெயலகம் எடுத்துள்ளது. அதற்கமைவாக ஒவ்வொரு பிரதேசசெயலகர் ஊடாக கிராமசேவையாளர் பிரிவில் வசிக்கும் சமூகப்பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு உருவாக்கப்பட்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரதேச செயலாளர்கள் மேற்படி அமைச்சினால் கோரப்பட்டுள்ளனர்.

இத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31ம் திகதிக்குள் பணிகள் பூர்த்தி செய்யப்படுவது அந்தந்த பிரதேச செயலாளர்களினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். (இ-9)




## கதிரைவேற்பிள்ளையின் 109வது ஆண்டு நினைவு விழா

(கரணவாய்)

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 109 ஆவது ஆண்டு நினைவு விழா இன்று வியாழக்கிழமை சதாவதானி சனசமூக நிலைய முன்றலில் உள்ள சதாவதானி அரங்கில் மாலை 5.30மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

(இ-5-60)

# இயற்கை விவசாயப் பண்ணை தெல்லிப்பழையில் ஆரம்பம்

இரசாயன உரத்தை பயன்படுத்தாமல் இயற்கை விவசாய பண்ணை தெல்லிப்பழையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகளின் தாக்கத்தினால் மக்கள் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனால் விவசாயத்திற்கு இரசாயனத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று பலமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் விவசாயிகள் தொடர்ந்தும் அவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் மானிடம் அறக்கட்டளையும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள தாய்மார் கழகமும் இணைந்து தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அருகாமையில் உள்ள காணியில் இயற்கை விவசாயப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு மரக்கறிப் பயிர்கள், சோளன், மரவள்ளி, உள்ளிட்ட பல்வேறு பயிர்ச்செய்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் தினமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.


இப் பண்ணைக்கான தொழில் நுட்ப உதவிகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் வழங்கி வருகின்றது.

இதேவேளை, இந்தப் பண்ணையை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதை முன்னுதாரணமாகக்கொண்டு விவசாயிகள் இரசாயன உரம் பயன்படுத்தாமல் விவசாயச் செய்கையில் ஈடுபட முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற

# 7 பேரையும் விடுவிக்க மத்திய அரசு மறுப்பு!

**ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும், நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ரவிச் சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரை விடுவிக்க தமிழ்நாடு அரசு எடுத்த முடிவை இந்திய மத்திய அரசு நிராகரித்துள்ளது.**



▲ முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்



▲ நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி 1991 ஆம் ஆண்டு மே மாதம் ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரசாரம் செய்தபோது மனித வெடிகுண்டு தாக்குதலால் கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் முருகன், பேரறிவாளன், சாந்தன், நளினி ஆகியோருக்கு மரண தண்டனையும், ஜெயக்கு மார், ராபர்ட் பயாஸ், ரவிச் சந்திரன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

பின்னர் முருகன், பேரறிவாளன், சாந்தன், நளினி ஆகியோருடைய மரண தண்டனையும் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

ஆயுள் தண்டனை பெற்றவர்கள் 14 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்தால் அவர்களை மாநில அரசே தன்னிச்சையாக முடிவு செய்து விடுவிக்கலாம் என சட்ட விதிகள் உள்ளன.

ஆனால், இவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலஉள்ளனர். எனவே, அவர்களை விடுவிக்க வேண்டும் என்று பல்வேறு அமைப்புகளும் கோரிக்கை விடுத்தன.

இதையடுத்து 2014 ஆம் ஆண்டு தமிழக அரசு அவர்களை விடுதலை செய்ய முடிவு எடுத்தது. இது தொடர்பாக மத்திய அரசிடம் கருத்து கேட்பதற்காக கடிதம் எழுதப் பட்டது. ஆனால், மத்திய அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதிமன்றில் மனு தாக்கல் செய்தது.

உச்சநீதிமன்றில் 5 பேர் கொண்ட அமர்வை அமைத்து விசாரித்தது. அந்த அமர்வு அளித்த தீர்ப்பில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மத்திய சட்டப்படி சி.பி.ஐ. அதிகாரிகளால் விசாரிக் கபட்டுள்ளது.

எனவே, இதில மாநில அரசுக்கு முடிவு எடு க்கும் அதிகாரம் இல்லை என்று கூறியது. இதனால் அப்போது 7 பேரையும் விடு தலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி தமிழக தலைமை செயலாளர் ஞானதேசிகன் மத்திய உள்துறைக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் அவர் கூறியிருந்ததாவது,

ராஜீவ்காந்தி கொலையில் தண்டனை பெற்ற 7 பேரும் தமிழக அரசுக்கு மனு அனுப்பி உள்ளனர். அதில், நாங்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்பதால் எங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர்.

ஆயுள் தண்டனை பெற்ற அவர்கள் 24 ஆண்டுகளாக சிறையில் இருப்பதால் அவர்களை விடுதலை செய்யலாம் என தமி ழக அரசு கருதுகிறது. இது சம் பந்தமாக தங்களது முடிவை தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

இந்த கடிதம் தொடர்பாக தமழக அரசுக்கு மத்திய உள் துறை பதில் அனுப்பி உள் ளது.

அதில், இந்த விடயம் உச்சநதிமன்றில் விசாரணையின் கீழ் இருப்பதால் யாராலும் இதன் மீது இப்போது எந்த முடிவும் எடுக்க முடியாது என்று கூறப்பட்டு ள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறும் போது, தமிழக அரசின் கடிதம் வந்ததை அடுத்து மத்திய சட்டத்துறையிடம் நாங்கள் இது சம்பந்தமாக கருத்து கேட்டோம்.

அதற்கு உச்சநீதிமன்றில் இது சம்பந்தமான வழக்கு நிலுவையில் இருப்பதால் எந்த முடிவும் இப்போது எடுக்க முடியாது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, 7 பேரையும் விடுதலை செய்ய முடியாது என்று தெரிவித்தார். (இ-5)

---

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கவில்லை ஈ.பி.டி.பி.

## சந்திரகுமார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஈ.பி.டி.பி பிரதிபலித்திருந்தால் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருக்கும் எனக் கூறும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி. மக்களது அபிலாஷைகளை பிரதிபலிக்காததன் காரணமாகவே கட்சியிலிருந்து விலகியுள்ளதாக கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம்கிறீன்கிராஸ் விடுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் ஈ.பி.டி,பியிலிருந்து விலகியமைக்கான காரணம் குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

நான் ஈழமக்கள் ஜனநாயக கட்சியிலிருந்து விலகியமைக்கான காரணம், தமிழ் மக்களது அபிலாஷைகளுக்கு மதிப்பளித்ததன் காரணமாகவே, இன்றைய அரசியல் சூழ்நிலையை பொறுத்தவரையில் தமிழ் மக்கள் தரப்பில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த சூழலை நாங்களே எமக்கு சார்பாக பயன்படுத்த வேண்டும்.



தமிழ் தரப்புக்கள் அனைத்தும் ஒரே அணியில் நின்று உழைத்தால் நிச்சயம் ஒரு தீர்வை நாம் காணமுடியும் இதனையே எமது மக்களும் விரும்புகின்றனர். எமக்குள்ளே நிறைய பிரச்சினைகள் உள்ளன. பிரதேச ரீதியாக வேறுபாடுகள் உள்ளன. பொருளாதார ரீதியில் வேறுபாடுகள உள்ளன. இவை அனைத்தும் களையப்பட வேண்டும்.

எமது மக்களது நலன்களுக்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும், இதற்காகவே நான் ஈ.பி.டி.பியிலிருந்து விலகியுள்ளதாக சந்திரகுமார் விளக்கமளித்தார்.

இதன்போது குறுக்கிட்ட ஊடகவியலாளர் ஒருவர் முன்பும் ஒருமுறை கட்சியிலிருந்து விலகி பின்னரும் இணைந்திருந்தீர்கள் அதேபோல் இதுவும் தற்காலிக விலகல் தானா? என கேள்வி எழுப்பினார்,

அப்போது நான் பாதுகாப்பு காரணமாக வெளிநாடு செல்ல வேண்டியேற்பட்டது, அதனால் கட்சியிலிருந்து பிரிந்தேன். இப்போது நான் அரசியல் காரணங்களால் பிரிந்துள்ளேன். நிரந்தரமாகவே பிரிந்துள்ளேன் என்றார். உங்களது விலகல் தொடர்பில் கட்சி தலைமை ஏதும் பதில் அளித்துள்ளதா? என கேட்டபோது அவ்வாறு எதுவும் எனக்கு பதில் அளிக்கப்படவில்லை எனக் கூறினார்.

கடந்த காலங்களில் ஈ.பி.டி.பியால் மேற்கொள்ளப்பட்ட கொலைச் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் கட்சி உறுப்பினர் என்ற வகையில் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்ட போது, அந்த காலத்தில் நான் நாட்டில் இல்லை. அவ்வாறு இடம்பெற்று இருந்தால் அது விசாரிக்கப்பட வேண்டும். அதுதான் நீதி எனக் கூறி னார். எந்த கட்சியில் இணைய போகின்றீர்கள் என கேட்ட போது அது தொடர்பில் இது வரை முடிவு செய்யவில்லை என பதிலளித்தார்.

மேலும் ஈ.பி.டி.பியிலிருந்து விலகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஐக்கிய தேசிய கட்சியிலேயே இணைந்து கொள்ளவுள்ளதாகவும், தொகுதிவாரியான தேர்தலின் போது கிளிநொச்சியை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. (இ-4)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:13
உயரம்: 166cm
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்
தொ.இ: B/5770

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 37செவ் 4 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:A/Lகனடா NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5772

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 30
உயரம்: 5'5''
தகைமை/தொழில்:HND, ENG/ தனியார் தொழில்
எதிர் பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/5774

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 30
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BED/அரசதொழில்
தொ.இ: B/5777

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 43செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BDS/பல்வைத்தியர் இந்தியா
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5039

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 24
உயரம்: 160cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/5040

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 63செவ் 8 இல்
தகைமை/தொழில்:BBA, MBA/ தனியார் தொழில்
தொ.இ: G/5045

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 27
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5048

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# காணாமற்போன மூவரும் மாலைதீவிலிருப்பது மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தெரியும்

## வெலிக்கடை சிறைக்கு மாற்றப்பட்டவர்களை பெற்றோர் சந்திப்பு

(குருமன்காடு)

காணாமற்போன மூவர் மாலைதீவு சிறைச்சாலையில் இருந்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் அவர்களது உறவினர்கள் பார்வையிட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலைய சட்ட உதவியாளர் சட்டத்தரணி ஆ.றொமனிக் பிறேமானந் தெரிவித்துள்ளார்.

கடந்த 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட முல்லைத்தீவு புளியம் பொக்கணையைச் சேர்ந்த பு.ரஞ்சித், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த மு.யோகராசா, வவுனியாவைச் சேர்ந்த க.இராமச்சந்திரன் ஆகியோரே இவ்வாறு கொண்டு வரப்பட்டவர்களாவர். இவர்களது பெற்றோர் மற்றும் சகோதரர்கள் கடந்த திங்கட்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர். இது தொடர்பில் அவர்களைப் பார்வையிட்ட உறவினர்களிடம் வினவிய போது, அவர்கள் தெரிவிக்கையில்,

தமது பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள் கடந்த 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் காணாமல்போன நிலையில் மாலைதீவு கடற்கரையில் வைத்து மாலைதீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுதலைப்புலி சந்தேக நபர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு மாலைதீவு நீதிமன்றால் 15 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மாலைதீவில் இருந்து தொலைபேசி ஊடாக எமது பிள்ளைகள் மற்றும் சகோதரன் மாலைதீவு சிறையில் இருப்பது பற்றிய தகவல்கள் எமக்கு கிடைத்தன. அதன்பின் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவிலை முறைப்பாடு செய்தோம். அவர்களும் எமது பிள்ளைகள் மற்றும் சகோதரன் மாலைதீவு சிறையில் உள்ளதாக கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் கடிதம் மூலம் தெரியப்படுத்தினர். இந்நிலையில் அவர்களைப் பார்ப்பதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தற்போது கடந்த 10 ஆம் திகதி மாலைதீவில் இருந்து 14 சிறைக்கைதிகள் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளனர். அதில் காணாமல்போன எமது உறவுகள் மூவரும் உள்ளனர். ஆனால் அது பற்றி எமக்கு அரசாங்கம் அறிவிக்க வில்லை.

இந்நிலையில் மாலைதீவில் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலைய சட்ட உதவியாளர்களின் துணையுடன் அவர்களை பார்ப்பதற்கு முயற்சி செய்து கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை வெலிக்கடை சிறையில் பார்வையிட அனுமதி கிடைத்து பார்வையிட்டுள்ளோம். அவர்கள் 9 வருடகாலம் மாலைதீவு சிறைச்சாலையில் இருந்துள்ளார்கள். அவர்களை இனியும் சிறையில் வைத்திருக்காது எம்முடன் இணைந்து வாழ அனுமதி வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-3-250)




# பனங்கைப்பணியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பனங்கைப் பணிக் கிராமங்கள் உருவாக்கல் திட்டத்தின் கீழ் கடந்த 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் 50 பயனாளிகளுக்கும், முற்பகல் 11 மணிக்கு புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க கேட்போர்கூடத்தில் 31 முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்கும் பனைகைப்பணி உற்பத்தியில் ஈடுபடுவதற்கான உபகரணங்கள் மற்றும் மூலப்பொருள் கொள்வனவுக்கான காசோலைகள் என்பன வழங்கப்பட்டன. பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். (2-3-9)

# மம்மில் பிள்ளையார் ஆலய சித்திரை பௌர்ணமி பொங்கல்

(பனிக்கன்குளம்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரை பௌர்ணமி பொங்கல்விழா இன்று இடம்பெறவுள்ளது. இன்றைய தினம் தாயை இழந்தவர்கள்விரதம் இருந்து தங்கள் நேர்த்திக் கடனையும் மேற்கொள்வார்கள். நேர்த்திக்கடன் செய்யும் அடியார்கள் காலையிலிருந்து இரவு வரை தங்கள் நேர்த்திக் கடன்களைச் செய்வதற்கு ஆலய நிர்வாகத்தினர் அதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர். (2-3-281)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் ஒதுக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து வவுனியா தெற்கு வலய குருக்கள் புதுக்குளம் அ.த.க.பாடசாலைக்கு நிழல் பிரதி இயந்திரம் ஒன்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# நேரடியாகச்சென்று பார்த்தபோதே உப்பளம் தொழிற்சாலையின் நிலைமை புரிந்தது

## சிறிதரன் எம்.பி. விபரிப்பு

கடந்த கால யுத்தம் காரணமாக செயலிழந்த நிலையில் காணப்பட்ட ஆனையிறவு உப்பளத்தின் கட்டுமானப்பணிகள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் ஆனையிறவு உப்பளத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்பாக, அங்கு சென்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பார்வையிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரியதொழில் மையமான ஆனையிறவு உப்பளத்தை நேரடியாக சென்று பார்வையிட்ட பின் தான் கடந்த யுத்தத்தின் பின்னர் இன்னமும் இந்த உப்பளம் இயங்க முடியாத நிலையில் உள்ளதை காணமுடிகிறது.

யுத்தம் நிறைவு பெற்று சமாதானம் ஏற்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளை எட்டிய போதும் இதுவரை இந்த உப்பளம் இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது.

இந்த உப்பளத்தை இயக்குவதில் அரசாங்கம் இழுத்தடிப்புக்களையே செய்து வந்துள்ளது. தற்போது இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த முயற்சிகளின் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் உள்ளன.

இது தமிழ் மக்களின் பெரும் பொருளாதார வளமாக காணப்படுகின்றது .

கடந்த 1937 ஆம் ஆண்டு காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஆனையிறவு உப்பளமானது, கடந்த 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் மீளவும் 2004 ஆம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 2008 ஆம் ஆண்டு தொடர் யுத்தம் காரணமாக முற்றாக செயலிழந்தது.

இந் நிலையில் இன்று வரை இது மீள ஆரம்பிக்கப்படாமல் காணப்படுகின்றது. இதன் கட்டுமானப்பணிகள் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நூறு மில்லியன் ரூபா செலவில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன்பணிகள் மந்த கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மேலும் இருபத்தி ஐந்து மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள் களஞ்சியம் என்பன புனரமைப்பு செய்யப்பட்டன.

தற்போது எண்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

கடந்த காலங்களில் சுமார் ஐம்பதாயிரம் மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டதாகவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இதன் அபிவிருத்திப் பணிகள் பூரணமாக நிறைவு பெற்று முதற்கட்டமாக எண்ணாயிரம் மெற்றிக்தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த உப்பளத்தில் முன்பு 650 பணியாளர்கள் பணியாற்றி இருந்த போதும் இப்பொழுது 31 பணியாளர்களே வேலை செய்வதனை அவதானிக்க முடிகிறது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிய தண்டவாளம் மூலம் உப்பை ஓர் இடத்தில் இருந்து வேறோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு உப்பளத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த மிகவும் பழமை வாய்ந்த இயந்திரம் அம் பாந்தோட்டை உப்பு தொழிற்சாலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (2-3-281)

# விசாரணைகள் முடிவுற்ற நிலையிலும் அறிக்கை ஏன் வெளியிடப்படவில்லை?

## வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கேள்வி

(முல்லைத்தீவு)

குளங்களின் தரமற்ற புனரமைப்பில் பல மில்லியன்கள் வீணாகியதான முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் முடிந்த நிலையிலும் அதன் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை என வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தண்ணிமுறிப்பு, உடையார்கட்டு ஆகிய குளங்கள் மீள்குடியேற்றத்தின் பின் புனரமைக்கப்பட்டன.

இப் புனரமைப்புக்களில் தரமற்ற வேலைகளும், முறைகேடுகளும் இடம் பெற்றுள்ளதாக அங்குள்ள விவசாய அமைப்புக்கள் மற்றும் பொது மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

இதன்பின் குறித்த இரண்டு குளங்களின் புனரமைப்பு வேலைகள் பற்றி நேரடியாக சென்று மக்களுடன் பார்வையிட்டு குறைகளை உறுதிப்படுத்தினேன்.

பின்னர் இது விடயத்தை மாகாண சபையின் 25 ஆவது அமர்வில் கொண்டு வந்து அத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனடிப் படையில் பிரதம செயலாளரால் ஒரு குழு அமைக்கப்பட்டு விசாரணைகளும் இடம்பெற்றன.

கடந்த ஜனவரியில் அறிக்கை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்ட நிலையிலும் அக்குழுவிடம் இருந்து குறித்த அறிக்கை கிடைக்காததால் விசாரணை அறிக்கையை விரைவாக தரும் படி பிரதம செயலர் குழுவிடம் கேட்டுக் கொண்டார்.

இருந்தும் இன்று வரை இதற்கான அறிக்கை வெளியிடப்படவில்லை. இத்தாமதம் மேலும் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

இவ்விடயத்தில் மேலும் தாமதம் ஏற்பட்டால் மாகாணசபையில் மீண்டும் கேள்வி எழுப்ப வேண்டிய நிலை ஏற்படும் என அவர் திட்டவட்டமாக கூறினார். (2-3)

துரத்தித்துரத்தி கொட்டிய குளவிகள்

# ஒரு கிலோமீற்றர் ஓடிய நிலையில் மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர்

(பளை)

பளை இத்தாவில் பகுதியில் நூற்றுக்கணக்கான குளவிகளின் கொட்டுக்கு இலக்காசி ஆபத்தான நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பளை நகரத்திற்குச் செல்வதற்காக இத்தாவிலில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை சென்ற நிலையில் திடீரென வகை தொகையாக கூட்டமாக வந்த குளவிகள் கொட்டத் தொடங்கின.

இந்நிலையில் தனது துவிச்சக்கரவண்டியை கீழே போட்டுவிட்டு குளவிக் கொட்டிலிருந்து தப்புவதற்காக ஓடியுள்ளார்.

எனினும் குளவிகள் விடாது துரத்தியதால் தன்னைக் காப்பாற்றுமாறு குளறியபடி நிலத்தில் படுத்தும் புரண்டும் ஓடியும் முயற்சித்துள்ளார்.

இவரைக் காப்பாற்ற சிலர் முன்வந்த பொழுதும் பெருந்தொகையான குளவிகள் கூட்டமாக வந்ததால் காப்பாற்றச் சென்ற வேறு இருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளனர்.

சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்திற்கு ஓடி இயலாத நிலையில் இத்தாவில் தும்புத் தொழிற்சாலையடியில் வீழ்ந்து படுத்துள்ளார்.

இதனையடுத்து உறவினர்கள் அங்கு சென்று அவரைக் காப்பாற்றியதுடன் உடனடியாக அவரது உடலில் காணப்பட்ட நூற்றுக்கணக்கான கொடுக்குகளை அகற்றியதுடன் அவரை பளை வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

குளவிக் கொட்டினால் உடல் முழுவதும் வீங்கிய நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (3)

# கரைதுறைப்பற்றில் 5ஆயிரத்து 144 குடும்பங்களுக்கு வீடுகள் தேவை

(மல்லாவி)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள 46 கிராம அலுவலர் பிரிவுகளில் இடப்பெயர்வினை அடுத்து மீள்குடியேற்றத்தின் பின்னர் 13ஆயிரத்து 331 குடும்பங்களைச் சேர்ந்த 41ஆயிரத்து 806 அங்கத்தவர்கள் மீள் குடியேறி சுமார் 7வருடங்கள் ஆகின்ற நிலையில் 5ஆயிரத்து 144 குடும்பங்களுக்கு புதிய நிரந்தர வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளதுடன் 648 குடும்பங்களின் வீடுகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலக புள்ளிவிபரத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் மீள்குடியேறியுள்ள 13ஆயிரத்து 331 குடும்பங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக 5ஆயிரத்து 162 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆயிரத்து 859 குடும்பங்களின் வீடுகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் இன்னும் 5ஆயிரத்து 144 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளதுடன் 648 குடும்பங்களின் வீடுகள் புனரமைப்பு செய்யப்படவேண்டியுள்ளதாகவும் கரைதுறைப்பற்று பிரதேச தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-15)

# வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் 641 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

(குருமன்காடு)



வடக்கு மாகாண விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 641 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் நேற்று இந் நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தின் பலவேறு பகுதிகளிலும்வாழும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 641 பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள, ஆடுகள், மாடுகள், வேலிக்கு அடைக்கும் முட்கம்பிகள் என்பன இவ்வாறு வழங்கப்பட்டன.

கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேம்ப டுத்தும் நோக்கில் வாழ்வாதார உதவியாக இவை வழங்கி வைக்கப்பட்டன. இதனை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங் கரநேசன் வழங்கி வைத் தார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, இ.இந்திரராசா, ம.ஜெயதிலக ஆகியோருடன் விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக் ரஞ்சன், கால்நடை விவசாய திணை க்கள மாவட்ட பணிப்பாளர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)




# கிராமங்களுக்கு படையெடுத்து வரும் காட்டு யானைகள்-வெப்பம் காரணமா?

பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி



முல்லைத்தீவிலுள்ள கரிப்பட்ட முறிப்பு மாங்குளம் பிரதான வீதியில் அண்மைக்காலமாக காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக பொதுமக்கள்விசனம்தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பிரதேசத்தில் மக்கள் நடமாட்டம் நிறைந்த பிரதான வீதிகளுக்கு அண்மையாக காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக வந்து செல்வதாகவும் இதனால் இவ்வீதி வழியாகப் பயணிப்போர் பெரும் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாட்டில் நிலவி வருகின்ற கடும் வெப்பம் காரணமாகவே காட்டு யானைகள் காட்டு பகுதியை விட்டு மக்களின் வாழ்விடங்களை நோக்கி படையெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பிரதான வீதிகளை நோக்கி படையெடுக்கும் காட்டு யானைகளை மீளவும் காட்டுப் பகுதிக்குள் விரட்டி வீதிகளில் பயணிப்போரின் அச்சத்தை நீக்க வனவள திணைக்களத்தினர், வன ஜீவராசிகள் திணைக்கள த்தினர் ஆகியோர் முன் வரவேண்டுமென பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (3-310)

# கலைஞர்களுக்கு கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

வன்னி குறோஸ் கலாசார பேரவையால் நடத்தப்படும் முல்லை மாவட்ட கலைஞர்களுக்கான போட்டி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப.10மணிக்கு ஒட்டுசுட்டான் வைமன் முன் பள்ளியில் இடம்பெறவுள்ளது.

அரிச்சந்திரன் மயான காண்டம்,கோவலன் கூத்து பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம்,சமூக நாடகம், கிறிஸ்தவ சமய நாடகம் ஆகிய போட்டிகளில் பங்குகொள்ள ஆர்வமுள்ள அண்ணாவிமார்கள், நாடக நெறியாளர்கள்,கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்களை இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் அன்றைய தினமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு போட்டிக்கான திகதியும் தீர்மானிக் கப்படும் என்றும் வன்னிக்குறோஸ் கலாசார பேரவை அறிவித்துள்ளது. (3)

திடீர் சுற்றி வளைப்பின் போது

# இரண்டு பரல்கள் கோடா, 25 லீற்றர் கசிப்பு கைப்பற்று இரு சந்தேக நபர்கள் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவின் திடீர் சுற்றி வளைப்பின் போது இரண்டு பரல்கள் கோடா,25 லீற்றர் கசிப்பு ஆகியவை கைப்பற்றப்பட்டதுடன் இது தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பகுதியில் கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரி எஸ்.தர்சன தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் திடீரென நடத்திய சுற்றி வளைப்பின் போதே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இச்சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# முழுமதி கலை விழா

(மல்லாவி)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் துணுக்காய் வலயக்கல்வி அலு வலகம் நடத்தும் ஆறாவது முழுமதி கலை விழா நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மு/யோகபுரம் மகா வித்தியாலய கலையரங்கில் துணுக்காய் வலய்க்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) திருமதி ராதிகா நிர்மலன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் கலந்து கொள்ளவுள்ளார்.நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் இயல்,இசை,நாடக நிகழ்வுகள் இடம் பெறும் என ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (2-3-15)



வன்னிக்குறோஸ் கலாசாரப்பேரவை ஒழுங்கு செய்த முல்லை. மாவட்ட கலைஞர்களுக்கான மாபெரும் காத்தவராயன் சிந்துநடைக்கூத்து போட்டி நேற்று முற்பகல் பத்துமணியளவில் வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகி இரவு 10 மணி வரை இடம் பெற்றது.வன்னிக்குறோஸ் கலாசாரப்பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் துணுக்காய் மல்லாவியை சேர்ந்த தமிழ்த் தாய் கலாமன்றம்,பெரிய புளியங்குளத்தை சேர்ந்த சுந்தராலய கலாமன்றம் ,கூழாமுறிப்பை சேர்ந்த அண்ணா கலாமன்றம் ,பொன்னகர் முள்ளியவளையை சேர்ந்த பாரதி கலாமன்றம் ,பொன்னகர் முள்ளியவளை இளந்தளிர் கலாமன்றம் ,புதுக்குடியிருப்பு சிறீமுத்துமாரி கலாமன்றம் ,புதுக்குடியிருப்பு இயலிசை நாடகமன்றம், வேணாவில் புதுக்குடியிருப்பு கலைமகள் கலாமன்றம் உள்ளிட்ட எட்டு கலா மன்றங்கள் பங்குபற்றின. (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# பூஜிதவின் நியமனம் சட்டவிரோதமானது

## கம்மன்பில கொதிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபராக பூஜித ஜெயசுந்தரவை நிய மித்தமை சட்டவிரோதமா னது என, பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பத விக்காக யாரைத் தெரிவு செய்வது என்பது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரத மருக்கு இடையில் இரு தெரி வுகள் இருந்ததாகவும், இறு தியில் பூஜித ஜெயசுந்தர தெரிவு செய்யப்பட்டுள்ள தாகவும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந் திப்பிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

சட்டமா அதிபரை நிய மதித்தமை சட்டவிரோத மானது எனவும், அதேபோல் எஸ்.எம்.விக்ரமசிங்க போன்ற சிரேஷ்ட அதிகாரி கள் இருக்கையில் பொலி ஸ்மா அதிபராக பூஜித ஜெயசுந்தரவை நியமித்தது சட்டவிரோதமானது என வும், அரசியலமைப்பு சபை தொடர்பில் மக்களுக்கு இரு ந்த நம்பிக்கை இதனால் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பிரதமரின் சீன விஜயம் தோல்வியடைந்து ள்ளதாக தெரிவித்த கம்ம ன்பில, சீன விஜயத்தின் போது எதிர்பார்த்தது நான்கு பில்லியன் டொலர்கள் எனி னும் கிடைத்தது, 85 மில் லியன் டொலர்கள் எனவும் தெரிவித்தார். (இ-5)




# கஞ்சாவுடன் மன்னார் வாசி பாம்பன் பகுதியில் கைது

கஞ்சா கடத்துவதற்கு முய ற்சித்த இலங்கையர் ஒரு வரை பாம்பன் பகுதியில் கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 10 கிலோகிராம் கஞ்சா, பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டுள் ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேகநபர் கடல் மார் க்கமாக படகு மூலம் தலை மன்னாருக்கு கஞ்சா கட த்துவதற்கு முயற்சித்துள் ளதாக கியூ பிரிவு பொலி ஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் மன்னாரை சேர் ந்தவர் என விசாரணை களில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி சுற் றுலா விசாவில் மதுரை விமான நிலையத்தை சென்றடைந்து ள்ளார் எனவும், பத்தல குண்டிலுள்ள அவரின் உற வினர் வீட்டில் தங்கியிருந் ததாகவும் பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் மேலதிக விசா ரணைகளுக்காக பாம்பன் பொலிஸாரிடம் ஒப்படைக்க ப்பட்டுள்ளார். (இ-5)

# வற்வரி அதிகரிப்பு தொடர்பில் நிதியமைச்சுக்கு எதுவித அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை!

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 02ஆம் திகதி முதல் நடை முறைக்கு வர இருந்த வற் வரி அதிகரிப்பு தொடர்பில் நிதியமைச்சுக்கு தெளிவான அறிவுறுத்தல் ஏதும் இது வரை வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

குறித்த வரி அதிகரிப்புக்கு எதிராக கருத்து வெளியிட் டிருந்த ஜனாதிபதி அவ்வாறு வரிகளை அதிகரித்து பொது மக்கள் மீது சுமைகளை அதிகரிக்கும் பொருளாதார நிபுணர்கள் வீட்டுக்கு அனு ப்பப்படுவார்கள் என்று பகி ரங்கமாக எச்சரித்திருந்தார்.

எனினும் குறித்த வற் வரி அதிகரிப்பை இடை நிறுத்துமாறு ஜனாதிபதி தர ப்பில் இருந்து இதுவரை எழுத்து மூல அறிவித்தல் வழங்கப்படவில்லை.

மறுபுறத்தில் நடைமுறை யல் உள்ள 11 வீத வற்வரியை 15 வீதமாக அதிகரிக்க நட வடிக்கை எடுத்த பிரதமர் அலுவலகமும் இது தொட ர்பில் தற்போது மௌனமாக உள்ளது.

இதன் காரணமாக வரி அதிகரிப்பை நடைமுறைப் படுத்துவதா? இல்லையா? என பது குறித்து ஒரு தீர்மானத் துக்கு வர முடியாமல் நிதிய மைச்சின் அதிகாரிகள் நெரு க்கடியொன்றை எதிர்கொண் டுள்ளனர்.

இதற்கிடையே பிரதமர் அலுவலகத்தின் முன்னைய அறிவுறுத்தலின் பிரகாரம் வற்வரியை அதிகரிப்பதற் கான நடவடிக்கைகள்வழமை போன்று முன்னெடுக்கப் பட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் இரு வேறுபட்ட நிலைப்பாடுகளில் இருப்பதன் காரணமாக வரி அதிகரிப்பை நடைமுறை ப்படுத்த வேண்டிய அரச நிறுவனங்கள் தெளிவான முடிவு ஒன்றை எடுக்க முடி யாமல் தடுமாறிக் கொண் டிருக்கின்றன. (இ-5)

# சித்திரா பௌர்ணமி



மாதங்களில் சிறந்தது சித் திரை மாதம். சித்திரை மாதம் தமிழர்களாகிய எங்களின தும் சிங்கள மக்களினதும் புதுவருடக் கொண்டாட்டத் துடனேயே ஆரம்பமாகிறது.

அடுத்து சித்திரா பௌர் ணமி விரதம் வருடத்தில் மாதாமாதம் அமாவாசை விரதம், பௌர்ணமி விர தம் வந்தாலும் ஆடி அமா வாசை, சித்திரா பௌர்ணமி பெரும் சிறப்புடையது. நாம் இத்தினத்தில் பிதர்க்கடன் விரதம்நோற்கும் போது புதிய சட்டி பானை வாங்கி சமை யல் செய்வோம்.

பிதிர்களை நாம் அவ் வளவு பெருமையாக இறை வனுக்கு சமானமாக எண்ணி செய்கிறோம். அது மட்டும ல்ல பிதிர்களுக்காக நாம் வேறு சிலரை அழைத்து போச னம் செய்வித்து கௌர வமாக அனுப்புகிறோம். அதில எமக்கு ஒரு திருப்தி மனச்சந் தோஷம்.

சித்திரா பௌர்ணமி சித்திரை நட்சத்திரமும் சேர் ந்து வருவது. அன்று சகல கோவில்களிலும் நிறைகுடம் வைத்து நிறை நாளி வைத்து சித்திர புத்திர நாயனார் கதை படிப்பார்கள். இதை பலர் இருந்து முன் கேட்பது வழக்கம். முடிவில் சித்தி ரைக் கஞ்சி காய்ச்சி கொடு ப்பார்கள். யார் இந்த சித்திர புத்திரனார். ஒரு நாள் சிவ பெருமான் மக்கள் செயயும் நல்வினை, தீவினைகளை வைத்து அதற்கேற்ப அவர் களும் பலன்களை எழுதி அளிக்க ஒருவரை தந்தார். ஒரு பொற் பலகையில் தானியங்களை பரப்பி அதில ஒரு சித்திரம் வரைந்தார். அந்த சித்திரத்தை உமை யம்மையை பார்க்க சொல்ல அச்சித்திரம் ஒரு குழந்தை யாக தோன்றியது. அந்தக குழந்தைதான் சித்திர புத் திரனார்.

பின் அக்குழந்தைக்கு வேண்டிய வரங்கள் அதிகா ரங்களை கொடுத்து மக் களுக்கு அவர்கள் செய்யும் நல்வினை, தீவினைகளை வைத்து பலன் எழுத பணி த்தார். சத்திரம் ஒரு புத் திரனாக அவதரித்த படியால் சித்திர புத்திரனார் ஆக ஈற் றில் சித்திர புத்திர நாயனார் ஆனார். இந்த சித்திர புத்திர நாயனாருடைய சரிதம் இன் றும் தொடர்கதையாக வள ர்கின்றது. வளர்ந்து கொண்டே போகிறது. ஆகவே நாமும் இதில் பங்குகொடு த்து எம எதிர்கால சந்ததி யினர்க்கும் வழிகாட்டி நாமும் உய்ந்து எதிர்கால சந்ததிக்கும் வழி காட்டு வோமாக. சைவநெறி தழைத்தோங்க மிகு சைவத துறை விளங்க பணி செய் வோம்.

**ந.சிவசுப்பிரமணியம்**
**நீர்வேலி.**

# பொலிஸ் ஆயுதத் திருட்டு; புதிய தகவல்கள் அம்பலம்

லக்கல பொலிஸ் நிலை யத்தில் அண்மையில் இடம் பெற்ற துப்பாக்கி திருட்டு சம்பவம் அந்த பொலிஸ் நிலையத்திற்குள்ளேயே இடம் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவத்துடன் சட்ட விரோத இரத்தினக்கல் வர் த்தகத்தில் ஈடுபடும் அரசியல் தொடர்புடைய கடத்தல்காரர் கள் ஈடுபட்டுள்ளதாக, குற்றப் புலனாய்வு திணைக்களத்தி னால் மேற்கொண்ட விசார ணைகள் மூலம் தெரிய வந் துள்ளது.

அதற்கமைய துப்பாக்கி களை திருடிய சம்பவம் தொட ர்பில் குற்றவாளிகளை விரை வில் கைது செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக குற் றப் புலனாய்வு திணைக்க ளம் நம்பிக்கை வெளியிட்டுள் ளது.

சட்டவிரோத இரத்தின க்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் அரசியலுடன் தொடர்புடைய கடத்தல்காரர்கள், லக்கல பொலிஸ் நிலையத்தில் சில பொலிஸ் அதிகாரிகளுக்கு கடந்த காலங்களில் இலஞ் சமாக பெருந்தொகை பணம் வழங்கியுள்ளனர்.

தற்போதைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சேவை க்கு வந்த பின்னர் பணம் வழங்குவதனை இடை நிறு த்தியதன் காரணமாக அவரை பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி பதவியில் இருந்து நீக்கு வதற்கு திட்டமிட்டே துப்பாக் கிகளை திருடியதாக புலனா ய்வு பிரிவு, தங்கள் பிரதா னிகளுக்கு அறிவித்துள்ள னர்.

கடத்தல்காரர்களிடம் இரு ந்து பணம் பெற்றுக் கொண் டிருப்பது தன்னிடம் சிக்கி னால் பொலிஸ் பதவியில் இருந்து துரத்திவிடுவதாக புதய பொலிஸ்நிலைய பொறுப் பதிகாரி, பொலிஸ் அதிகாரி களுக்கு அறிவித்ததோடு அவ் வாறு பணம் பெற்றுக்கொள் ளும் அதிகாரிகள் யார் என் பது தொடர்பில் சுட்டிக்காட்டி யுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இதன் காரணமாக குறி த்த கடத்தல்காரர்கள் சிக் கலுக்குள் சிக்கியுள்ளதா கவும் பொலிஸ் பதவி இழக் கப்படும் நிலையில் அவர்கள் உள்ளதாகவும் தெரிவிக்க ப்படுகின்றது.

இந்த துப்பாக்கி திருட்டு தொடர்பில் மேற்கொள்ளப்ப டுகின்ற விசாரணைகளில் பொலிஸ் அதிகாரிகளினால் வழங்கப்படுகின்ற சாட்சிக ளில் முரண்பாடுகள் காணப் படுவதாக குற்றப் புலனாய்வு பிரிவு தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

# வகுப்பறை முகாமைத்துவம்

"Classroom management is the process by which teachers and schools create and maintain appropriate behavior of students in classroom setting."

அறிவையும் தொழில்நுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட இன்றைய சமூகத்தில் வகுப்பறை முகாமைத்துவம் சிக்கலானதும் மிக அவசியமானதுமான ஒரு அமசமாகும். எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான மனித வளத்தை விருத்தி செய்வதில் வகுப்பறைகளின பங்கு அளப்பரியது. பாடசாலைக் கல்வியின் நோக்கம் பிள்ளை ஒரு மொழியினை எழுத, வாசிக்கக் கூடிய திறன்களை வளர்ப்பது மட்டுமன்றி பிரச்சினை தீர்க்கும் ஆற்றலை விருத்தி செய்தல், தனது உடல், உள ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துதல், குழுவில் இணைந்து பணியாற்றுதல், பல்வேறு கலாசாரங்களையும் புரிந்து கொள்ளும் உளப்பாங்கினைப் பெறுதல், பிறர் மீது அககறை செலுத்துதல், உரிய கௌரவம் வழங்குதல், தமது சமூகம் எவ்வாறு இயங்குகின்றது என அறிந்து கொள்ளுதல், எதிர்கால முன்னேற்றத்துக்காக பல்வேறு பாத்திரங்களை ஏற்றல், சிறந்த பண்புகளை வளர்த்தல், ஒழுக்கப்பாங்கான தீர்மானங்களை மேற்கொள்ளுதல், வன்முறைகளைத் தவிர்த்தல், திறனாய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை போன்றவற்றை வளர்த்தல் போன்ற அம்சங்களையும் உள்ளடக்கிய முழுமையான கல்வியை வழங்குவதாகும்.

பாடசாலை ஒன்றின் சிறந்த அடைவு மட்டத்தையும் நற்பெயரையும் தீர்மானிப்பதில் வகுப்பறை முகாமைத்துவம் இன்றியமையாததாகும். எனினும் இன்றைய சூழலில் மிகவும் விமர்சனத்துக்குரிய ஒன்றாகவும் காணப்படுகின்றது. வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை பல்வேறு மாணவர்களின் நடத்தைகள் பாதிக்கின்றன. வகுப்பறைகளிலே ஆர்வத்துடன் கற்கும் மாணவர்கள் இருக்கும் அதேவேளை பல்வேறு ஒலிகளை எழுப்புதல், எழுந்து நடமாடுதல், ஏனைய மாணவர்களை துன்புறுத்துதல் போன்ற கற்றல் கற்பித்தலை பாதிக்கும் செயல்களில் ஈடுபடும் மாணவர்களும் இருப்பர். எனவே இவற்றை எல்லாம் எதிர்கொண்டு சிறந்த கற்றல் கற்பித்தல் இடம்பெறும் வகையில் வகுப்பறை முகாமைத்துவம் அமைதல் வேண்டும்.

மாணவர்கள் வகுப்பறையில் கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவதற்கு அவர்களது தேவைகள் முதலில் நிறைவு செய்யப்பட வேண்டும். மாணவர்கள் தமது கிரகித்தலையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கும் சுயகற்றலில் ஈடுபடுவதற்கும அவர்களது அடிப்படைத் தேவைகளான உடலியற்தேவைகள், அன்புத் தேவை, பாதுகாப்புத்தேவை என்பன பூர்த்தி செய்யப்படல் வேண்டும். பிள்ளைகளுக்கு வகுப்பறையிலே உரிய கௌரவம், கணிப்பு வழங்கப்பட வேண்டும்.

பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபடுவதற்கேற்ற வகையில் வகுப்பறைச்சூழல் அமைதல் வேண்டும். வகுப்பறை என்பது தனியாள் வேறுபாடுகள், குழு இயலபுகள் பலவற்றை உள்ளடக்கிய மாணவர்கள் கற்றலில் ஈடுபடும் இடமாகும்.

எனவே வகுப்பறைச் சூழலில் ஏற்படக்கூடிய ஒழுங்கீனமான நடத்தைகளை தடுப்பதற்கும், சீரமைப்பதற்கான முன்னிகழ்வுகளைப் பரீட்சிக்க வேண்டும். மாணவர்களின் இருக்கை ஒழுங்குகள், தேவையான கற்றல் வளங்கள், பொருத்தமான செயன்முறைகள் மிகவும் பொருத்தமாக அமையும் போதே கற்றல் நடவடிக்கைகள் வெற்றியளிக்கும். வகுப்பறைக்கு கிடைக்கும் வெளிச்சத்தின் அளவு, காற்றோட்டம், இரைச்சலகள், பொருத்தமற்ற நடமாட்டங்கள் என்பன மாணவர்களின் நடத்தையைப் பாதிக்கின்றன. இவ்வம்சங்கள் பாடசாலையின் பௌதீக கட்டமைப்பு சார்ந்தவை. எனினும் ஆசிரியர் சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுவதன் மூலமும் கிடைக்கக்கூடிய வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதன் மூலமும் வினைத்திறன் மிக்க கற்றல கற்பித்தல் இடம் பெறுவதை உறுதிப்படுத்திக் கொளள முடியும்.

வகுப்பறைகள் மாணவர்கள் தொழிற்படுவதற்கு ஏற்றவகையில் இடவசதியைக் கொண்டிருப்பதோடு அவர்களின் இருக்கை ஒழுங்குகள் தொடர்பாகவும் மிகவும் நிதானமாக ஆசிரியர் செயற்பட வேண்டும். மாணவர்கள் குழுவாகவும், தனியாகவும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவர். எனவே பல்வேறு கற்றல் நடவடிக்கைகளுக்கும் ஏற்றவகையில் குழுவாகவும், நிரை நிரல்களாகவும் மாற்றியமைத்தல் வேண்டும். அது மட்டுமன்றி ஆசிரியர் மாணவர்களிடையே சென்று வரும்போது ஏனைய மாணவர்களுக்கு இடையூறுகள் ஏறபடாத வகையிலும் எல்லா மாணவர்களும்கரும்பலகை ஆசிரியருடைய செயற்பாடுகளை அவதானிக்கக்கூடிய வகையிலும் அமைதல் வேண்டும். விசேட தேவையுள்ள மாணவர்கள் இருப்பின் அவர்களுடைய கற்றல் செயற்பாடுகள், நடமாட்டம் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

வகுப்பறை வழிமுறைகள் எனும் வகையில் வகுப்பறைச் செயன்முறைகளையும், வகுப்பறை விதிமுறைகளையும் விளைதிறனுடனும், வினைத்திறனுடனும் அமைத்துக் கொள்ள வேண்டும். இவற்றின் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாடு சிறப்பாக இடம்பெறுவதுடன் மாணவர்களுக்கு மிகுந்த ஊக்கலாகவும் அமையும்.

எனவே குறித்த நேரத்தில்/செயற்பாடுகளில்/நடத்தைகளில் பினபற்றப்படும்வழக்கம் வகுப்பறைச் செயன்முறை எனப்படும். உதாரணமாக மாணவர்களிடையே கற்றல் வளங்களைப் பரிமாறுதல், வகுப்பறைக்கு வெளியே செல்லுதல், வகுப்பறைக்குட் பிரவேசித்தல், தினவரவு பதிதல் என்பவற்றின் போது பின்பற்றப்படும் நடைமுறைகளைக் குறிப்பிடலாம். இவ்வாறான செயன்முறைகளைப் பின்பற்றுவதற்கான பயிற்சியும் பின்னூட்டலும் வழங்கப்பட வேண்டும். எனவே வகுப்பறைப்போதனையின் ஒன்றிணைந்த பகுதியாகிய இச் செயன்முறை வகுப்பறை முகாமைத்துவத்துக்கான ஒரு முதலீடாகும்.

வகுப்பறை விதிமுறைகள் வகுப்பறையில் மாணவர்களின் ஒழுங்கு முறைப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு உதவுகின்றன. விதிமுறைகள் நடத்தைகளின் பல்வேறு அம்சங்களுடன் தொடர்புடையவை. உருவாக்கப்படும் விதிமுறைகள் கற்றல் கற்பித்தலை மேம்படுத்தும் வகையில் அமைய வேண்டுமே தவிர அவை மாணவர்கள் மீது அதீத கட்டுப்பாடுகளை திணிப்பதாக அமையக் கூடாது. அதாவது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது ஏனையோரின் கற்கும் உரிமையைப் பாதித்தல், உடல் உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்துதல், உடைமைகளை சேதமாக்குதல் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தாத வகையில் விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் வகுப்பறை பிரச்சினைகள் இழிவாக்கப்படுதல், பொருத்தமான நடத்தை வெளிப்பாடு, ஆசிரியரின் கற்பித்தல் உரிமை பாதுகாக்கப்படுதல், மாணவர்களின் கற்கும் உரிமை பாதுகாக்கப்படுதல், மாணவர்களின உடல்,உள பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல், உடைமை கள் பாதுகாக்கப்படுதல் என்பன இடம் பெறும் நடத்தைகளுக்கும் அவற்றின் மூலம் ஏற்படும் விளைவுகளுக்குமிடையேயான காரணகாரியத் தொடர்புகளை மாணவர்களுடன் கலந்துரையாடி விதிமுறைகளை உருவாக்கி அவற்றை வகுப்பறையிலே காட்சிப்படுத்தி அவற்றை மாணவர்கள் பின்பற்றச் செய்வது சிறப்பானதாகும்.



வகுப்பறை முகாமைத்துவம் விளைதிறனுள்ளதும், வினைத்திறன் மிக்கதுமான கற்பித்தலுடன் பின்னிப்பிணைந்ததாகும். ஆசிரியரின் கற்பித்தல் மாணவர்களில் பொருத்தமான நடத்தைகளை மேம்படுத்தி கற்றலை உயர்மட்டத்துக்கு இட்டுச் செல்லுதல் வேண்டும். எனவே ஆசிரியர் தனது கற்பித்தல் செயற்பாட்டுக்குரிய பாடத்தினை சிறப்பாகத் திட்டமிட்டு வடிவமைத்தல் வேண்டும். பாடஅறிமுகம், பாட உளளடக்கத்தின் தெளிவான விளக்கம், மாணவர்களின் விளக்கத்தினை சரியாக உறுதிப்படுத்துதல், பாடச் சுருக்கம், மதிப்பீடு, உசாத்துணை நூல்களின் பட்டியல் என்பன தொடர



கல்வித் தரிசனம்

பாக கவனம் செலுத்துவதுடன் பாடத்தினூடாக அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட விளைவை பாட இறுதியில் அடையக்கூடிய வகையில் திட்டமிடுதல் வேண்டும்.

பாட அறிமுகத்தின் போது கற்கப் போகும் விடயம் தொடர்பான முன்னறிவை ஆசிரியர் மீட்டு அறிந்து கொள்வதுடன் பாடத்தில் இரசனையுடன் ஈடுபடுவதற்கான ஊக்கலை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் நடைமுறை வாழ்க்கை அம்சங்களுடன் தொடர்புபடுத்திக் கற்பித்தல் சிறப்பானது ஆகும்.

பாட உள்ளடக்கமானது தெளிவாகவும் படிமுறை ஒழுங்கிலும் விளக்கமளிக்கப்பட வேண்டும். மாணவர்களின் சிந்தனை விருத்திப் படிநிலைகளுக்கேற்ப கற்றல் கற்பித்தல் துணைச் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதுடன் தெளிவான விளக்கம் பெற்றுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக மீளவலியுறுத்தல் வினாக்கள் வினாவுவது பயனுடையதாக அமையும். அமைப்பாக்கப்பட்ட வகையில் முழுமையாக பாடத்தினை நோக்குவதுடன் பாடங்களின் நோக்கங்களை அறியச் செய்தல், பாட உள்ளடக்கத்தின் முக்கிய கூறுகளை விபரித்தல், உள்ளடக்கத்தின் கருத்துக்கள், அவற்றுக்கிடையிலான இணைப்புக்கள் குறிப்பிடப்படுவதுடன் முன்வைக்கும் ஒவ்வொரு படிமுறையிலும் சாராம்சம் குறிப்பிடப்படுதல், பாடமுடிவில் முழுமையான சாராம்சத்தை வெளிக்கொண்டு வருதல் என்பவற்றையும் கொண்டமைதல் பயனுடையதாகும்.

மேலும் தெளிவான விளக்கத்தின் பின்னர் மாணவர்களை தனியாகவும் குழுவாகவும் பயிற்சிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். இதன் மூலம் அடிக்கடி ஆசிரியரிடமிருந்து பின்னூட்டல்களையும் திருத்தங்களையும் பெறுவர். வழிகாட்டப்பட்ட பயிற்சிகள் மூலம் கற்கும் ஆற்றல், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், விமர்சன நோக்கில் சிந்திக்கும் ஆற்றல் ஏற்படும் விளைதிறனுள்ள கற்றலை உறுதிப்படுத்துவதற்கான மாணவர்களுக்கு சுயமான பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இச் சுய பயிற்சிகள் வகுப்பறையிலோ அன்றி வீட்டிலோ இடம்பெறலாம். எனினும் அவற்றை ஆசிரியர் திருத்திப் பின்னூட்டல் வழங்குதல் வேண்டும்.

மேலும் மாணவர்கள் கற்ற விடயங்களை வாராந்தம், மாதாந்தம் மீட்டல் வேண்டும். இதனூடாக பொருத்தமான மீள வலியுறுத்தல்களை வழங்கி மாணவர்களில் நினைவு கூரும் ஆற்றலையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். வகுப்பறையில் உள்ள சகல மாணவரகளும் துலங்குவதற்கான வாய்பபுக்கள் பின்னூட்டல்கள், தனிப்பட்ட ஈடுபாடு என்பவற்றை சமமாக வழங்க வேண்டும். மாணவர்களிடையே ஆசிரியர் பாரபட்சம் காட்டுதல் கூடாது. குறைந்த அடைவைப் பெறும் மாணவர்களையும் கற்கத் தூண்டுதல் வேண்டும். மாணவர்களிடம் முயற்சிக் குறைபாடே பின்னடைவுக்கான காரணம் என்ற விளக்கத்தை ஏற்படுத்த வேண்டும் தேவையான வளங்களையும் ஆற்றலையும் முயற்சியுடன் பயன்படுத்திக் கற்றலில் ஈடுபட வேண்டும். சுய ஆற்றலை குறைத்து மதிப்பிட வாய்ப்பளிக்கக் கூடாது.

மாணவர்கள் கவனக் கலைப்புகளுக்கு உட்படாது வகுப்பறைக் கற்றலில் உள்ளார்ந்த ஊக்கலுடன் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களும், வளவசதிகளும் வகுப்பறையில் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மாணவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதற்கான வாசிப்பு உபகரணங்கள், செயற்பாட்டு மேசை, செயலட்டைகள் போன்றன ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் வகுப்பறையில் இல்லாத வேளைகளிலும் ஒழுங்கீனமான நடத்தைகளில் ஈடுபடாது குழுவாகவும், தனியாகவும் கற்றலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் தமது பிரச்சினைகளை அச்சமின்றி வெளிப்படுத்தக் கூடிய வகையிலும் அவற்றுக்கான தீர்வுகளை ஆற்றுப்படுத்தல்களையும் மேற்கொள்பவராகவும் இரகசியம் பேணுபவராகவும் பிள்ளைகளின் நம்பிக்கைக்குரியவராகவும் ஆசிரியர் விளங்க வேண்டும். இவ்வாறு செயற்படுவதன் மூலம் மாணவர்களின் ஒழுங்கீனமான நடத்தைகளுக்கான அடிப்படைகள் கண்டறியப்பட்டு தீர்வுகள் வழங்கப்படும் போது ஒழுங்கீனமான நடத்தைகளை சீராக்கம் செய்ய முடிவதுடன் கற்றலுக்கான வழிகாட்டல்களையும் ஊக்கலையும் வழங்கி உயர்ந்த அடைவுமட்டத்தைப் பெற முடியும்.

வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்களிடம் நல்ல சிந்தனைகளைத் தூண்டக் கூடியதும் அவர்களால் பின்பற்றப்படக் கூடியதுமான நற்சிந்தனைக் கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, காட்சிகள் மூலமாகவோ இடம்பெறச் செய்தல் வேண்டும். அத்துடன் நல்ல விழுமியப் பண்புகள் கொண்ட கதைகள் வாசிக்கவும் அவற்றின் மூலம் விளங்கிக் கொண்ட விடயங்களை வெளிப்படுத்தவும் அவ்வாறான கதைகளை ஆக்கவும் வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். சமய நடைமுறைகளை அறியவும், அவற்றைப் பின்பற்றவும் சரியான வழிகாட்டல்களும் வாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டும். பழக்கவழக்கங்கள், உணவு, உடை போன்ற தமது கலாசார அம்சங்களை மதிக்கவும் பின்பற்றவும், பேணிப் பாதுகாக்கவும் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

இவை அனைத்து அம்சங்களுடனும் ஆசிரியரிடம் உயரிய எதிர்பார்ப்புக்கள் இருத்தல் வேண்டும். சுய நம்பிக்கை இருத்தல் வேண்டும். தன்னுடைய மாணவர்களிடம் உயர் அடைவுமட்டத்தை ஏற்படுத்த முடியும். ஒவ்வொரு மாணவனிடமும் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்கொண்டு வர முடியும். மாணவர்களிடம்நேர் மனப்பாங்கையும், ஒழுக்கப் பாங்கான நடத்தை மாற்றத்தையும் விருத்தி செய்ய முடியும். எல்லா மாணவர்களையும் சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாக்க முடியும் என்ற வகையிலான ஆசிரியர்களுடைய நடத்தை மாற்றம் சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்துக்கு வழிவகுக்கும்.

திருமதி.செ.டினேஸ்
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம்.

# மல்லையாவுக்கு பிடியாணை

ஐ.டி.பி.ஐ. வங்கியில் ரூ.900 கோடி கடன் பெற்று, சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டது தொடர்பான வழக்கில், 'பீர் சாம்ராஜ்ய சக்கரவர்த்தி' விஜய் மல்லையாவுக்கு பிணையில் வெளிவர முடியாத, திகதி குறிப்பிடாத பிடியாணை பிறப்பித்து சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

**மனு**

இதற்கிடையே விஜய் மல்லையாவுக்கு எதிராக பிணையில் வெளி வரமுடியாத பிடியாணை பிறப்பிக்க வேண்டும் என்று அமுலாக்கப்பிரிவு சார்பில் சிறப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த சிறப்பு நீதிபதி பி.ஆர். பாவகே தீர்ப்பை 18ஆம் திகதிக்கு ஒத்தி வைத்திருந்தார். அதன்படி, இந்த மனு விசாரணைக்கு வந்தது.

**சொத்து வாங்கவில்லை**

அப்போது, கிங்பிஷர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ஐடிபிஐ வங்கிக் கடனில் வெளிநாடுகளில் சொத்து ஏதும் வாங்கவில்லை, ரூ.430 கோடிக்கு சொத்து வாங்கியதாக கூறும் குற்றச்சாட்டுகள் தவறானவை, ஆதாரமற்றவை, விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைத்து வருகிறோம் என்று வாதாடினார்.

இதற்கு அமுலாக்கப் பிரிவு தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஹிதன் வெனாங்கோக்கர் வாதிடுகையில், 3 முறை அமுலாக்கப்பிரிவு சம்மன் அனுப்பியும் விசாரணைக்கு விஜய் மல்லையா ஆஜராகவில்லை, ஆதலால், அவரை கைது செய்ய பிடியாணை தேவை என்று தெரிவித்தார்.

**உத்தரவு**

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பாவகே, விஜய் மல்லையாவை இந்தியாவுக்குள் நுழைந்தவுடன் கைது செய்யும் விதமாக திகதி குறிப்பிடாத, பிணையில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.(இ-5)







## சுமுகமான முறையில் கோஹினூர் வைரத்தை திரும்பப்பெற தீர்மானம் மத்திய அரசு நடவடிக்கை



(டில்லி)

கடந்த 1849ஆம் ஆண்டு, இந்தியாவில் சீக்கிய சாம்ராஜ்யத்தை பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பனி படைகள் தோற்கடித்தன. சீக்கிய சாம்ராஜ்யத்தின் சொத்துகளையும் கவர்ந்து சென்றன. அப்படி எடுத்துச் சென்ற பொருட்களில், பழைமையான, பிரசித்திபெற்ற கோஹினூர் வைரமும ஒன்றாகும்.

ஒரு ஒப்பந்தம் மூலம், அது கிழக்கு இந்திய கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த 108 கரட் வைரத்தை இங்கிலாந்து மகாராணி விக்டோரியா அணிந்து வந்தார்.

இத்தகைய பின்னணி கொண்ட கோஹினூர் வைரத்தை இந்தியா திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியாவில் அவ்வப்போது கோரிக்கை எழுந்து வருகிறது.

இது தொடர்பாக உச்ச நீதமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அப்போது, உச்ச நீதிமன்றத்தில் பதிலளித்த மத்திய அரசு, கோஹினூர் வைரம், இங்கிலாந்து அரசால் திருடிச் செல்லப்படவும் இல்லை, வலுக்கட்டாயமாக எடுத்துச் செல்லப்படவும் இல்லை.

மகாராஜா ரஞ்சித் சிங்கால் பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது" என்று தெரிவித்தது.

இதனால், கோஹினூர் வைரம் மீதான உரிமையை இந்தியா விட்டுக் கொடுத்து விட்டதாக கருதப்பட்டது.

இந்நிலையில், மத்திய அரசின் நிலையில் ஒரே நாளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து இரவு மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது, கோஹினூர் வைரம் பற்றிய மத்திய அரசின் கருத்து, இன்னும் நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்படவில்லை.

ஆனால், ஊடகங்களில் தவறாக புரிந்து கொள்ளப்பட்டு செய்திகள் வெளியாகி உள்ளன. அந்த செய்தி, உண்மையின் அடிப்படையில் அமையவில்லை.

இந்த நேரத்தில், கோஹினூர் வைரத்தை சுமுகமான முறையில் மீட்டுக் கொண்டு வர எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அரசு மீண்டும் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறது.

இதில் சுமுக தீர்வு உருவாகும் என்று இந்திய அரசுக்கு நம்பிக்கை உள்ளது. இவ்வாறு மத்திய அரசு கூறியுள்ளது. (இ-5)

## அ.தி.மு.க., தி.மு.க. போன்று கொள்ளையடிக்கும் தகுதி எனக்கில்லை

### விஜயகாந்த் தெரிவிப்பு

தி.மு.கவுக்கும், அ.தி.மு.கவுக்கும் இருக்கும் கொள்ளையடிக்கும் தகுதி தனக்கு இல்லை என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

• தமிழக சட்டசபைக்கு தேர்தல் அடுத்த மாதம் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் நாளை தொடங்குகிறது.


இதையொட்டி அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து விஜயகாந்த் பேசினார்.

வாழப்பாடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய விஜயகாந்த், நான் எதிரிகளைக்கூட மன்னித்து விடுவேன். ஆனால், துரோகிகளை மன்னிக்கவே மாட்டேன்


விஜயகாந்த் முதலமைச்சர் ஆவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று சிலர் கேட்கின்றனர். பணத்தை கொள்ளையடிப்பது தான் தகுதி என்றால் அது உங்களிடம் தான் உள்ளது.

அந்த தகுதி என்னிடம் இல்லை. நான் நல்லவனா? கெட்டவனா? என்பதல்ல முக்கியம். ஆனால் எங்கள் கூட்டணி கட்சியில் இருக்கும் எல்லோரும் நல்லவர்கள். மக்களுக்கு துரோகம் செய்வது மன்னிக்கவே முடியாத குற்றம் என விஜயகாந்த் தெரிவித்தார். (இ-5)

### நீங்க காமராஜர்கிட்ட கேட்டீங்க, நான் உங்ககிட்ட கேக்குறேன்



## கருணாநிதியை சீண்டும் சீமான்



பெருந்தலைவரிடம் 65 வயதில் முதலமைச்சர் பதவி வேண்டுமா? என்று கேட்டீர்களே, அவருடைய பேரன் கேட்கிறேன், 94 வயதில் உங்களுக்குத் முதலமைச்சர் பதவி தேவையா? என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பினார்.

திருவாரூரில் நடைபெற்ற நாம் தமிழர் கட்சியின் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பளார் சீமான் பேசுகையில்,

கடந்த ஐந்தாண்டுகளில் கருணாநிதி ஒரு முறையாவது சடடப்பேரவைக்கு போனாரா? 94 வயதில் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்படுகிறார். நடக்க முடியலை, உட்கார முடியலை, பத்துப்பேர் பராமரிக்க தேவைப்படு கிறாரகள். எப்படி ஆட்சி செய்யப் போகிறார்.

65 வயதான பெருந்தலைவர் காமராஜரைக் கேட்கிறார் இந்த வயதில் உங்களுக்கு முதலமைச்சர் நாற்காலி வேண்டுமா? என்று. அதற்கு காமராஜர் சொல்கிறார். "அடபோப்பா, நீ உட்கார்ந்த நாற்காலியில் நான் உட்காருவேனா" என்று.

அந்தப் பெருந்தலைவரிடம் 65 வயதில் முதலமைச்சர் பதவி வேண்டுமா? என்று கேட்டீர்களே, அவருடைய பேரன் கேட்கிறேன், 94 வயதில் உங்களுக்குத் தேவையா? முதலமைச்சர் பதவி.

பெருந்தலைவர் காமராஜர் தான் இந்த நாட்டில் தூய்மையான நல்லாட்சி நடத்திய தலைவர். அவரையே கல்லூரி மாணவரான தெலுங்கர் சீனிவாசனைக் கொண்டு போய் நிற்க வைத்து தோற்கடித்தார்கள் தி.மு.கவினர்.

காமராஜரை சொந்த நிலத்தில் யார் தோற்கடித்தார்களோ, அவர்களை அவர்களின் சொந்த நிலத்தில் தோற்கடிக்க வேண்டும்.

அப்போதுதான் வரலாற்றில் இந்த நிலம் தாங்கி இருக்கின்ற பெரும்பழி தீரும. வஞ்சம் வைத்து தீர்த்தாண்டா தமிழன், தோற்கடிச்சு அனுப்பிட்டாண்டா தமிழன் என்று சொல்லுவதற்கு நீங்கள் வாய்ப்புத் தர வேண்டும்.

அ.தி.மு.க. அதுவே சரிந்து விழும். கருணாநிதியைத் தோற்கடிப்பதில் தான் நமது இனமானம் காக்கப்படும். மே 19ஆம் திகதி வாக்கு எண்ணும் போது சொந்தத் தொகுதியில் கருணாநிதி தோற்றார் என்கிற செய்தியைக் கேட்கும் போது நான் நினைபேன்,

என்னுடைய திருவாரூர் அபபன், ஆத்தா, சித்தப்பன், பெரியபபன் எல்லாம் உப்புப் போடடு சோறு தின்கிறார்கள் என்று. மானத் தமிழன் இருக்கிறான் என்று. இவ்வாறு சீமான் பரபபுரை மேற்கொணடார். (இ-5)

## கூட்டணிக் கட்சியின் சின்னம் தெரியாமல் குழம்பிய விஜயகாந்த்



கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த், அவரது கூட்டணி கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சின்னம் தெரியாமல் குழம்பியது தொண்டர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

தமிழகத்தில் எதிர்வரும் மே-16ஆம் திகதி நடைபெற உள்ள சட்டசபை தேர்தலை முன்னிட்டு, அனைத்து கட்சிகளும் தங்கள் கூட்டணிக்காக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஒசூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய விஜயகாந்த், அம்மாவட்ட தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் இருவரையும், இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் ஒருவரையும் அறிமுகம் செய்தார், பின்னர் தே.மு.தி.க. வேட்பாளர்கள் இருவரையும் ஆதரித்து முரசு சின்னத்தில் வாக்களிக்குமாறு கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை ஆதரித்து எந்த சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று சொல்ல திணறிய விஜயகாந்த் அரிவாளா? சுத்தியா? என அக்கட்சி வேட்பாளரிடம் கேட்டறிந்த பிறகு அரிவாள் சின்னத்தில் வாக்களிக்குமாறு தெரிவித்தார்.

இதனால் கூட்டத்தில் பங்கேற்ற தொண்டர்களிடையே அதிருப்தி ஏற்பட்டது. (இ-5)

## லண்டனை இலக்கு வைத்து

# நச்சு வாயு தாக்குதல் நடத்த ஐ.எஸ். திட்டம்

(லண்டன்)

**லண்டனில் நச்சுவாயு குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்த, ஐ.எஸ் தீவிரவாதிகள் திட்டம் தீட்டி இருந்தார்கள் என்று பெல்ஜியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**



அண்மையில் கைதான தீவிரவாதி ஒருவரை விசாரித்தவேளை, லண்டன் மத்திய நகரப் பகுதியில் தாம் தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்ததாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அவரிடம் இருந்து லண்டன் வரைபடம் மற்றும் பாரிஸ் வரை படங்களையும் பெல்ஜியப் பொலிஸார் கைப்பற்றியுள்ளார்கள்.

இதேவேளை அணு ஆயுதத்தை பெரும் விலை கொடுத்து ஐ.எஸ் தீவிரவாதிகள் வாங்கியுள்ளதாகவும் ஆனால் அதனை நகர்த்த சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து அவர்கள் காத்திருப்பதாகவும் அமெரிக்கா தற்போது எச்சரித்துள்ளது.

இந்நிலையில் ஐரோப்பிய தலை நகரங்கள் மற்றும் லண்டனை ஐ.எஸ் தீவிரவாதிகள் குறிவைத்து தாக்க மேலும் பல திட்டங்களை அவர்கள் தீட்டி வருவதாக ஐரோப்பிய ஒன்றிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## ஆப்கானில் தற்கொலைப்படை தாக்குதல் 64 பேர் உயிரிழப்பு; 329 பேர் படுகாயம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 64 பேர் உயிரிழந்தனர். 329 பேர் படுகாயம் அடைந்தனர்.

காபூலின் புல்-இ முகமது பகுதியில் அந்த நாட்டு உளவுத் துறை மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அலுவலகம் (என்.டி.எஸ்.) அமைந்துள்ளது. உயர் பாதுகாப்பு பகுதியான அங்கு நேற்று முன்தினம் காலை 9 மணி அளவில் ஒரு லொறி வந்தது.

வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட அந்த லொறியை செலுத்தி வந்த தற்கொலைப்படைத் தீவிரவாதி என்.டி.எஸ். அலுவலக வாயிலில் மோதி வெடித்துச் சிதறினான். அதைத் தொடர்ந்து அதிநவீன துப்பாக்கிகளுடன் அலுவலகத்துக்குள் நுழைந்த தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து கண்மூடித்தனமாக சுட்டுவிட்டு தப்பியோடிவிட்டனர்.

இந்த தாக்குதலில் 64 பேர் உயிரிழந்தனர். 329 பேர் படுகாயம் அடைந்தனர். என்.டி.எஸ். அலுவலகத்தை ஒட்டி குடியிருப்பு பகுதிகள் அதிகம் உள்ளன. போக்குவரத்து நெரிசல் மிகுந்த காலை நேரத்தில் 'லொறி குண்டு' வெடித்ததால் பொதுமக்களில் பலர் உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். (இ-5)




## அரசின் விமானத் தாக்குதலால் சிரியாவில் 44 பேர் உயிரிழப்பு

சிரியா அரசாங்கம் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 44 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இட்லிப் மாகாணத்தில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள இரு நகரங்களில் இந்த விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய 37 பேர் மாரத் அல் நுமன் பகுதியிலும் ஹவன் பெல் பகுதியில் 7 பேரும் உயிரிழந்துள்ளதாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூன்று சிறுவர்களும் உள்ளடங்குவதாக குறிப்பிடப்படுகின்றது. சிரியாவில் கடந்த 7 வாரங்களாக யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது மோதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நிலநடுக்கத்தால் ஈக்குவடோரில் 507 பேர் பலி

### 2500 பேர் படுகாயம்



தென்அமெரிக்க நாடான ஈக்குவடோரில் கடந்த சனிக்கிழமை மாலை 6.58 மணிக்கு மியூஸ்னி நகருக்கு 27 கி.மீ. தொலைவில் 19.2 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்து தாக்கியது.

ரிக்டர் அளவுகோலில் இது 7.8 புள்ளிகளாக பதிவான இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து சுமார் ஐம்பதுமுறை நில அதிர்வுகள் ஏற்பட்டன. இதன்விளைவாக, சுனாமி எச்சரிக்கை அறிவிக்கப்பட்டு, பின்னர் திரும்பப் பெறப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து மீட்பு மற்றும் பேரிடர் நிவாரணப் படையினர் களமிறங்கி மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதில் முழுக்கவனம் செலுத்தி வருகின்றனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு, வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்றிரவு நிலவரப்படி, இடிபாடுகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 507 ஆக உயர்ந்துள்ளது. 2,500-க்கும் அதிகமானவர்கள் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இதுதவிர, கட்டட இடிபாடுகளுக்கு அடியில் பல சடலங்கள் இன்னும் மீட்கப்படாமல் இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

## 6 வயதுச் சிறுவன் பலி சமந்தா பவர் இரங்கல்

( வோஷிங்டன் )

ஐ.நா. சபைக்கான அமெரிக்க தூதரக அதிகாரியின் கார் 6 வயது சிறுவன் ஒருவன் மீது மோதியதில் அச் சிறுவன் பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதரக அதிகாரியாக சமந்தா பவர் பணியாற்றி வருகிறார்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கேமரூனில் உள்ள அகதிகளை சந்திக்கவும், அங்கு ஆதிக்கம் செலுத்தி வரும் போகோஹராம் தீவிரவாதிகளை ஒடுக்குவது குறித்து ஆலோசனை மேற் கொண்டு வருகிறார்.

இந்நிலையில், கேமரூனில் உள்ள Maroua என்ற நகருக்கு செல்வதற்காக நேற்று முன்தினம் தனது வாகனத்தில் புறப்பட்டுள்ளார்.

சமந்தா பவருக்கு பின்னால் ஆயுதம் ஏந்திய சில பாதுகாப்பு வாகனங்களும் பின் தொடர்ந்துள்ளன.

தூதரக அதிகாரியை பார்ப்பதற்காக வழி நெடுகிலும் எண்ணற்ற பொதுமக்கள் வரிசையாக நின்று வேடிக்கை பார்த்துள்ளனர்.

அவ்வழியாக இந்த வாகனங்கள் மணிக்கு 60 கி.மீ வேகத்தில் சென்றுள்ளன.

அப்போது, வரிசையில் நின்றுருந்த 6 வயது சிறுவன் ஒருவர் திடீரென கூட்டத்திலிருந்து விலகி வீதியை நோக்கி வேகமாக ஓடியுள்ளான்.

சிறுவனை எதிர்பார்க்காததால், சமந்தா பவரை பின் தொடர்ந்து வந்த 6 ஆவது வாகனம் சிறுவன் மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில் சிறுவனுக்கு உடனடியாக அங்கேயே முதலுதவி அளிக்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஆனால், சிகிச்சை பலனளிக்காததால் அச் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த தூதரக அதிகாரியான சமந்தா பவர் சிறுவனின் குடும் பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துள்ளார். (இ-5)

## சீனாவில் அரசாங்க ரகசியங்களை விற்றவருக்கு மரண தண்டனை

சீனாவில் உள்ள சிச்சுவான் மாகாணத்தை சேர்ந்தவர் ஹுவாங் யு. அரசாங்க ரகசியங்களை பாதுகாக்கும் துறையில் தொழில் நுட்ப பணியாளராக வேலை செய்து வந்தார். இவர் மோசமான பணியாளர் என கண்டு பணி நீக்கம் செய்யப்பட்டார்.

ஆனால் அவர் பணியாற்றிய போது 1 1/2 இலட்சம் ரகசிய ஆவணங்களை தன்வசப்படுத்தி வைத்திருந்திருக்கிறார்.

பணி நீக்கம் செய்யப்பட்ட கோபத்தில் இணையதளம் வாயிலாக தன்னிடம் உள்ள அரசாங்க ரகசிய ஆவணங்களை விற்பனை செய்வதற்கு தயாராக இருப்பதாக வெளிநாட்டு உளவு நிறுவனம் ஒன்றுக்கு தகவல் அனுப்பினார். அதைத் தொடர்ந்து அந்த உளவு நிறுவன நிர்வாகம், அவரை பயன்படுத்தி கொண்டது. அவரை தென்கிழக்கு ஆசியாவிலும், ஹொங்கொங்கிலும் சந்தித்து 1 1/2 லட்சம் அரசு ரகசிய ஆவணங்களையும் பெற்றுக்கொண்டது. அந்த ரகசியங்களில் ஆளும் கம்யூனிஸ்டு கட்சி, இராணுவம், நிதி விவகாரங்கள் என பல விடயங்கள் அடங்கும்.

தன்னிடம் உள்ள ஆவணங்களை விற்று தீர்த்தவுடன் அரசாங்கத்தில் ரகசிய ஆவண துறையில் பணியாற்றி வந்த தனது மனைவி, மைத்துனர் ஆகியோரையும் குறி வைத்து, அவர்கள் மூலமும் ஆவணங்களை பெற்று விற்றார்.

அவர் அடிக்கடி வெளிநாடு பயணம் மேற்கொண்டதும், சொத்து குவிப்பில் ஈடுபட்டதும் தெரிய வந்ததும் பொலீஸார் அவரை கைது செய்தனர்.

அதைத் தொடர்ந்து அவருக்கு அரசாங்க ரகசியங்களை விற்ற குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-20.04.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.18 | 146.99 |
| பிரிட்டன் | பவுண்ட் | 205.42 | 212.72 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 161.87 | 168.33 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 148.11 | 154.29 |
| கனடா | டொலர் | 112.16 | 116.84 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 110.63 | 115.79 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.52 | 110.58 |
| இந்தியா | ரூபா | 2.1721 | ------- |
| சீனா | யுவான் | 22.2602 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6672 |
| குவைத் | டினார் | 477.0113 |
| ஓமான் | ரியால் | 373.7420 |
| கட்டார் | ரியால் | 39.5183 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3798 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1778 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 50 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 80 | 60 | 100 |
| தக்காளி | 100 | 60 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 80 | 100 |
| கோவா | 80 | 55 | 70 | 80 | 100 |
| கரட் | 100 | 90 | 100 | 120 | 100 |
| பூசணி | 30 | 15 | 30 | 40 | 100 |
| புடோல் | 60 | 35 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 90 | 100 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 140 | 80 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | — | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 180 | 100 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 160 | 100 |
| பீற்றூட் | 100 | 60 | 70 | 120 | 100 |
| கறிமிளகாய் | 100 | 40 | 80 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 250 | 100 | 120 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 25 | — | 50 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 20 | 50 |
| தேசிக்காய் | 350 | 400 | 300 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 20-40 | 40 | 30-40 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 100 | 140 | 160 | 300 |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | 200 |
| முள்ளங்கி | 100 | 30 | 40 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 30-50 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கப்பலுக்கு வெடி வைத்து கிட்டு தற்கொலை 161

...பின்னர் கப்பலில் சென்ற கிட்டுவைக் கடற்படையினர் கைது செய்தனர். இலங்கை அரசுடன் சமரசப் பேச்சில் கலந்துகொள்ள சென்றபோது அவர் கைது செய்யப்பட்டு உள்ளதாகத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கூறினார்.

அறிக்கை

இதுபற்றி வெளியிட்ட அறிக்கையில் அவர் கூறியிருந்ததாவது,

விடுதலைப்புலிகளின் இயக்கத் தலைவர்களில் ஒருவரான கிட்டுவை நடுக்கடலில் இந்திய கடற்படை கைது செய்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்திய எல்லையில் இருந்து 440 மைல்களுக்கு அப்பால் சர்வதேசக் கடலில் கிட்டு கப்பலில் சென்று கொண்டிருந்தார். *13.01.1993* அன்று இரவில் இந்திய கடற்படை வழிமறித்து அவரைக் கைது செய்துள்ளது. இந்த நடவடிக்கை சர்வதேச சட்டங்களை மீறிய அத்து மீறிய செயலாகும்.

கொழும்பில் நடைபெறவிருந்த சமரசப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளச் சென்று கொண்டு இருந்த கிட்டுவைக் கைது செய்ததன் மூலம் இந்திய அரசின் உள் நோக்கம் அம்பலமாகி இருக்கிறது. சிங்கள அரசு விடுதலைப்புலிகள் இடையே எத்தகைய சமரசமும் ஏற்படக் கூடாது என இந்திய அரசு நினைக்கிறது.

தமிழ் ஈழ மக்களின் சிறந்த தலைவர்களில் ஒருவரான கிட்டுவைச் சர்வதேச சட்டங்களையும் மீறி இந்திய அரசு கைது செய்தது தமிழர்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கிட்டுவை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால் தமிழகம் கொந்தளிக்கும் என எச்சரிக்கிறேன்.

இவ்வாறு நெடுமாறன் அறிக்கையில் கூறி இருந்தார்.

சென்னைக்கு

கிட்டு கைது பற்றி விடுதலைப்புலி தலைவர்களில் ஒருவரான லாரன்ஸ் திலகர் கூறியதாவது,

விடுதலைப்புலி தளபதி கிட்டு யாழ்ப்பாணத்தில் அமைதி ஏற்படுத்துவதற்காக ஒரு வெளிநாட்டு உதவியுடன் தயாரிக்கப்பட்ட சமரசத் திட்டத்துடன் யாழ்ப்பாணத்துக்குக் கப்பலில் சென்று கொண்டிருந்தார். அவரை இந்திய கப்பல் படையினர் கைது செய்தனர்.

இவ்வாறு லாரன்ஸ் திலகர் கூறினார்.

கிட்டு விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான எம்.வி. அகத் என்ற கப்பலில் வந்த போது அவரை இந்திய இராணுவம் பிடித்தது என்றும் விடுதலைப்புலிகள் கூறினார்கள்.

சர்வதேச கடல் எல்லையில் சென்ற கப்பலை இந்தியா தேவை இல்லாமல் வழிமறித்ததாக விடுதலைப்புலிகள் இயக்கம் குற்றம் சாட்டியது.

ஆனால் கிட்டு கைது செய்யப்படவில்லை என்று டில்லியில் உள்ள உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிட்டு பயணம் செய்த கப்பலில் ஏராளமான ஆயுதங்கள் உள்ளன என்றும் தன்னைப்பிடிக்க முயற்சி செய்தால் கப்பலையே வெடி வைத்து தகர்த்து விடுவேன் என்று கிட்டு மிரட்டுவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிட்டுவின் கப்பலை சென்னையை நோக்கி திரும்பும்படி கடற்படையினர் கட்டளையிட்டனர். அதன்படி கப்பல் திரும்பியது.

வெடி வைத்து தகர்ப்பு

சென்னைக்கு சுமார் 10 மைல் தூரத்தில் கப்பல் வந்து கொண்டிருந்தபோது கப்பலில் பெரிய வெடிச்சத்தம் கேட்டது. கப்பல் தீப்பிடித்து எரிந்தது.

இதைப்பற்றி டில்லியில் இராணுவ இலாக அதிகாரி கூறியதாவது,

கிட்டு பயணம் செய்த கப்பலில் நிறைய ஆயுதங்களும் வெடி பொருட்களும் இருந்தன.

கப்பலை மடக்கிக்கொண்டு வரும் போது அதிலிருந்த விடுதலைப்புலிகள் கப்பலை மூழ்கடிக்கும் எண்ணத்துடன் வெடி வைத்து விட்டனர்.

கடலில் குதித்தார்

தீப்பிடித்த கப்பலிலிருந்து 9 விடுதலைப் புலிகள் கடலில் குதித்தனர். அவர்களை இந்திய கடற்படை வீரர்கள் காப்பாற்றி நமது கப்பலுக்கு கொண்டு வந்து காவலில் வைத்தனர்.

விடுதலைப்புலி தளபதிகளில் ஒருவரான ஜெயச்சந்திரன் கடலில் மீட்கப்பட்ட 9 பேர்களில் ஒருவர். கைதான விடுதலைப் புலிகளில் கிட்டு இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

கிட்டு மரணம்

தீப்பிடித்த கப்பல் வெடித்துச் சிதறி கடலில் மூழ்கியது. மூழ்கிய கப்பலில் பலடன் வெடிகுண்டுகள், ஆயுதங்கள், வெடிமருந்துகள், கைக்குண்டுகள் இருந்தன.

மூழ்கிய கப்பலிலிருந்த கிட்டு உட்பட 10 பேர் வீர மரணம் அடைந்ததாக விடுதலைப்புலிகளின் ரேடியோ அறிவித்தது.

கர்னல் கிட்டு, துணை கர்னல், ஸ்ரீமேஜர், வேலன், கடற்புலிகள் ஜீவன், குணசீலன், ரோஷன், நாயகன், அமுதன், நல்லவன், சுஜீவன் ஆகியோர் மரணம் அடைந்ததாக விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவித்தது.



(தொடரும்)

# மகிந்த வங்குரோத்து யாப்பா குற்றச்சாட்டு!

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வங்குரோத்து அடைந்த கருத்துக்களை வெளியிட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.**



சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் இதனை தெரிவித்தார்.

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை கடந்த 2006 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவிடம் பெற்றுக் கொண்டேன்.

நான் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் கிடையாது என மகிந்த ராஜபக்ஷ கூறுவதில் எவ்வித உண்மையும் கிடையாது.

அண்மையில் தொலைக்காட்சி ஒன்றில் கருத்து வெளியிடுகையில் நான் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவன் கிடையாது என கூறியிருந்தார்.

மகிந்தவிடம் உறுப்புரிமை பெற்றுக் கொண்டதற்கு தொலைக்காட்சியில் கருத்து வெயியிடும் போது பின்னால் இருந்த கெஹலிய ரம்புக்வெல, காமினி லொக்குகே போன்றவர்களே சாட்சி.

மகிந்த கருத்து வெளியிடும் போது அங்கு பந்துல குணவர்தனவும் இருந்தார். நான் பந்துலவிற்கு முன்னதாகவே சுதந்திரக் கட்சியில் உறுப்புரிமை பெற்றுக் கொண்டேன்.

இவ்வாறான வங்குரோத்து அடைந்த கருத்துக்களின் ஊடாக எனது அரசியல் பயணத்தை சிதைக்க முடியாது என லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (இ-5)

# டி.வீ.உபுல் பற்றிய உண்மை நீதிமன்றில் அம்பலமாகும்

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு



தென் மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் டி.வீ. உபுல் பற்றிய உண்மை நீதிமன்றில் அம்பலமாகும் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண அமைச்சர் டி.வீ. உபுல் 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி தமக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியலுக்கு வரும் போது எவ்வித சொத்துக்களும் இன்றி வருவோர் இன்று கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனர்.

டி.வீ. உபுலின் சொத்துக்கள் தொடர்பில் நீதிமன்றில் உண்மைகள் அம்பலமாகும்.

கடந்த காலங்களிலும் எனக்கு எதிராக இவ்வாறான நட்டஈடு வழக்குகள் நிபந்தனைகள் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அவ்வாறான வழக்குகள் தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

டி.வீ. உபுலின் வழக்கு தொடர்பிலும் உண்மை நீதிமன்றின் ஊடாக வெளிப்படும் என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

லங்காபுத்தர அபிவிருத்தி வங்கியில் மாகாண அமைச்சர் உபுல் பெருந்தொகை பணத்தை கடனாகப் பெற்றுக் கொண்டு செலுத்தவில்லை என ரஞ்சன் ராமநாயக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் போது குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது எனவும் இதனால் தமது நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து 500 மில்லியன் நட்டஈடு வழங்குமாறு கோரி உபுல் வழக்குத் தொடர்ந்துள்ளார். (இ-5)

# எதிர்க்கட்சியில் அமர்ந்த காரணத்தினால் கட்சி நடவடிக்கைகளை உதாசீனம் செய்ய முடியாது

## அமைச்சர் துமிந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிர்க்கட்சியில் அமர்ந்த காரணத்தினால் கட்சி நடவடிக்கைகளை எவரும் உதாசீனம் செய்ய முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் எனக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோருவதற்கு முன்னதாக பந்துல குணவர்தன கண்ணாடி முன் சென்று, கடந்த ஒன்றரை வருடங்களாக என்ன செய்தார் என்பதனை அவர் பார்க்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பந்துல குணவர்தன உள்ளிட்ட சிலருக்கு எதிர்க்கட்சியில் அமர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இதன் அடிப்படையில் அவர்கள் கட்சியின் தீர்மானங்களுக்கு புறம்பான வகையில் செயற்பட அனுமதியளிக்கப்படாது.

கட்சிப் பணிகளை தவிர்க்க எவருக்கும் இடமளிக்கப்படாது.



எனினும், பந்துல குணவர்தன கடந்த காலங்களில் சுதந்திரக் கட்சியின் தேவைகளை பூர்த்தி செய்யாது வேறு தரப்பினரின் சார்பிலேயே குரல் கொடுத்து வருகின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களும், உறுப்பினர்களும் கட்சின் நலனை அடிப்படையாகக் கொண்டே செயற்பட வேண்டும்.

யாரேனும் ஓர் தொகுதி அமைப்பாளர் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளாவிட்டால் தொகுதியின் மாகாணசபை பிரதிநிதிகளுடன் இணைந்து அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அண்மையில் பந்துல குணவர்தன ஜனாபதியிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே துமிந்த திஸாநாயக்க இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### கற்பனைக் கவலைகள்

**கொஞ்சம் கவலைப்படத்தான் வேண்டும். ஆனால் கவலைப்படுவதையே முழுநேர வேல்லயாக வைத்துக் கொள்ளக் கூடாது.**

**நீங்கள் வேண்டுமானால் பாருங்கள் உங்கள் அனுபவத்தில் சந்தித்த எவரேனும் எதற்கும் கவலைப்படாத ஆசாமிகளாக இருந்தால் நிச்சயம் அவர்கள் பொறுப்பற்றவர்களாக இருப்பார்கள்.**

**எனவே பொறுப்புணர்வுடனும் கடமை உணர்வோடும் தொடர்புடையதுதான் கவலை என்பது.**

**நம்முடைய கவலைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது நடந்ததை எண்ணிக் கவ லைப்படுவது. இரண்டாவது நடக்கப் போவதை எண் ணிக் கவலைப்படுவது.**

**பெரும்பாலானோரின் கவலைகள் இரண்டாவது வகையாகவும் மொத்தக் கவலைகளுள் இதுவே பெரும் பகுதியாகவும் இருக்கிறது.**

**என்ன ஆகுமோ? எப்படி நடக்குமோ? இப்படி ஆகி விடுமோ? என்பன போன்ற கேள்விகள் இவர்கள் மனத்தில் திரும்பத் திரும்பத் தோன்றிப் பாடாய்படுத்திக் கொண்டிருக்கும்.**

**இது மனப் பக்குவம் அற்ற நிலை.**

**அர்த்மற்ற நினைப்புக்களையும் விபரீதக் கோணங்களையும் கற்பனை செய்து பார்ப்பதால் இருக்கக் கூடிய சிறிதளவு நிம்மதியும் போய் விடுகிறது. இத்தகைய எண்ணங்கள் நம் கவலைத் தீயை எண்ணெய் ஊற்றி மேலும் வளர்க்கின்றன.**

**சில சமயம் நாம் பயங்கரமாக கற்பனை செய்து வைத்திருந்த விடயங்கள் புஸ் என்று போய் விடுவதை நம் அனுபவத்திலேயே பார்க்கிறோம்.**

**இதை நாம் அனுபவித்து உணர்ந்த பிறகும் எல்லாமே பயங்கரத்தில் முடியும் என்று கற்பனை செய்வானேன்?**

**அறிகுறிகளைக் காண்பித்து விட்ட ஒரு கவலைக் குரிய அம்சம் அல்லது செயல் எப்படியெல்லாம் ஆகும் என்று சிந்திக்கலாம். இது தீர்க்கதரிசனம் என்னும் வகையில் அமையலாமே தவிர நம்மை நாமே கலவரப்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்து விடக் கூடாது.**

**இப்படி நடந்தால் இன்னது செய்ய வேண்டும் என்பது போன்ற மாற்று ஏற்பாடுளை சிந்தித்து வைத்து விட்டு மற்ற வேலைகளைக் கவனிக்கத் தயாராகி விட வேண்டும்.**

**அல்லது ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி விடலாம்.**

**அதை விட்டு விட்டு நடப்பது நடந்தே தீரும், நம்மால் எதுவும் செய்து விட முடியாது என்று கையைக்கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தால் கவலை சுழலின் இலக்குக்கு உள்ளாவது உறுதி.**

**எதையும் சமாளிக்கும் திறனும் சக்தியும் நம்மிடம் உள்ளது என்று நம்ப வேண்டும். தன்னம்பிக்கை உள்ள வனைக் கண்டு கவலைகள் கவலையுறுகின்றன-இவனை நம்மால் ஒன்றுமே செய்ய முடியவில்யே என்று.**

**ஆக விபரீதமான கற்பனைகளால் கவலைகளை வளர்த்துக் கொண்டு நமக்கு நாமே எதிரிகளாகும் நிலையை விட்டு விட்டு துணிவாலும் தன்னம்பிக்கையாலும் உள்ளத்தை உரப்படுத்திக் கொண்டு கவலைக்கு எதிரிகளாகும் நிலைக்கு நாம் விரைந்து தயாராக வேண்டும்.**

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

1414

## மரத்தடி உயரத்திற்கு



பெரியகுளம் கிராமத்தில் வசிக்கும் பரசுராம் என்ற உழவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் சரியான முட்டாள். தன் மகனின் இயல்பை அறிந்த பரசுராம் எங்கு சென்றாலும் மகனைத் தன்னுடன் அழைத்துச் செல்வது இல்லை.

ஒருநாள்-

"உனக்கு ஒரு வேலை தந்தால் பொறுப்பாகச் செய்வாயா?" என்று கேட்டார்.

"அப்பா! நீங்கள்தான் என்னை முட்டாள் என்று நினைத்து எந்த வேலையும் தருவது இல்லை. என் திறமையைக் காட்டி உங்களிடம் நல்ல பெயர் வாங்குகிறேன். என்ன வேலை? சொல்லுங்கள்" என்று கேட்டான் மகன்.

"நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நம் வீட்டின் பின்புறம் உள்ள மாமரத்தின் உயரத்திற்கு கதிரவன் எப்போது வருகிறது என்று பார். நம் கன்றிற்கு உணவிட வேண்டிய நேரம் அது. அதன் உணவைத் தொட்டியில் கரைத்து வைத்து விட்டால் அது சாப்பிட்டுவிடும். இதுதான் நீ செய்ய வேண்டிய வேலை" என்று சொல்லி விட்டு சென்றுவிட்டார்.

"தந்தை சொன்னதை அப்படியே நிறைவேற்ற வேண்டும். அவரிடம் நல்ல பேர் வாங்க வேண்டும்" என்று நினைத்தான் முட்டாள் மகன்.

தோட்டத்தில் இருந்த மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். மரத்தின் உயரத்திற்கு கதிரவன் வந்ததும் எழுந்தான். கன்றிற்குத் தேவையான உணவைத் தொட்டியில் கரைத்தான்.

இதைப் பார்த்ததும் கன்றுக் குட்டி அவன் அருகே வந்தது. ஆனால், அவனோ தொட்டியைத் தூக்கியபடி மரத்தில் ஏறினான். அந்தத் தொட்டியை மரத்தில் இருந்த கிளையில் கட்டினான்.

பசியால் வாடிய கன்றுக் குட்டி மரத்திலிருந்த தொட்டியைப் பார்த்தது. வேறு வழியின்றி அந்த மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது.

மரத்தின் மேலிருந்த அவன், "உன் உணவு இங்கே இருக்கிறது. மரத்தின் மேல் ஏறி வந்து சாப்பிடு" என்று கன்றுக் குட்டியைப் பார்த்து குரல் கொடுத்தான்.

ஆனால் கன்றுக் குட்டி சுற்றிச் சுற்றி வந்ததே தவிர மரத்தில் ஏறவில்லை. கோபம் கொண்ட அவன் மரத்தின் கிளைகளை உலுக்கியவாறு உரத்த குரலில், "மரத்தில் ஏறு" என்று கத்தினான்.

கிளைகள் உலுக்கப்பட்டதால் அதில் இருந்த எறும்புகள் கூட்டமாக அவனைக் கடிக்கத் தொடங்கின. வலி தாங்க முடியாமல் தவித்த அவன் மரத்தில் இருந்து கீழே இறங்கத் தெரியாததால், தலைகுப்புறக் கீழே விழுந்தான்.

அருகே வந்த கன்றுக் குட்டி அவன் வயிற்றை நாவால் நக்கியது.

எரிச்சல் அடைந்த அவன், "உனக்கு உரிய உணவை மரத்தில் ஏறி உண்ணாமல் என்னையா நக்குகிறாய். உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கத்தியவாறு பக்கத்தில் கிடந்த தடியால் கன்றுக் குட்டியை ஓங்கி அடித்தான்.

கன்றுக் குட்டி அங்கேயே செத்து விழுந்தது.

வீடு திரும்பிய உழவன் கன்றுக் குட்டி இறந்து கிடப்பதையும், கிளையில் தொட்டி மாட்டப்பட்டு இருப்பதையும் கண்டான். அதிர்ச்சி அடைந்து, "என்னடா நடந்தது?" என்று மகனைக் கேட்டான்.

"அப்பா! நீங்கள் சொன்னபடியே கதிரவன் மரத்தின் உயரம் வந்ததும் கன்றுக்குப் போட வேண்டிய உணவைத் தொட்டியில் கரைத்தேன். பிறகு அந்தத் தொட்டியை இந்த மரத்தின் கிளையில் மாட்டினேன்.

நான் என்ன முயற்சி செய்தும் இந்தக் கன்றுக்குட்டி மரத்தின் மேல் ஏறவில்லை. கோபத்தில் நான் இதை அடித்தேன்," என்று நடந்ததைச் சொன்னான்.

"மகனின் முட்டாள்தனத்தால் கன்றுக் குட்டியை இழந்தேனே..."என்று தலையில் அடித்துக் கொண்டார் பரசுராம்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- கி.மு 753 - ரொமூலஸ் மற்றும் ரேமுஸ் இருவரும் உரோம் நகரை அமைத்தனர்.
- கி.மு 43 - ரோமப் பேரரசு: ஆவுலஸ் ஹேர்ட்டியஸ் உடன இடம்பெற்ற சமரில் மார்க் அந்தோனி மீண்டும் தோற்றான். ஆனால், ஹேர்ட்டியஸ் இச்சம ரில் கொல்லப்பட்டான்.
- 1509 - ஏழாம் ஹென்றியின் இறப்புக்குப் பின்னர் அவனது மகன் எட்டாம் ஹென்றி இங்கிலாநதின் மன்னனாக முடிசூடினான்.
- 1526 - பானிப்பட்டில் முதலாவது போர் டில்லியின் சுல்தானுக்கும் தைமூர் வம்சத்தைச் சேர்ந்த பாபருக்கும் இடையில் இடம்பெற்றது. பாபர் இந்தியாவில் மொகலாயப் பேரரசை நிறுவினான.
- 1792 - பிரேசில் நாட்டின் விடுதலைக்குப் போராடிய டைராடெண்டெஸ் தூக்கிலிடப்பட்டான்.
- 1863 - கடவுளின் தூதர் தாமே என பகாவுல்லா பகிரங்கமாக அறிவித்தார். ரித்வான் தோட்டத்தில் செய்த இந்த அறிவிப்பு நாள் உலகம் முழுவதும் உள்ள பஹாய்களால் 'ரித்வான் முதல்' நாள் என விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது.
- 1916 - இலங்கையில் அமெரிக்க மிசனறிகள் ஒன்று கூடி முதன் முதலில் ஒரு திருச்சபையை ஆரம் பித்தனர்.
- 1822 - இலங்கையில் அமெரிக்கத் திருச்சபையின் குருக்களாக (pastor) முதற்தடவையாக உள்ளூரில இருந்து தெரிவு செய்யப்பட்டனர். ஜோர்டன் லொட்ஜ், நத்தானியேல் நைல்ஸ், சார்ல்ஸ் ஹொட்ஜ், எபனேசர் போர்ட்டர் ஆகியோர் தெரிவானார்கள்.
- 1944 - பிரான்சில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் சோவியத் படைகள் ஜேர்மனியின் உயர் தலைமைப பீடத்தைத் தாக்கினர்.
- 1960 - பிரசீலியா பிரேசிலின் தலைநகராக ஆக்கப்பட்டது.
- 1967 - கிரேக்கத்தில் பொதுத்தேர்தலுக்கு சில நாட்கள் இருக்கையில் இராணுவத் தளபதி ஜோர்ஜ் பப்படபவுலோஸ் ஆட்சியைக் கைப்பற்றி அடுத்த ஏழாண்டுகளுக்கு பதவியில் இருந்தார்.
- 1975 - வியட்நாம் போர்: தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நூயென்வான் டியூ சாய்கோனை விட்டு வெளியேறினார்.
- 1989 - பெய்ஜிங் நகரில் தியனன்மென் சதுக்கத்தில் கிட்டத்தட்ட 100,000 மாணவர்கள் சீர்திருதத்த் தலைவர் ஹூ யாபாங்கின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தத் திரண்டனர்.
- 1994 - சூரியக் குடும்பத்துக்கு வெளியே கோள்கள் இருப்பதை முதன் முதலில் வானியலாளர் அலெக்சாண்டர் வோல்ஸ்க்சான் அறிவித்தார்.

### பிறப்புகள

- 1837 - பிரெட்ரிக் பேஜர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1922)
- 1864- மக்ஸ் வெபர், ஜேர்மனிய சமூகவியலாளர் (இ. 1920)
- 1882 - பேர்சி பிரிட்ஜ்மன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1961)
- 1889 - பவுல் காரெர், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1971)
- 1926 - இரண்டம் எலிசபெத், ஐக்கிய இராச்சியத்தின் மகாராணி

### இறப்புகள்

- 1910 - மார்க் டுவைன், அமெரிக்க எழுத்தாளர் (பி. 1835)
- 1938 - முகமது இக்பால், பிரித்தானிய இந்தியாவின் முஸ்லிம் கவிஞர் (பி. 1877)
- 1946 - ஜான் மேனார்ட் கெயின்ஸ், பிரித்தானியப் பொருளியலாளர் (பி. 1883)
- **1964 - பாரதிதாசன், புரட்சிக் கவிஞர், பாவேந்தர் (பி. 1891)**
- 1965 - எட்வர்ட் ஆப்பில்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)

### பாரதிதாசன்



பாரதிதாசன் ஏப்ரல் 29, 1891 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பாண்டிச்சேரியில் (புதுச்சேரியில்) பிறந்து பெரும் புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம். தமிழாசிரியராக பணியாற்றிய இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார்.

பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் பரவலாக அழைக்கப்படுபவர். இவர் குயில் என்னும் கவிதை வடிவில் ஒரு திங்களிதழை நடத்தி வந்தார்.

இவர் சிறுவயதிலேயே பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும் தமிழ்ப் பள்ளியிலேயே பயின்ற காலமே கூடியது. தமது பதினாறாம் வயதிலியே கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். தமிழ் மொழிப் பற்றும் முயற்சியால் தமிழறிவும் நிறைந்தவராதலின் இரண்டாண்டில் கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்வுற்றார். பதினெட்டு வயதிலேயே அவரின் சிறப்புணர்ந்த அரசியலார் அவரை அரசினார் கல்லூரித் தமிழாசிரியாரானார்.

இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே சிறுசிறு பாடல்களை அழகாகச் சுவையுடன் எழுதித் தமது தோழர்கட்குப் பாடிக் காட்டுவார்.

**"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்**
**தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத்**
**தமிழெங்கள் உயிருக்கு நேர்"** எனும் வரிகள் புகழ்பெற்றவை.

### பனாமா ஆவணக் கசிவு

# பதுக்கல் பேர்வழிகளை பாதுகாக்கும் புதிய அரசு

## விதுர எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பனாமா ஆவணம் மூலம் வெளிக் கொணரப்பட்ட பதுக்கல் பேர்வழிகளை பாதுகாக்க புதிய அரசாங்கம் தீவிர முயற சியில் இறங்கியுள்ளதாக நாடாளு மன்ற உறுப்பினர் விதுர விக்கிரம நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.**



புத்தாண்டை முன்னிட்டு ஹொரண ஸ்ரீலங்கா சுதந்தி ரககட்சி அலுவலகத்தில் நடை பெற்ற பொதுமக்கள் சந்திப் பில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரை யாற்றிய விதுர விக்கிரமநா யக்க, பனாமா ஆவணங்கள் மூலம் வெளிக் கொணரப்ப ட்ட ஏனைய நாடுகளின் அமை ச்சர்கள், பிரதமர்கள் தற் போது ராஜினாமா செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இலங்கையில் அவ்வாறு பணம் பதுக்கிய பேர்வழிகளை பாதுகாக்க இந்த அரசாங்கம் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. திருட்டுப் பேர்வழிகள் எங்கி ருந்தாலும் தங்கள் திருட் டைத் தொடரவே செய்வர்.

ஆனால் அரசாங்கம் இநத விடயத்தில் பொதுமக்களை ஏமாற்ற முடியாது. இலத்திர னியல்ஊடகங்களும், ஏனைய தகவல் தொடர்புச்சாதனங் களும் தகவல்களை ஆதாரங் களோடு பகிரங்கப்படுத்தி விட்டார்கள். எனவே பொது மக்களை ஏமாற்ற முனை யும் அரசியல்வாதிகளே ஏமா ந்து போவார்கள்.

வற் வரி அதிகரிப்பு குறி த்து ஜனாதிபதி தனக்கு எது வும் தெரியாது என்று சொல் கின்றார். இதிலிருந்தே இந்த அரசாங்கத்தின் நல்லிணக் கம் தெளிவாக விளங்குகின் றது. ஆனால் நல்லிணக்க அரசாங்கம் என்று பெயரள வில் மட்டும் அழைத்துக் கொள்கின்றார்கள். உண் மையில் அப்படி எதுவும் இல்லை என்றும் விதுர விக் கிரமநாயக்க தெரிவித்து ள்ளார். (இ-5)

## மிகச் சிறந்த அமைச்சுப் பதவிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வசமே

### முதலமைச்சர் இசுரதேவப்பிரிய

(கொழும்பு)



தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் மிகச்சி றந்த அமைச்சுப் பதவிகளை சுதந்திரக் கட்சி அமைச்சர் களுக்கு ஜனாதிபதி பெற்றுக் கொடுத்துள்ளதாக முதலமை ச்சர் இசுர தேவப்பிரிய தெரி வித்துள்ளார்.

மேல் மாகாண முதலமைச சில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப் பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

தொடர்ந்தும் கருத்து வெளி யிட்டுள்ள அவர், முன்னைய ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அமைச்சர வையின் மிகச் சிறந்த அமை ச்சுப் பதவிகள் ஐ.தே.க விலிருந்து கட்சி தாவி வந்த வர்களுக்கே வழங்கப்பட் டது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கொண் டுள்ள தேசிய அரசாங்கத் தின் மிகச் சிறந்த அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி சுதந் திரக் கட்சி அமைச்சர்களுக் குப் பெற்றுக் கொடுத்துள் ளார்.

இதன் மூலம் அவர் சுதந் திரக் கட்சி ஆதரவாளர்களை கைவிட்டுள்ளதாக முன்வைக் கப்படும் குற்றச்சாட்டுகள் எத்தகையது என்பதைப் புரி ந்து கொள்ளலாம்.

தற்போது சுதந்திரக் கட்சி யின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய ற்படுகின்றார்.

அவருடன் இணைந்து கட்சியை முன்னேற்றப் பாதை யில், வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லும் வகையில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் எதிர்வரும் மே தினக் கூட் டங்களில் ஒற்றுமையாக கலந்து கொள்வர்கள் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் முதலமைச்சர் இசுர தேவ ப்பிரிய மேலும் தெரி வித்துள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 697

Search for people, places and things | Nagendram Home

**கவி**




**தர்மசிலன்**




**அச்சு**





**பிறேம்குமார்**




**நிசாந்தன்**

நீரை சேமித்தல்



**சிந்து**

இப்பல்லாம் பொண்டாட்டி கிட்ட
நல்ல பேர் வாங்கணும்னா
கொஞ்சநேரம் மொபைலை
நோண்டாம இருந்தாலே போதும்!

- காளிமுத்து

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விமர்சனம் செய்வது மட்டும் ஊடகங்களின் கடமையல்ல

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்தை விமர்சனம் செய்வது மட்டும் ஊடகங்களின் கடமையாக அமையாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில ஊடக நிறுவனங்கள் எந்தவிதமான உறுதிப்படுத்தல்களும் இன்றி செய்திகளை வெளியிடுகின்றன.

என்னைப் பற்றியும் இவ்வாறான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

செய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் இந்த செய்தி உண்மையா, இல்லையா என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டியது ஊடகங்களின் கடமை அல்லவா?

அரசாங்கத்தை விமர்சனம் செய்வது மட்டுமே ஊடகங்களின் கடமை என்றாகாது.

அரசாங்கத்தின் மெய்யான நிலைப்பாட்டை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் போன்று ஊடகங்களுக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்கப் போவதில்லை.

அவ்வாறான ஓர் இழிநிலைக்கு எந்த சந்தர்ப்பத்திலும் இந்த அரசாங்கம் செல்லாது.

நாட்டின் மக்களின் நலனுக்காக சரியான தகவல்களை வழங்க வேண்டியது ஊடகங்களின் தார்மீகப் பொறுப்பாகும்.

இலத்திரனியல் ஊடகங்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள ஊடக அனுமதிப்பத்திரமானது மக்களின் சொத்தாகும்.

மக்களின் நன்மைக்காக சரியான தகவல்களை வழங்க ஊடகங்கள் அந்த அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சில ஊடகங்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் செயற்படுவதில்லை.

அரசாங்கம் வழங்கியுள்ள ஊடக சுதந்திரத்தை சிறந்த முறையில் ஊடகங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-5)

# கொழும்பில் உள்ள கழிவுகளை புத்தளத்திற்கு கொண்டு செல்ல ஏற்பாடு

## புகையிரத கொள்கலன்களில் அனுப்பத்திட்டம்

(கொழும்பு)

15 பில்லியன் ரூபா பெறுமதியான செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு கொலன்னாவ பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் புத்தளம் பகுதியில் புதைப்பதற்கான நடவடிக்கைகள் இன்னும் மூன்று மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுமார் 700 மெற்றிக் தொன் கழிவுப் பொருட்கள் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்றன.

மேற்படி திட்டத்தின் மூலம் ஒரு நாளில் இரண்டு தடவைகளில் புகையிரதம் மூலம் கொள்கலன்களில் கழிவுப் பொருட்கள் புத்தளத்தில் புதைக்கப்படுவதற்கு வழியேற்படுத்தப்படுவதற்காக நகர மற்றும் மேற்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிகால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் சுமார் 3 கிலோ மீற்றர் பிரதேசத்தில் இருந்து தனியார் சீமெந்து கம்பனி ஒன்றினால் கற்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ்வாறான கழிவுப் பொருட்கள் புத்தளம் எல்லைப் பகுதியான வில்பத்து தேசிய சரணாலயத்திற்கு அருகில் புதைக்கப்பட்டு வந்தது. சுற்றுச் சூழலில் ஏற்படுகின்ற பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு இத் திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

மீதோட்ட முல்லை மற்றும் ஊறு கொடவத்தை பகுதிகளுக்கிடையிலான புகையிரத சேவையை பிரதான பாதையுடன் இணைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

அத்துடன் ஒவ்வொன்றும் 20 அடி நீளமான 26 கொள்கலன்கள் கழிவுகளை அகற்றும் தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படவுள்ளன.

ஒரு நாளைக்கு 13 கொள்கலன்கள் ஒரு தடவையில் அனுப்பப்படவுள்ளன.

கொள்கலன்களில் இடப்பட்டு புத்தளத்திற்கு அனுப்பப்படுவதற்கு முன்னதாக அவை இயந்திரத்தால் நெரிக்கப்பட்டு பொருத்தமான வகையில் மீதோட்ட முல்லைக்கு அனுப்பப்படும் என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (3)

# கொழும்பு பங்குச் சந்தையில் பாரிய வீழ்ச்சி! வருடமொன்றுக்குள் 25 ஆயிரம் கோடி இழப்பு

கொழும்பு பங்குச் சந்தை கடந்த ஒரு வருடகாலப் பகுதிக்குள் 25 ஆயிரத்து 700 கோடி ரூபா பெறுமதி இழப்பை எதிர்கொண்டு பாரிய வீழ்ச்சிக் குள்ளாகியுள்ளது.

இதற்கேற்ப ஒரு வருடத்துக்கு முன்னர் 2931 பில்லியன்களாக இருந்த பங்குச் சந்தையின் மொத்தப் பெறுமதி தற்போது 2674 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளமை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

அத்துடன் கடந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் கொழும்பு பங்குச் சந்தையின் சராசரி பங்குவிலை 6914 ரூபாவிலிருந்து 6276 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது 638 ரூபா பெறுமதி வீழ்ச்சியாகும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகையில் வீழ்ச்சி மற்றும் அந்நிய முதலீடுகள் மீளப் பெறப்பட்டமை போன்ற காரணிகளே பங்குச் சந்தை வீழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# செய்தித்துளிகள்

## பல்கலையில் அதிக மாணவர்களை இம்முறை இணைக்க நடவடிக்கை

பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை 27,600 மாணவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் டி சில்வா தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள 15 பல்கலைக்கழகங்களுக்கும் 18 உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் 25,200 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு உள்ளீர்கப்பட்டனர்.

இம்முறை பல்கலைக்கழக கற்கைநெறியை தொடர்வதற்கான விண்ணப்பப்படிவம் அடங்கிய கையேட்டை எதிர்வரும் 24 ஆம் திகதி மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (இ-5)

## யானை தாக்கியதில் விவசாயி பலி

அம்பாறை, அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் காட்டு யானை தாக்குதலுக்குள்ளான விவசாயி ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு 9ஆம் பிரிவை சேர்ந்த கமர்தீன் என்றழைக்கப்படும் அகமது லெவ்வை அப் துல் கபூர் (வயது 66) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

இவர் வயல் வேலைக்காக அம்பாறை- அக்கரைப் பற்று வ்தியிலிருந்து நான்காம் கட்டை வீதியூடாக சென்ற போது காட்டு யானை தாக்கியுள்ளதாக தெரியவருகிறது.(இ-5)

## விபத்தில் எட்டு பேர் படுகாயம்

யக்கல, அளுத்கமப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் எட்டு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்தும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றிருப்பதாகவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே காயமடைந்த நிலையில் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்களில் நான்கு குழந்தைகள் அடங்குவதாகவும் சிலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-5)

## மானை வேட்டையாடிய நபர் கைது

சட்ட விரோத துப்பாக்கியைப் பயன்படுத்தி மான் வேட்டையாடிய நபரொருவரை, மான் இறைச்சியுடன் நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மாவடிஓடைப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட இவரை, ஏறாவூர் நீதிமன்றில் ஆஜர்செய்யவுள்ளதாகக் கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்ஆர்பீ சேனநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஜயசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைவாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்தி ரத்னவின் மேற்பார்வையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கூட்டை அறுக்க முயன்றவர் பலி

சுமார் 100 அடி உயரமான மரத்திலிருந்த குளவிக் கூட்டை அறுக்கச்சென்றவர், குளவிகள் கொட்டுக்கு உள்ளாகி, மரத்திலிருந்து கீழே விழுந்து பலியான சம்பவமொன்று மத்துகம பட்டுமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், குளவிக்கூட்டை அறுப்பதற்காக தமான பிரதேசத்திலிருந்து வருகை தந்துள்ளார் என்று அறியமுடிகின்றது. (இ-5)

## சட்டவிரோதமான முறையில் அவுஸ். சென்ற 9 பேர் கைது

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக சென்ற 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நீர் கொழும்பு கடலில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 5 ஆண்களும் ஒரு பெண்ணும் இரண்டு சிறுவர்களும் ஒரு சிறுமியும் அடங்கியுள்ளனர்.குறித்த 9 சட்டவிரோத குடியேறிகள் நீர் கொழும்பு துறைமுகத்தில் இருந்து மீன்பிடிப்படகில் அவுஸ்திரேலியா நோக்கி சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# “துர்முகி வருஷ” இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

# நல்ல வாழ்க்கை உருவாக நாகசாந்தி செய்யுங்கள்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*நல்ல வாழ்க்கை உருவாக நாகசாந்தி செய்யுங்கள்!*

*யாரிடம் எப்படிக் காரியம் சாதிப்பது என்ற கலையை அறிந்த கடக இராசி நேயர்களே!*

மன்மத வருடம் முடிந்து துர்முகி வருடம் தொடங்கியிருக்கிறது. வரும் புத்தாண்டு செல்வாக்கை உயர்த்துமா?, செல்வவளம் பெருக்குமா?, நல்லவர்களின் நட்பால் தொழிலில் இலாபம் கிட்டுமா? பதவிகள் வந்து சேருமா? பாராட்டு மழையில் நனைய முடியுமா? அஷ்டமத்து கேது அலைச்சலைக் கொடுக்குமா அல்லது ஆதாயத்தைக் கொடுக்குமா...? என்று வருடம் பிறப்பதற்கு முன்பே சிந்தனைகள் தோன்றும்.

வருடம் பிறக்கும் பொழுது உலா வரும் கிரக நிலைகளைக் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். அது சாதகமான இடத்தில் இருந்தால் உங்களுக்கு சகல பாக்கியமும் கிடைக்கும். இல்லையேல் ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை குறையும். சோதனைகளை சாதனைகளாக்க வேண்டுமானால் தெய்வங்களை வணங்கிப் பரிகாரங்களையும் செய்ய வேண்டும்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை அன்று மாலை நேரத்திலேயே நிகழ்கின்றது. பிறக்கும் பொழுது திருவாதிரை நட்சத்திரம். அது ராகுவிற்குரிய நட்சத்திர மாகும். ராகுவோ உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்திலும், கேது 8 ஆம் இடத்திலும் சஞ்சரித்து சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கம் வலுவாக உள்ளது.

எனவே நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொண்டால்தான் வேகமான முன்னேற்றம் வந்து சேரும், தடைக்கற்களும் அகலும்.

அடியெடுத்து வைக்கும் ஆண்டின் கிழமை புதன் என்பதாலும், உங்கள் ராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன் என்பதாலும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். மேலும் வருடத் தொடக்க நாளில் உங்கள் ராசிநாதன் சந்திரன் பயண ஸ்தானம், விரய ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் இடமான 12 ஆம் இடத்தில சஞ்சரிக்கின்றார்.

எனவே, இந்தப் புத்தாண்டில் பயணங்கள் அதிகரிக்கும். ஊர் மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் என்று எதிர்பாராத மாற்றங்கள் திடீர் திடீரென்று வந்து சேரும். அதே நேரத்தில் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேது அடுத்த நிமிடமே விரயத்தைக் கொடுக்கலாம். எனவே உங்கள் இல்லத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதில் கவனம் செலுத்துவது நல்லது.

இரண்டில் குரு இருப்பதால் குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கொடுத்த வாக்கை கடைசி நேரத்திலாவது காப்பாற்றுவீர்கள். குழந்தைகளின் கல்யாண வாய்ப்புகள் முன்னிட்டு சீர்வரிசைகளை வாங்கி மகிழலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

6-க்கு அதிபதியான குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் உத்தியோகத்திற்காக முயற்சி செய்தவர்களுக்கு உடனடியாகக் கிடைத்துவிடும். ஆனால் போதுமான சம்பளம் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். பிரதோஷ காலத்தில் நந்தியை வழிபடுவதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி 17 வரை!**

இக்காலத்தில் உங்கள் கனவுகள் நனவாகக் கடவுள் வழிபாடு அதிகம் தேவை. மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாக தெரியும். இனத்தாரையும், இல்லத்தாரையும் அனுசரித்துக் கொள்வது நல்லது. பணப்பற்றாக்குறை அகலும் என்றாலும், செலவுகளை முன்னிட்டு பணம் வந்துசேரும்.

வீட்டைச் சீரமைக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் பணத்தை வைத்துக் கொண்டு காரியத்தைச் செய்ய இயலாது. காரியத்தை தொடங்கிவிட்டால் காசு, பணம் தானே வந்து சேரும். ஆசைகளுக்கு அணை போட வேண்டிய நேரமிது. சில சமயங்களில் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும்.

புத்திர ஸ்தானத்தில் செவ்வாய், சனி சேர்க்கை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம்தான். குறிப்பாக உங்கள் மேற்பார்வையில் அவர்களை வைத்துக்கொள்வது நல்லது. பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்கள் கருத்துகளுக்கு ஒத்து வருவார்களா என்பது சந்தேகம்தான்.




வாங்கிய பூமியை விற்பதில் தகராறுகள் ஏற்படலாம். வீடு கட்டும் முயற்சி பாதியிலேயே நிற்கும். விருப்ப ஓய்வில் வந்தவர்கள் தொழில் தொடங்குவதில் தாமதம் ஏற்படலாம். இக்காலத்தில் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

குரு வக்ர இயக்கத்தில் இருந்தாலும் கூட அதன் பார்வை பலத்தால் சில நல்ல மாற்றங்கள் உருவாகலாம். அந்த அடிப்படையில் 2 இல் சஞ்சரிக்கும் குருபகவானின் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே ரோக நிவர்த்திக்கு வழி பிறக்கும். தேகநலன் சீராகும்.

ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலையும் உருவாகும். அஷ்டம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்துசேரும். பழைய பணியாளர்களை விலக்கிவிட்டுப் புதியவர்களைச் சேர்த்து பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். குருவின் பார்வை பத்தாமிடத்தில் பதிவதால் தொழிலுக்கான மூலதனங்கள் கேட்ட இடத்தில் கிடைக்கும்.

வங்கிகளின் ஒத்துழைப்போடு வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வீர்கள். பஞ்சம ஸ்தானத்தில் பகை கிரகங்களின் சேர்க்கை இருப்பதால் ஆண்டின் தொடக்கத்தில் அதற்கான பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று தோஷ நிவர்த்தி வழிபாட்டை மேற்கொண்ட பிறகு, யோகத்தை வரவழைக்கக் கூடிய ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைப்பது நல்லது. வைத்தீஸ்வரன் கோவில் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**ஆடி 18 இல் தேடி வரும் வரன்கள்!**

துர்முகி வருடம் ஆடிமாதம் 18 ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்தக் குருப் பெயர்ச்சியின் விளைவாக வரன்கள் வாயில் தேடி வரப்போகின்றன. வளர்ச்சி கூடுதலாக இருக்கும். சிறிய பொறுப்பில் இருப்பவர்கள் பெரிய பொறுப்பிற்கு மாற்றப்படுவர். உடன் பிறப்புகளும், உறவினர்களும் ஒத்துழைப்புச் செய்வர்.

மூன்றாமிடத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் முன்னேற்றம் அதிகரிக்கப் போகின்றது. பொறுப்புகள் கூடப்போகின்றது. புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிடைக்கப் போகின்றது. மரியாதையும், மதிப்பும் உயரப் போகின்றது. மன்னர்களுக்கு இணையான பதவிகளும், மக்கட் செல்வங்களால் நன்மையும் கிடைக்கப் போகின்றது.

குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. குருவிற்கு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கே பலன் அதிகம். அந்த அடிப்படையில் 7 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் இல்லறம் நல்லறமாக அமையும். பிணக்குகள் மாறி இணக்கம் ஏற்படும்.

வாழ்க்கைத் துணைக்குச் செய்த உத்தியோக ஏற்பாடுகள் இப்பொழுது கைகூடும். வருமானம் அவர்கள் மூலமும் வந்துசேரும். கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் முன்னோர்களின் முறையான பங்கீடு கிடைக்கும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். பாகப்பிரிவினைகளில் இதுவரை பிரச்சினை செய்தவர்கள் இப்போது இனிமையாக நடந்து கொள்வர். தந்தை வழி உறவில் இருந்த தகராறுகள் அகலும். திறமை பளிச்சிடும்.


திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உரிமையோடு பழகும் உறவினர்களால் இனி உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

குருவின் பார்வை இலாப ஸ்தானத்தில் பதிவதால் தொழிலில் தனலாபம் அதிகரிக்கும். புது முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். அன்னிய தேசத்திலிருந்து வரும் அழைப்புகள் மூலம் சந்தோஷம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கம்பெனியின் மூலமாகவே கடல் தாண்டும் வாய்ப்பு உருவாகும். தொழில் புரிபவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து விருப்பம்போல் தொகை வரும். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும்.

பணியில் முன்னேற்றம் ஏற்படவும், பணத்தேவைகள் பூர்த்தியாகவும், பார்க்கும் குருவைப் பலப்படுத்துங்கள். திசைமாறிய தென்முகக் கடவுள் வழிபாடு உங்களுக்குத் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். அருகிலிருக்கும் சிவாலயத்தில் உள்ள குரு தட்சிணாமூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு வருவதும் நல்லது.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகும். உடனிருப்பவர்களை நம்பிச் செயற்பட முடியாது. ஸ்தல



வழிபாடுகள் அதிகரிக்கும். முன்கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. யாருக்கேனும் பணப்பொறுப்புகள் சொன்னால் சிக்கல்கள் ஏற்படும்.

சனியின் வக்ர காலத்தில் குடும்ப ஒற்றுமை குறையலாம். குடி இருக்கும் வீட்டாலும் பிரச்சினை வரும். கடன் சுமை கூடிக் கொண்டிருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். காவல் தெய்வங்களை வணங்குவது நல்லது. இக்காலத்தில் சனியின் சன்னிதிக்குச் சென்று எள் தீபம் ஏற்றி, வழிபாடு செய்வதோடு சனி கவசப் பாராயணமும் செய்வது நல்லது.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துர்முகி வருடத்தில் கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் ஆரோக்கியம் சீராகும். ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வேண்டியளவு பணம் வந்து கொண்டே இருக்கும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேர வாய்ப்பு கிட்டும்.

வக்ர குருவின் ஆதிக்கத்தால் புதிய உத்தியோக முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். என்னயிருந்தாலும் எட்டாமிடத்து கேது இடையூறு செய்யாமலிருக்க சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள். தன ஸ்தானத்து ராகு போதுமான அளவு பொருளாதாரத்தை விருத்தி செய்து கொடுக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவோடு உத்தியோக உயர்வு கிடைக்கலாம். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் மற்றும் பதவிகள் கிடைக்கும். பௌர்ணமி நாளில் கிரிவலம் வருவதன் மூலம் பலன்களை அதிகம் பெறலாம்.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

திங்கட்கிழமை தோறும் விரதமிருந்து தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வருவது பல்ன் தரும். மீனாட்சி சுந்தரேஸ்வரர் பதிகம் பாடி சிவனையும், உமையவளையும் வழிபட்டு வருவது நல்லது.

**நாளை சிம்மம்...**

# தமிழ் சினிமா வரலாறு

143

## எம்.ஜி.ஆரை சுப்பர் ஸ்டாராக உயர்த்திய "மலைக்கள்ளன்"

மலைக்கள்ளன் 1954 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி வெளிவந்த படம் மலைக்கள்ளன் எம்.ஜி. ஆரை சூப்பர் ஸ்டார் அந்தஸ்துக்கு உயர்த்தியது.

இந்தப் படம் கோவை பட்சிராஜா ஸ்ரூடியோ தயாரிப்பு. பட்சிராஜா அதிபர் எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு டைரக்ட் செய்தார். பொதுவாக பட்சிராஜா ஸ்ரூடியோ அதிக படங்களைத் தயாரிப்பதில்லை. ஆனால் தயாரிக்கும் படங்கள் சூப்பர் ஹிட் படங்களாக அமைவது வழக்கம். பாகவதர் நடித்த சிவகவி பி.யு.சின்னப்பா நடித்த ஆர்யமாலா. ஜகதலபிரதாபன் ஆகியவை பட்சிராஜா தயாரிப்புத்தான்.

அதேபோல மலைக்கள்ளனும் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

இந்தப் படம் தயாரானதில் ஒரு சுவையான பின்னணி உண்டு.

மலைக்கள்ளன் நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை எழுதிய நாவலாகும். அதைப் படமாக்க ஸ்ரீராமுலு நாயுடு முடிவு செய்ததும் அதற்கு வசனம் எழுத கருணாநிதியை அழைத்தார். பராசக்தி வெளிவந்து கருணாநிதி புகழேணியின் உச்சியில் இருந்த நேரம் அது. மனோகரா படத்துக்கு வசனம் எழுதிக் கொண்டிருந்தார்.

நாமக்கல் கவிஞர் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. ஆனால் அவர் காங்கிரஸ்காரர்.

அவர் கதைக்கு நான் வசனம் எழுதினால் இரு தரப்பு ரசிகர்களும் ஏற்றுக் கொள்வார்களா என்று அஞ்சுகிறேன் என்று கூறி வசனம் எழுத மறுத்து விட்டார்.




இந்த சமயத்தில் ஸ்ரீராமுலு நாயுடுவை எம்.ஜி.ஆர். சந்தித்தார். மலைக்கள்ளன் படத்துக்கு கலைஞர் வசனம் எழுத வேண்டும். நீங்கள் நடிக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் அவர் வசனம் எழுத மறுத்துவிட்டார். நீங்கள் அவரை சம்மதிக்க வைத்தால் நான் மலைக்கள்ளனை தயாரிக்கிறேன். நீங்கள் தான் கதாநாயகன் என்றார் ஸ்ரீரா முலு நாயுடு. அப் போது நடிகர் டி.பால சுப்பிரமணியமும் (வேலைக்காரியில் நடித்தவர்) உடன் இருந்தார்.

உடனே எம்.ஜி.ஆரும் பாலசுப்பிரமணியமும் கருணாநிதியைச் சந்தித்தனர். நாமக்கல் கவிஞர் காங்கிரஸ்காரரர் என்றாலும் மலைக்கள்ளனில் எவ்வித காட்சி பிரசாரமும் இல்லை. நல்ல விறுவிறுப்பான நாவல். நீங்கள் வசனம் எழுத வேண்டும். எனக்கும் இந்தப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்று எம்.ஜி.ஆர். கூறினார்.

(1952 வரை காங்கிரஸ் அனுதாபியாக இருந்த எம்.ஜி. ஆரை அண்ணாவிடம் நடிகர் டி.வி.நாரயணசாமி அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார். அண்ணாவால் கவரப்பட்ட எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் சேர்ந்தார். மலைக்கள்ளன் காலத்தில் அவர் தி.மு.க.வில் இருந்தார்). (தொடரும்)

# இறுகப்போகும் இந்தியாவின் கடிவாளம்



பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் சீனப் பயணம் உறுதி செய்யப்பட்ட பின்னர் கடந்த மாதம் 21 ஆம் திகதி சீன விமானப்படை அதிகாரிகள் ஆறு பேரைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று கொழும்புக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தது. சீன விமானப் படைத் தளபதிக்கு அடுத்த நிலையிலுள்ள சீன விமானப்படையின் அரசியல் ஆணையாளர் லெப். ஜெனரல் யூ சோங்பூ தலைமையிலான இந்தக் குழுவில் இரண்டு மேஜர் ஜெனரல்களும் இடம்பெற்றிருந்தனர்.

சீன விமானப்படை அதிகாரிகளின் பதவிநிலை ஏனைய நாடுகளில் உள்ளதைப் போன்றதல்ல. அது இராணுவத்தில் உள்ள பதவிநிலையை ஒத்தது. ஜெனரல் ஒருவர் தான் சீன விமானப் படைக்கு தலைமை தாங்குவார். அதற்கடுத்து அரசியல் ஆணையாளர் பதவியில் இருக்கும் லெப். ஜெனரல் ஒருவர் இருப்பார். அவ்வாறான நிலையில் உள்ளவரின் தலைமையிலான குழுவே கடந்த மாதம் கொழும்புக்கு வந்திருந்தது. ஜெப் ஜெனரல் யூ சோங்பூ சீன விமானப் படையின் அடுத்த தளபதியாக நியமிக்கப்படக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுபவர். அவ்வாறான முக்கியமான ஒருவரின் தலைமையிலான குழுவின் இலங்கைப் பயணம் பற்றிய எந்தத் தகவல்களும் முன்னரோ பின்னரோ வெளியிடப்படடிருக்கவில்லை.

பொதுவாகவே சீன பாதுகாப்பு அமைச்சு தமது நாட்டின் படைத் தளபதிகள் பாதுகாப்பு அதிகாரிகளின் வெளிநாட்டுப் பயணங்கள் சந்திப்புகள் போர் பயிற்சி பற்றிய தகவல்களை படங்களுடன் வெளியிடுவது வழக்கம். ஆனால் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த சீன விமானப்படையின் அரசியல் ஆணையாளர் லெப். ஜெனரல் யூ சோங்பூ தலைமையிலான சீன விமானப்படை அதிகாரிகள் குழு தொடர்பாக சீன பாதுகாப்பு அமைச்சு இதுவரை வாயைத் திறக்கவே இல்லை. அதுபோலவே இலங்கை பாதுகாப்பு அமைச்சும் இதுபற்றி எந்தத் தகவல்களையும் வெளியிடவில்லை.

ஆனால் கொழும்பு வந்த இந்தக் குழுவினர் கடந்த 21 ஆம் திகதி விமானப படை தலைமையகத்தின் விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ககன் புளத்சிங்கள் தலைமையிலான உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தனர். இதன்போது விமானப்படையின் தற்போதைய பலம் குறித்தும் எதிர்கால சவால்களை சமாளிப்பதற்கான திட்டங்கள் குறித்தும் இவர்கள் விமானப்படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர். ஆனாலும் சீன உயர்மட்டக் குழுவின் பயணத்தின் இரகசியம் வெளியே கசியவிடப்படவில்லை.

இலங்கை விமானப்படை புதிய போர் விமானங்களின் தொகுதியொன்றை வாங்கத் திட்டமிட்டுள்ள சூழ்நிலையில் இந்தப் பயணம் அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்க விடயம். ஏற்கனவே சீனாவினால் வடிவமைக்கப்பட்டு பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் ஜே எவ் 17 போர் விமானங்களின் மீது இலங்கை விமானப்படைக்கு ஒரு கண் இருந்து வந்தது. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீவ் இந்த ஆண்டின் தொடக்கத்தில் கொழும்பு வந்தபோது விமானக் கொளவனவு உடன்பாடு கையெழுத்திடத்திட்டமிடப்பட்டிருந்தது. நவாஸ் செரீப்பின் பயணத்தின் போது அவ்வாறான உடன்பாடு கையெழுத்திடப்பட்டதாகவும் கூட சில ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின.

ஆனால் அந்த விமானக் கொள்வனவு உடன்பாட்டை இந்தியா தடுத்து நிறுத்தியிருந்தது. அதற்குப் பதிலாக தாம் தயாரிக்கும் தேஜஸ் போர் விமானங்களைக் கொளவனவு செய்யுமாறும் அல்லது வேறு எந்த நாட்டிலும் தயாரிக்கப்பட்ட போர் விமானங்களை கொள்வனவு செய்யுமாறும் இந்தியத் தரப்பில் ஆலோசனைகள், அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாகவும் பரவலாகப் பேசப்பட்டது. இந்தியாவுக்கும் பாகிஸதானுக்கும் இடையில் ஏற்பட்ட இழுபறிகளை அடுத்து போர் விமானக் கொள்வனவு பற்றிய பேச்சுக்களை இலங்கை விமானப்படை கைவிட்டிருந்தது. இந்த நிலையில் சிறிது காலம் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் காணப்பட்ட மந்தநிலை சற்று தணியத் தொடங்கியிருந்த நிலையில் தான் சீன விமானபபடையின் அரசியல் ஆணையாளர் தலைமையிலான குழு கொழும்பு வந்திருந்தது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் சீனப் பயணத்தில் பாதுகாப்பு அமைச்சு சார்ந்த முக்கியமான எவரும் கலந்து கொள்ளவில்லை. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இராணுவ கடற்படை விமானப்படை தளபதிகள் யாரும் இந்தப் பயணத்தில் பங்கேற்றிருக்கவில்லை. இந்தப் பயணம் இடம்பெற்ற காலத்தில் கூட்டுப்படைகளின் தளபதியான எயார் சீவ் மார்ஷல் கோலித குணதிலக இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார். பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து பேசுவதை முடிந்த வரை தவிர்ப்பது இதன் முக்கிய நோக்கமாக இருக்கலாம். அதனால் தான் சீன விமானப்படையின் உயர்மட்டக் குழு கடந்த மாதம் கொழும்பு வந்திருக்கலாம். (தொடரும்)

சூரியனில் பயிர் விளைவதில்லை. ஆனால் சூரியனால் பயிர் விளைகிறது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# உழவில் தப்பியதை மறையால் மடக்குங்கள்

உழுது மறுத்தல் என்பது நிலத்தைப் பண்படுத்த விவசாயிகள் மேற்கொள்ளும் நடவடிக்கை.

புல்பூண்டுகளை அழிப்பது; நிலத்தைப் பதப்படுத்துவது; மேற்றரையில் இருக்கக்கூடிய பசளை மண்ணை நிலங்கீழ் கொண்டு செல்லுதல் என்ற செயற்பாட்டுக்காக உழுது மறுத்தல் இடம்பெறுவதுண்டு.

இதில் உழுதலின்போது புல் பூண்டுகள் அழியாமல்–அகப்படாமல் தப்பித்துக் கொள்வதும் உண்டு. இதற்காக உழுததை மறுத்து உழுதல் நடைபெறும்.

ஆக உழவில் தப்பியவை மறுத்தலில் சிக்கிக் கொள்ளும்.

இவ்வாறாக உழுதல், மறுத்தல் என்ற இரண்டு செயற்பாட்டு முறையை விவசாயிகள் பயன்படுத்துவது போல தமிழ் அரசியல் தலைமைகளும் உழுதல்; மறுத்தல் என்ற முறையை பின்பற்ற வேண்டிய தேவை உள்ளது.

உண்மையில் இலங்கை ஆட்சியாளர்களை மடக்கி தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக இருந்தால், அதற்கு சர்வதேச போர்க்குற்ற விசாரணை இடம்பெற்றிருக்க வேண்டும்.

எனினும் தமிழ் அரசியல் தலைமைகளின் இயலாமையும் பக்கசார்ப்பும் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை இல்லாமல் செய்தது.

மிகப்பெரும் இழப்புகளைச் சந்தித்த தமிழினத்துக்கு அந்தப் பேரிழப்பே விடிவைப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

எனினும் இழப்பைச் சந்திக்காதவர்கள் தமிழ் அரசியல் தலைமைப் பீடத்தில் இருந்ததால் அவர்கள் தமிழ் மக்கள் சந்தித்த இழப்பை ஒரு பொருட்டாக கருதாமல் அரசாங்கத்துடன் இணங்கிச் சென்று தமது சுயலாபத்தை அடைந்து கொள்வதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

இதனால் நாங்களே ஜெனிவாவுக்குச் சென்று எங்கள் தலையில் நெருப்பை அள்ளிக் கொட்டிக் கொண்டோம்.

என்ன செய்வது? எங்கள் தலைவிதி இப்படியாயிற்றே என்று ஏங்கி நின்ற எங்கள் மீது இரக்கம் கொண்ட கடவுள் நல்லாட்சியையும் சீனாவுடன் ஒப்பந்தம் செய்யவைத்துள்ளார்.

ஏற்கெனவே மகிந்த ராஜபக்ஷ அமெரிக்கா வுடனும் இந்தியாவுடனும் சேர்ந்து புலிகளுக்கு எதிரான போரை நடத்தி முடித்துவிட்டு சீனாவுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டார்.

மகிந்த ராஜபக்ஷ சீனாவுடன் உறவைக் கொண்டதால் தான் அமெரிக்காவும் இந்தியாவும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என முடிவு எடுத்தன.

இந்த முடிவின் காரணமாக ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மகிந்த ராஜபக்ஷவை விட ஒரு படி மேலே சென்று, சீனாவுடன் ஒப்பந்தங்களைச் செய்து அந்த நாட்டை தனது மிக நெருக்கமான நட்பாக்கிக் கொள்ள தலைப்பட்டனர்.

இஃது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் நிச்சயம் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்தையாவது தமிழ் அரசியல் தலைமை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆம், உழவில் விட்டதை மறையால் எடுப்பது போல இலங்கை–சீனா உறவை எமக்குச் சாதகமாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியாவினதும் அமெரிக்காவினதும் உதவியைப் பெறுவதே எங்களுக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு வாய்ப்பாகும்.

## சத்திய தரிசனம்



### நம்பிக்கை நெஞ்சில் வை

❖ உன் குற்றம் குறைகளை கண்டுபிடி. அடுத்தவரிடம் குணங்களைத் தேடு. அடுத்தவரிடமுள்ள குறைகளைத் தேடுவது பாவம். மிருக உணர்ச்சிகளை களைந்து விட்டால், தெய்வீக உணர்வுகள் பெருக்கெடுக்கும்.

❖ நீ வெளிச்சத்தில் இருக்கிறாய். ஒளி உன்னிடம் இருக்கிறது. நீயே ஒளியாகிறாய். உன் சொல், செயல், சிந்தனை, குணம், மனம் ஆகியவற்றை கவனி.

❖ நீ நம்பிக்கையை வளர்த்துக்கொள். அப்போதுதான் பிரச்சினைகள் வெள்ளம்போல வந்து தாக்கும்போது, பாறைபோல எதிர்த்துநிற்க இயலும். வெளியுலக வாழ்வின் மாறும் சூழ்நிலைகளை அந்த நம்பிக்கை மறக்கவைக்கும். ராமதாசர் சிறையிலிடப்பட்டபோது, அந்த நன்மைக்காக ராமருக்கு நன்றி கூறினார். ஏனென்றால், சிறையின் பெருஞ்சுவர்கள் கனிவு கூர்ந்து, வெளி உலகத்தை முழுமையாக விலக்கிவைத்து, ராமநாம சிந்தனையில் இடையூறின்றி தொடர வைத்தமைக்காக நன்றி பாராட்டினார்.

❖ ஞானக்கதவுகள் திறக்கட்டும். அறியாமைத்திரை கிழிபடட்டும். தெய்வீக பேரானந்தம் வீட்டுக்குள் செல்லட்டும். நிலையான நிம்மதியில் நீ இருப்பாய்.

❖ முன்னதாக புறப்படு. மெதுவாக ஓட்டு. பாதுகாப்பாய் போய்ச்சேர். உன் வாழ்வை ரோஜாப்பூவாக்கிக்கொள். அது "நறுமணம்" என்ற மௌனமொழியில் பேசட்டும்.

❖ தன்னலமற்ற தொண்டு என்னை மகிழச் செய்கிறது. அனைத்து ஒழுக்கங்களுக்கும் அடிப்படை தூய்மையான மனம்தான்.

❖ மிக விரும்பக்கூடிய செல்வம் இறையருளே. கண்ணை இமை காப்பதுபோல் அவன் உங்களை காப்பாற்றுவான். இதில் சந்தேகம் வேண்டாம். நல்லதையே கேள் நல்லதையே காண் நன்றே செய் நலமே எண்ணு; அப்போது தீயவை களையப்படும். இறையருள் உனக்கு இனிதே கிடைக்கும்.

# மின் உற்பத்தி நிலையங்களில் சீசீடிவி கமரா பொருத்தப்படும்

நாட்டில் இனிமேலும் மின் தடை ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் மின் உற்பத்தி நிலையங்களில் சீசீடிவி கமராக்களை பொறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் ஊடாக பாதுகாப்பு பலப்படுத்தப்படும். மேலும் இடைக்கால தீர்வுக்கு வழி வகை செய்யப்படும் என மின் வலு மற்றும் புதுப்பிக்கதக்க சக்திகள் அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அத்துடன் பெறுமதி சேர் வரி (வற் வரி) மற்றும் தேசததை கட்டியெழுப்பும் வரி விதிப்புகளின் போது மின்கட்டணம் இணைக்கப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்வலு மற்றும் புதுப்பிக்கதக்க சக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-12)

## ஹெரோயினுடன் நபரொருவர் கைது

வவுனியா தாண்டிக்குளத்தில் 40மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

குறித்த நபர் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து 40மில்லி கிராம் ஹேரோயினை ஒருவரிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்தபோது வவுனியா மன்னார் முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனடிப்படையில் குறித்த நபரிடம் சோதனை மேற்கொண்ட போது 40 மில்லி கிராம் ஹெரோயின் பொதியினை தன்வசம் வைத்திருந்த 45 வயதுடைய வவுனியா தேக்கவத்த பகுதியைச் சேர்ந்த மேற்படி நபரைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபர் விசாரணையின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாகவும் வவுனியா போதை ஒழிப்புப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-2,281)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. (செ)

# மாணவர்களை மீள் பரிசீலனை செய்யும் பணி நேற்று ஆரம்பம்

தேசிய கல்வியியற் கல்லூரியில் தொழிற்பயிற்சி நெறியை பயில்வதற்கு 2015 ஆம் ஆண்டுக்கான அனுமதிக்கு தகைமை பெற்ற மாணவர்களை மீள் பரிசீலனை செய்யும் பணி நேற்றைய தினம் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன்தொழில் பயிற்சி நெறி ஒன்றை ப்யில்வதற்கு தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான 2015 ஆம் ஆண்டு அனுமதியின் கீழ் 2013 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடையே 19 தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்ப் பட்டியல் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் ஆம் திகதி சகல பீடாதிபதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

2018 ஆம் ஆண்டு பாடசாலை முறைமைக்கு அமைவாக அந்தந்த பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆசிரியர் தேவையை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் இம்முறை பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதாவது புதிய நியமனம் பெற்ற ஆசிரியர்களின் சேவை வசதிகள் குறைபடாமல் தமது கடமைகளைச் செய்து கொண்டு போவதற்காக, கஷ்ட பிரதேசங்களில் ஆசிரியர் தேவைப்பாட்டை நிறைவு செய்யும் நோக்கத்தில் இம்முறை கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் தேவைப்பாடுகளுக்கு அமைய சேர்த்துக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட கொள்கையடிப்படையிலான தீர்மானத்தின் மேல் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் காணப்படும் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் தேவைப்பாடு தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

அந்த வகையில் தகைமை பெற்ற மாணவர்களை மீள் பரிசீலனை செய்யும் பணிகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி புதுமுக மாணவர்களை பதிவு செய்து உள்வாங்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** திருவையாறு, சாந்தபுரம், இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## சுகாதாரத் தொண்டர்களுக்கான

# ஆளணியை மத்திய அரசிடமிருந்து பெற நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சுகாதாரத் தொண்டர்களுக்கான ஆளணியை மத்திய அரசிடம் இருந்து பெறுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு வடமாகாண சுகாதார அமைச்சுக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் 33 பேருடைய நியமனம் வழங்கல் தொடர்பாக பலகாலமாக இழுபறிநிலை இருந்து வருகிறது.

இவர்கள் 15 வருடங்களுக்கு மேலாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் கடமையாற்றி பின்னர் 4 வருடங்களுக்கு மேலாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றியிருந்தனர். கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் இருந்து அவர்களுக்கு அமைய அடிப்படையிலான கால எல்லை முடிவுற்றுள்ளது. இருப்பினும் இவர்கள் தொடர்ந்து பணியாற்றிவருவதாகவும் தமக்குரிய நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கோரி பல்வேறு கவனயீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும் பல அதிகாரிகளிடத்தில் கோரிக்கையும் விடுத்திருந்தனர்.

அத்துடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பணியாற்றிய சுகாதார தொண்டர்கள் 33 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதுடன் அமைய அடிப்படையிலான காலநீடிப்பையும் உடனடியாக வழங்க வேண்டும் என கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் குறித்த வைத்தியசாலையில் சுகாதாரத் தொண்டர்களுக்கான ஆளணியை நிரப்புவதற்கான அனுமதியை மத்திய அரசிடம் இருந்து பெறுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு வடமாகாண சுகாதார அமைச்சுக்கு வடமாகாண முதலமைச்சர் அறிவித்துள்ளார். (இ-9)

## கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்–2016

# கீழ் பிரிவில் சென்றலைட்ஸ் முதலிடத்திற்கும் திருநெல்வேலி சி.சி.2-ம் இடத்துக்கும் தகுதி






கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கீழ்ப்பிரிவு இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை 16.04.2016 அன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்றது. இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணி, திருநெல்வேலி சி.சி. அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று சென்றலைட்ஸ் முதலாம் இடத்தினையும் திருநெல்வேலி சி.சி. அணி 2 ஆம் இடத்தினையும் கைப்பற்றியது. முதலில் துடுப்பெடுத்தாடிய திருநல்வேலி சி.சி.அணி 9 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றனர். ராஜ்-90, கோகுலன்-44, விதுண்-11, றஜின்தன் ஆட்டமிழக்காது 18, மயூரன்-01 , டார் வின்-04, ஜெனோஸன்-03 இலக் குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குத் தடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி 26.3 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 213 ஓட்டங்களை பெற்றனர். வினோத்-30, ஜேம்ஸ்-50, கிருபா-22, யனோஸன்-15, செல்ரன்-22, மயூரன் ஆட்டமிழக் காது 18, நிரோஜன்-22 ஓட்டங்களைப்பெற்றனர். பிருந்தா- 01, சதீஸ்-02, ராஜ்-02, விதுண்-02, லவகான்-01 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இன்று வியாழக்கிழமை மேல் பிரிவில் வெற்றி பெற்ற மானிப்பாய் பரிஸ் அணியும் திருநெல்வேலி சி.சி.அணியும் காலை 8.30.மணிக்கு எதிர்கொள்வர். பி.ப. ஒரு மணிக்கு சென் றலைட்ஸ் அணியும் கே. சி. சி.சி அணியும் எதிர்கொள்வர். (க)

# திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம் கொலின்ஸ் வெற்றி





(யாழ்ப்பாணம்)

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் திக்கம் இளைஞர் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதல்பாதி நேரத்தில் யங்கம்பன்ஸ் 1 கோலினை போட்டு முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் மேலும் ஒரு கோலை போட்டு 2-0 என்ற நிலையில் ஆதிக்கம் செலுத்தியது.

எனினும் தமது ஆட்ட வியூகத்தை மாற்றி புது வேகம் கொண்ட கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை அடுத்தடுத்து 2 கோல்களை போட்டு ஆட்டத்தை சமன் செய்தது. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி பெற்றது. (க)



குப்பிளான் விக்னேஸ்வர விளையாட்டுக்கழகத்தினால் நடத்துப்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்திடம் தோல்வி அடைந்து 2 ஆம் இடத்தை பெற்ற இணுவில் கலை ஒளி விள்ளயாட்டுக்கழக அணியினரை படத்தில் காணலாம்.

# வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் உதைபந்தாட்ட தொடர் அரையிறுதியில் சைனிங்ஸ்



(யாழ்ப்பாணம்)

உதயசூரியன் அணியையும் வெற்றிகொண்டு அரையிறுதிக்கு நுழைந்தது சைனிங்ஸ் அணி.

வல்வை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் றெயின்போ அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்ட சைனிங்ஸ் அணி 2 ஆவது போட்டியில் நேற்று முன் தினம் உதய சூரியன் அணியுடன் மோதியது.

இப்போட்டியில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று பி பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது சைனிங்ஸ் அணி. (க)

## மென்பந்தாட்டத்திற்கு விண்ணப்பிக்குக

Tube Tamil இணையத்தளம் நடத்தும் மாபெரும் மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

9 பேர் 8 பந்து பரிமாற்றத்தைக் கொண்ட மேற்படி போட்டி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

வெற்றி பெறும் அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக்கிண்ணமும் 2ஆம் இடத்தினைப் பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படும்.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (க)

# உலகின் சிறந்த விளையாட்டு வீரராக நேவாக் ஜோகோவிச்

உலகின் சிறந்த விளையாட்டு வீரராக நேவாக் ஜோகோவிச்சும், வீராங்கனையாக செரீனா வில்லியஸ்சும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

17ஆவது லாரெஸ் விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா ஜேர்மனி தலைநகர் பெர்லினில் நடைபெற்றது.

இதில் உலகின் நம்பர் வன் டென்னிஸ் வீரர் செர்பியாவின் நேவாக் ஜோகோவிச் இந்த ஆண்டுக்கான லாரெஸ் சிறந்த வீரருக்கான விருதைதட்டிச் சென்றார்.

இவர் ஏற்கனவே 2012, 2015 ஆம் ஆண்டுகளிலும் இந்த விருதை பெற்றிருக்கிறார்.

இதேபோல் கடந்த ஆண்டு 3 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றதோடு டென்னிஸ் உலகில் 'நம்பர் வன்' ராணியாக வலம் வரும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் சிறந்த வீராங்கனையாக தெரிவாகியுள்ளார், அவர் இந்த விருதை பெறுவது இது 3 ஆவது முறையாகும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தமிழ் அரசியல் கைதிகள் 12 பேருக்கு விளக்கமறியல்

தமிழ் அரசியல் கைதிகள் 12 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெலிக்கட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 12 பேர் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களின் விளக்கமறியல் மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது.

இதன் பிரகாரம், மே மாதம் 4 ஆம் திகதி வரை அரசியல் கைதிகள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன், அவர்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை தொடர்ந்தும் எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் பெண் ஒருவரும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-9)

# தீக்காயங்களுக்குள்ளான தம்பதியினரில் மனைவி மரணம்

மண்டைதீவுப் பகுதியில் குடும்பத்தகராறு காரணமாக மனைவி தீக்குளித்த போது, அத்தீயை அணைப்பதற்கு முயற்சி செய்த கணவனும் தீயில் எரிந்த நிலையில் இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டிருந்த நிலையில், மனைவி சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோசப் அன்ரனி மரியம்மா (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி வீட்டுக்கு சென்ற கணவன், மனைவியுடன் சண்டையிட்டுள்ளார். இதன்போது, மனைவி கோபமடைந்த நிலையில் தனக்கு தானே தீ மூட்டியுள்ளார்.

இதன்போது மனைவியை காப்பாற்ற முயற்சி செய்த கணவன் மீதும் தீ பரவியுள்ளது.

ஆபத்தான நிலையில் தீக்காயங்களுக்குள்ளான இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸாரால், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மனைவி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கணவரின் நிலையும் கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை இவ்விருவருக்கும் 3 பிள்ளைகள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உயிரிழந்த குடும்ப பெண்ணின் சடலமானது நேற்று மாலை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-30)

## பலரை கொலை...

நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

யாழில் சமீபகாலமாக சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்ற 2 குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தொடர்ச்சியாக 3 நாட்கள் ஆங்காங்கே சட்ட விரோத செயல்கள் இடம்பெற்று வந்துள்ளன.

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை ஆட்டோ ஒன்று அடித்து நொருக்கப்பட்டுள்ளது. ஆட்டோவுக்கு சொந்தமான மற்றொரு கும்பல் தொடர்ச்சியாக சில வீடுகளுக்கு சென்று வீட்டு கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளதுடன் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தும் பாணியிலும் நடந்து கொண்டது.

இந்த நிலையில் மேற்படி சம்பவத்திற்கு பதிலடி கொடுப்பதற்காக நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இணுவில் முதலி கோயிலின் முன்பக்க வீதியில் பாடசாலை மாணவர்கள் 12 பேர் அடங்கிய வாள்வெட்டு கும்பல் ஒன்று நின்றுள்ளது. அந்த இடத்தில் வைத்தே மற்றைய கும்பல் மீதுவாள்வெட்டு நடத்துவதற்கு நன்கு திட்டமிடப்பட்டதாக தெரிய வருகிறது.

அவ்வேளையில் யாழில் குற்றச்செயல்களை தடுப்பதற்காக சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபரால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களை சேர்ந்த 7 பேரைக் கொண்ட விசேட அணி மேற்குறித்த தகவலை அறிந்து சம்பவ இடத்துக்கு சென்றுள்ளது.

சந்தேகத்திற்கு இடமான முறையில் அங்கு நின்றிருந்தவர்களை கைது செய்ய முற்பட்டபோது அவர்கள் தப்பி யோடியுள்ளனர். அவர்களை விடாது துரத்தி சென்ற பொலிஸார் முதலில் 3 பேரை கைது செய்ததுடன் பின்னர் வெவ்வேறு இடங்களில் ஒளிந்திருந்த 6 பேரையும் கைதுசெய்தனர்.

கைதான நிலையிலேயே இவர்கள் அனைவரும் பாடசாலை மாணவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன் வாள், கத்தி, கைக்கோடரி போன்ற ஆயுதங்களை மோட்டார் சைக்கிளுக்குள் மிகவும் நுணுக்க மானமுறையில் வைக்கப்பட்ட நிலையில் அவற்றையும் இரும்பு கம்பிகளையும் சங்கிலிகளையும் அவர்களிடம் இருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் உடனடியாக ஒப் படைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நேற்றையதினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் விசாரணையின் போது இவர்கள் சமீப காலமாக தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்பதும் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் 9 பேரும் யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாயை சேர்ந்த பிரபல பாடசாலைகளில் (உயர் தரம் மற்றும் சாதாரண தரம்) கல்விகற்கும் மாணவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைதாகியவர்களின் தொலைபேசி உரையாடல்கள் மற்றும் குறுந் தகவல்களை வைத்தும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-9)

## கணவனை கொத்தி...

புதுகம பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் இடம் பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கூலித் தொழிலாளியான எஸ்.எஸ்.திசாநாயக்க (வயது 43) என்ற நபரே இவ்வாறு பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் தினமும் வீட்டிற்கு மதுபோதையில் வந்து மனைவியுடன் சண்டையிடுவதாகவும், நேற்றுமுன்தினமும் இவ்வாறு மதுபோதையில் சண்டையிடும்போதே இந்த கொலைச் சம்பவம் நடந்திருக்கலாம் எனவும் பிரதேச வாசிகள் பொலிஸாரிடம் தெரிவித்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை மீட்ட பொலிஸார் மரண விசாரணையை துரிதப்படுத்தியுள்ள நிலையில் குறித்த பெண்ணையும் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். (செ-2,281)

## தோல்விக்கு...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தேவையான வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொள்ளவும் ஹெலிக்கொப்டரில் கிராமத்திற்கு செல்லவும் தான் சந்தர்ப்பத்தை வழங்கியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் வகையில் மகிந்த ராஜபக்ஷ இந்த கருத்துக்களை ஊடகங்களிடம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த மேலும் தெரிவிக்கையில்,

நான் ஜனவரி 8ஆம் திகதி காலை ஹெலிகெப்டரில் செல்லும் போது தேர்தல் முடிவுகள் முற்றாக வெளியாகி இருக்கவில்லை தேர்தல் ஆணையாளர் தேர்தல் முடி வுகளை அறிவித்திருக்கவில்லை அப்போது பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை கண்டுபிடிக்க முடியாது இருந்தது.

இதனையடுத்து ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து விட்டு காலை ஆறு மணிக்கு நான் அலரி மாளிகையில் இருந்து வெளியேறினேன்.

அப்போது நானே நாட்டின் ஜனாதிபதி.

எனது பாதுகாப்பு படையினருடன் கொழும்பில் இருந்து வெளியேறும் போது நானே நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி.

ஜனாதிபதித் தேர்தல் தோல்விக்கு பின்னர் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க முயற்சித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றேன்.

இந்த குற்றச்சாட்டுக்கு பொலிஸ் மா அதிபர், முப்படை தளபதிகள் சாட்சியமளித்துள்ளனர்.

அப்படி நடந்திருந்தால், விசாரணை முடிவுகளை அறிவிக்க சொல்லுங்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு செல்லும் முன்னர் நாடாளுமன்றத்தில் அவரை சந்தித்து பேசும் போது, எனது பாதுகாப்பு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, பிரதமருடன் கலந்துரை யா னார்.

80ஆம் ஆண்டுகளில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத காலத்தில் எனக்கு இருந்த உயிர் அச்சுறுத்தல் காரணமாக அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவின் ஆலோசனைபடி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன எனக்கு இராணுவ பாதுகாப்பை வழங்கினார்.

அன்று முதல் அனைத்து அரசாங்கங்களும் அந்த இராணுவ பாதுகாப்பை நீக்காது தொடர்ந்தும் வழங்கி வந்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாண குடா நாட்டில் 89 வீதம் வாக்களிக்கப்பட்டிருந்ததால், நான் தோல்வியடைவேன் என்று அறிந்து கொண்டேன்.

சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களில் இந்தளவுக்கு வாக்களிப்பார்கள் என்று நான் நம்பியிருக்கவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## தாஜுடீன்...

களத்தினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வசீம் தாஜுடீனின் கொலை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்த விசாரணைகளின்போது சாட்சியங்களை மறைத்துள்ளதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபரான நாரஹேன்பிட்டி பொலிஸ நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (செ-12)

## மரண அறிவித்தல்

### திருமதி
### வரதராணி பூரணேஸ்வரன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதராணி பூரணேஸ்வரன் 20.04.2016 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கப்பிள்ளையார் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பூரணேஸ்வரனின் மனைவியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் ரஞ்சினியின் (ஜேர்மனி) பாசமிகு சகோதரியும் றஜீத்தன் (கஜன்-சிங்கப்பூர்), பூரண்யா (பூஜா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஜீவின் அன்பு மாமியாரும் துவாரகன் (ஜேர்மனி), கஸ்தூரி (ஜேர்மனி), கார்த்தீகன் (ஜேர்மனி) ஆகியோரின் ஆசை பெரிய தாயாரும் ஆவார். அன்னாரின் சமாதிக் கிரியைகள் இன்று 21.04.2016 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

*(தற்காலிக முகவரி)*

**29/25, உடையார் ஒழுங்கை,**
**ஐயனார் கோயிலடி,**
**தட்டாதெரு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:குடும்பத்தினர்**
**0771651711**

## கண்கண்ட சாட்சி...

எனவும் நீதவான் கடுமையாக எச்சரித்துள்ளார். நேற்றைய தினம் குறித்த வழக்கின் நிலைப்பாடுகள் தொடர்பில் பல விடயங்கள் வெளிக்கொணரப்பட்டன.

**11ஆம், 12ஆம் சந்தேக நபர்கள் ஆஜர்!**

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் கண்கண்ட சாட்சியங்கள் என கைது செய்யப்பட்டுள்ள 11ஆம்,12ஆம் சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் எம்.எல் றியால் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது சாட்சியங்கள் இருவரையும் எதிர்வரும் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். நேற்றைய வழக்கின் போது, குற்றப்புலனாய்வுத்துறையினர் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா (வயது 18) கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கூட்டு வன்புணர்வுக் குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் புடுகொலை செய்யப்பட்டிருந்தார். குறித்த கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இதில் சந்தேகநபர்கள் பத்து பேர் கைது செய்யப்பட்ட நிலையில் சில மாதங்கள் கழித்து சி.ஐ.டியினால் கூறப்பட்ட கண்கண்ட சாட்சியம் அனைவரிடத்தேயும் பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித்திருந்தது. இந்நிலையில குறித்து வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் ஏ.எம் றியால் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது புங்குடுதீவினை சேர்ந்தவர்களான உதயசூரியன் சுரேஸ்குமார், தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோர் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். குறித்த கொலை வழக்கு தொடர்பாக முன்னர் பத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர்கள் மீதான வழக்கு விசாரணை பிறிதொரு தினத்தில் நடைபெற்று வருகின்றதுடன் 11ஆம், 12ஆம் சந்தேக நபர்களது வழக்கு பிறிதாகவும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

**வாக்குமூலத்திற்கு ஆயத்தம்**

இவ்வழக்கில் நீதிமன்றின் முன் முன்னிலையாகி உள்ள 11ஆம்,12ஆம் சந்தேக நபர்களாக உதயசூரியன் சுரேஸ்கரன் மற்றும் தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர். இவர்களில் 12 ஆவது சந்தேக நபர் தற்போது (நேற்று) வாக்குமூலம் ஒன்றினை குறித்த வழக்கு விடயம் தொடர்பாக கூறவிருப்பதாக குற்றப்புலனாய்வுதுறை அதிகாரி நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

முற்பகல் நேரம் 11.30 மணிக்கு குறித்த வழக்கு விசாரணைக்காக அதாவது வாக்குமூலத்திற்கு நீதிமன்று தயாரானது. 12 ஆவது சந்தேக நபரான தர்மலிங்கம் ரவீந்திரன் எனும் சந்தேக நபர் கொலை தொடர்பான அனைத்து விடயங்களையும் அறிந்துள்ளதாகவும் அது தொடர்பாக மன்றில் முன்னிலையாகி (திறந்தவெளி) வாக்குமூலம் ஒன்றினை வழங்கவுள்ளதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவின் ஊடாக மன்றிற்கு தெரிவித்துள்ளார் என கூறிய நீதிபதி, இவ்விடயம் தொடர்பாக மன்றில் குற்றப்புலனாய்வு பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிகாட்டினார்.

**கண்கண்ட சாட்சியத்திற்கு கொலை பற்றி எதுவும் தெரியாது?**

பின்னர் கூண்டில் நின்ற 12 ஆவது சந்தேக நபரை நோக்கி நீதவான் நீதிமன்ற முன்னிலையில் (திறந்த) வாக்குமூலம் தர விரும்புகின்றீர்களா? என வினவினார். அதற்கு குறித்த சந்தேக நபர் இல்லை, எனக்கு எதுவும தெரியாது என நீதவானை நோக்கி கூறினார். அடுத்து மற்றுமொரு கேள்வி எழுப்பிய நீதவான்,

மேற்குறிப்பிட்ட வழக்கில் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 2ஆம்,3ஆம் சந்தேக நபர்களின் வேண்டுகோளிற்கு இணங்க நீங்கள் குறித்த மாணவி பாடசாலை செல்லும் வழிகளை கண்காணித்து தகவல் வழங்கினீரா? என கேட்டார். அதற்கு கூட்டில் நின்ற கண்கண்ட சாட்சியாக குற்றப்புலனாய்வு பிரிவினரால் கூறப்பட்ட சந்தேக நபர் தர்மலிங்கம் ரவீந்திரன் இல்லை என கூறினார்.

**நீதவான் கடும் உத்தரவு**

இதனால் சற்று கோபமடைந்த நீதவான் அமைதி ஆனார். மன்றில் சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. இதன்போது, குறித்த வழக்கில தொடர்பில் தொடர்பு பட்டவர்களை பாரபட்சம் இன்றி உடனடியாக கைது செய்து மன்றில் ஆஜர்ப்படுத்துமாறு குற்றப்புலனாய்வு துறைக்கு உத்தரவிட்ட நீதவான்,

மன்றில் ஆஜரான குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரியை நோக்கி இவ்வழக்கு தொடர்பாக இதுவரை எவ்வித முன்னேற்றமும் இல்லை. அத்துடன் இக்கொலை விடயங்களுடன் பிரபலமானவர்கள் பலர் தொடர்புபட்டுள்ளனர். சுவிஸ்குமார் தொடர்பிலான அறிக்கை கூட இன்னும் மன்றிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அடுத்த அமர்வில் அவற்றை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என கடும் தொனியில் உத்தரவிட்டார்.

பின்னர் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரியை நோக்கி எதிர்வரும் அமர்வுகளில் முன்னர் விசாரணைக்காக வழங்கப்பட்ட அனைத்து அறிக்கைகளையும் பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவு இட்டார். அத்துடன் குறித்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டது.

**பிடியாணை பிறப்பிக்கவும் மன்று தயங்காது!**

அடுத்து குறித்த வழக்கில் மரபணு பரிசோதனை (டி.என்.ஏ)அறிக்கைகள் மற்றும தேங்கிக் கிடக்கும் ஏனைய அறிக்கை தொடர பிலான பூரண விளக்கங்களை சம்பந்தப்பட்ட மரபணு பரிசோதனை நிறுவனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதுவும் அடுத்து வரும் வழக்கு விசாரணையின் போது குறித்த அறிக்கைகளுடன் அந்நிறுவன அதிகாரிகள் மன்றில் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் பிடியாணை உத்தரவு வழங்கப்படும் என குற்றப்புலனாய்வு அதிகாரியை பார்த்து நீதவான் எச்சரிக்கைத் தொனியில் தெரிவித்துள்ளார். (செ-4)

## ஊடக சுதந்திரத்தில்...

கிறது. அடுத்த இடங்களில் நெதர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் உள்ளன.

இலங்கை 141ஆவது இடத்தில் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கை 165 ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், தெற்காசிய நாடுகளான இந்தியா 133, ஆப்கானிஸ்தான் 120, நேபாளம் 105, பூட்டான் 95 என்பன இலங்கையை விட முன்னிலையில் உள்ளன. அமெரிக்கா 44 ஆவது இடத்திலும், ரஷ்யா 148ஆவது இடத்திலும், சீனா 176ஆவது இடத்திலும் உள்ளன.

துர்க்மெனிஸ்தான், வடகொரியா, எரித்ரியா ஆகிய நாடுகள் கடைசி மூன்று இடங்களைப பிடித்துள்ளன. (செ-12)

## புதிய பொலிஸ்...

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதன் பின்னர் நேற்று இதற்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (செ-12)

## வடக்கு வரும்...

விக்கப்படுகிறது.

கொழும்பில் செயற்படும் இராணுவப்புலனாய்வு பிரிவினரால் வடபகுதியில் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் கடத்தல் முறையிலான கைதுகள் அதிகரித்துள்ள பின்னணியில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்திலுள்ள பயண ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு முன் அனுமதியைப் பெறுமாறு கொழும்பிலுள்ள இராஜதந்திர பிரதிநிதிகளும் குறித்த தமிழருக்கு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவுக்கு வடக்கேயுள்ள பகுதிகள் மற்றும் வவுனியாவில் ஓமந்தையின் வடக்கு பகுதிக்கு செல்லும் வெளிநாட்டவர்கள் மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலம், இராணுவ விசாவை பெறவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த குறித்த பகுதிகளுக்கு தரை மார்க்கமாக செல்லும் பகுதிகளில் காணப்படும் இராணுவ சோதனைச் சாவடிகளில் வெளிநாட்டவர்களிடம் குறித்த இராணுவ விசா பரிசோதிக்கப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## துப்பாக்கிக்கு...

என அறிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தொடர்ந்தும் கூறுகையில்,

துப்பாக்கிகளை ஒப்படைக்காது அவற்றை தம்வசம் வைத்திருப்போர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் நிறுத்தப்படுவார்கள் எனவும் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 30வது பந்தியில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சட்டவிரோத ஆயுதங்களை கையளிக்கும் பொது மன்னிப்பு காலத்தை நாங்கள் அறிவித்துள்ளோம்.

அருகில் உள்ள மாவட்ட செயலகம், பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் பொலிஸ நிலையங்களில் சட்டவிரோத துப்பாக்கிகளை கையளிக்குமாறு நாம் கோரிக்கை விடுகின்றோம்.

குழல் துப்பாக்கி, அதற்கு ஈடான துப்பாக்கி அல்லது கட்டுத் துவக்கு போன்றவற்றை ஒப்படைக்கும் நபருக்கு 5 ஆயிரம் ரூபாயும், கைதுப்பாக்கி அல்லது ரிவோல்வர் துப்பாக்கியை கையளிக்கும் நபருக்கு 10 ஆயிரம் ரூபாயும், ரி 56 ரக துப்பாக்கியை கையளிக்கும் நபருக்கு 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிபபிட்டுள்ளார். (செ-12)





Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates shuld be self motivated and have the capabiity of setting own standards and be able to see that they areachieved and surpassed.

**Management Trainee / Assistant**

- Must be a graduate / HND holder in IT / Business Management
- Handing student records and certification process
- Maintain information with regard to class schedules and payment structures
- Fluency in English and Computer Literacy for communicating with internal and external divisions
- Prior experience in similar positions,customer care and front office operations willbe advantageous

**Program Head- Masters Program & PG Diplomas**

- Must be a graduate in IT with postgraduate qualification in Business with an experience in similar.
- Ability to lead the lecturing team and MBA and PGD programs
- Having experience in conducting lectures for HND & Bachelors level programs
- Would be responsible for achieving set targets, and assinging lecturers and other resourses. Sucessful candidates will receive a good figure home take salary and allowances.

**Lecturer - English / IT / Management**

- SLecturers should be graduates or have equivalent qualifications with similer field experience.
- Those without experience can be considered if you have excellent demonstration skills.
- Ability to explain concepts to others effectively
- Ability to handle a diverse range of subjects and programs from Diplomas to Degrees.

**Assistant Manager - Marketing**

- Possess a degree / HND in Marketing / Partly qualified in CIM / SLIM
- Possess excellent communication and interpersonal skills.
- Assist to achieve branch monthly targets and engage and monitoring promotional activites of branch
- An attarctive remuneration package and allowance will be given for sucessful candidates. You will work on targets an incentivised rewards scheme in addition to your salary.

(சி-4388)

If you think are the ideal that we are looking for you are entitled to a monthly salary along with commision which is the way above the industry standard to commensurate your qualifications and awaits along with exceptional opportunities for career development.

**HOW TO APPLY :**
Send us your Completed CV with in 10 Days of this advertisment including a covering letter introducing your self to **jaffna@esoft.lk** please state the position applied as the subject line of the email.

**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka. Email : jaffna@esoft.lk



**தவறிவிட்டது**

சிவபாலசுப்பிரமணியம் நிவாஸ்கரன் (நாகேந்திரபுரம்) 940592810V தே.அ.அட்டை, ராமச்சந்திரன் ஜெயாமலா (செருக்கன் குஞ்சுப்பரந்தன்) தே.அ.அட்டை 968480065V நிவாஸ்கரன்-JCB அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் பரந்தன் பகுதியில் தவறிவிட்டது. இதனை கண்டு எடுத்தவர்கள் கீழ்க் காணும் T.P இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்

**077 162 6775, 077 732 8794**



**ஈஸ்வரன் ரெடேர்ஸுக்கு வேலையாள் தேவை**

ஈஸ்வரன் பொதிகள் போக்குவரத்து சேவை,
ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கு

**✱ சாரதி** மற்றும் **✱ நடத்துநர்**

**ஈஸ்வரன் ரெடேர்ஸ்**

**✱ விற்பனையாளர் ✱ கணக்காளர்**

உடன் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலும் வேலை செய்யக் கூடியவர்கள்

**உடன் நேரில் வரவும்**

**இல.69,115 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-4394)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.